ப்ராபகத்தின் பாரம்யத்தை உபபாதி₃க்கிறார் (பெறுகைக்கு) என்று தொடங்கி. "ஶுசௌ தே₃ஶே" [கீ₃தை 6-11] "யுக்தாஹாரவிஹாரஸ்ய" [கீ₃தை 6-17] இத்யாதி₃ கீ₃தாஶ்லோகங்களைத் திருவுள்ளத்தேகொண்டு அருளிச்

---

a *திருவாய் 7-5-11* b *பெரு-திரு 7-8* c
d *பெரியதிரு 3-2-1* e *பெரியதிரு 3-2-2* f *மூன்-திருவ 76*
திருக்குறு 18 h *திருவாய் 2-3-8* i *திருச்சந்த 75* j *திருச்சந்த 63*
k *திருச்சந்த 76*

ரங்களிலே செய்து முடிக்கவேண்டின அந்த உபாயங்களி னுடைய அருமையையும். a மெய்குடியேறிக்குமைத்து. b வலித்தெற்றுகிற இந்த்₃ரியங்களினுடைய கொடுமையையும், c ஐம்புலன் கருதும் கருத்துளே மூட்டப்பட்டு d நின்றவா நில்லா நெஞ்சின் திண்மையையும். e செடியார். f கொடு வினைத் தூற்றுள்நின்று வழிதிகைத்தலமருகின்ற தன்னால் g அறுக்கலருத பழவினையின் கனத்தையும், h தன்னுள் கலவாததொன்றுமில்லையென்னும்படி. i முற்றுமாய் நின்று ஸர்வபூ₄தங்களையும் மரப்பாவையைப்போலே ஆட்டுகின்றவன் j வேறு வேறு ஞானமாய். உபாயாந்தரங்களுக்குள்ளீடாய் நிற்கிற நிலையையும். k 'என்னுருயிர் நீ' என்னும்படி தன்

செய்கிறுர் (உபாயங்களினுடைய அருமை) என்று. "யததோ ஹ்யபி" [2-60] "சஞ்சலம் ஹி மந:" [6-34] "அஸம்ஶயம் மஹாபா₃ஹோ" [6-35] இத்யாதி₃ கீ₃தா ஶ்லோகங்களைத் திருவுள்ளத்தேகொண்டு அருளிச்செய் கிறுர்(இந்த்₃ரியங்களினுடையகொடுமை, நெஞ்சின் திண்மை) என்று. கர்மங்களின் பா₃ஹுள்ய ப்ராப₃ல்யங்களை அருளிச் செய்கிறுர் (செடியார்) என்று தொடங்கி. "பூ₄மிராப:" [7-4] "ஸர்வஸ்ய சாஹம்" [16-15] "ஈஶ்வர: ஸர்வ பூ₄தாநாம்" [18-61] இத்யாதி₃ கீ₃தா வசநங்களைத் திரு வுள்ளத்தேகொண்டு அருளிச்செய்கிறுர் (தன்னுள்) இத் யாதி₃. "யதா₂ தா₃ருமயீ யோஷித் ந்ருத்யதே குஹகேச்ச₂யா। ஏவம் ஈஶ்வரதந்த்ரோऽயம் ஈஹதே ஸுக₂து₃:க₂யோ:" [பாகவதம் 10-54-12] என்ற ஸ்ரீபா₄க₃வத வசநத்தையுட் கொண்டருளிச்செய்கிறுர் (மரப்பாவை) என்று தொடங்கி. அர்ஜுநனுடைய மஹாமோகஹேதுநிரூபணம் ('என் னுருயிர் நீ' என்னும்படி) என்று தொடங்கி. (உனக்கு

---

a பெரியதிரு 7-7-9 b திருவாய் 7-1-10 c பெரியதிரு 1-1-8 d பெரியதிரு 1-1-4 e திருவாய் 2-3-9 f திருவாய் 3-2-9 g திருவாய் 3-2-4 h திருவாய் 2-5-3 i திருவாய் 7-6-2 j திருச்சந்த 2 k திருவாய் 7-6-3

கார்யத்தில் தானிழியவொண்ணுதபடி உபதே3சித்த ஸ்வரூப பாரதந்த்ர்யத்தையும் அநுஸந்தி4த்து 'நாம் இவ்வுபாயங்களைக் கொண்டு நம் விரோதி4களைக் கழித்து அவனைக் கிட்டுகை கூடாது; உனக்கு ருசித்ததொன்றைச்செய் என்றபோதே த3மயந்திக்குஅல்வழிகாட்டின நளனைப்போலே இவனும் நம்மை a நெறிகாட்டி நீக்கினனத்தனை' என்று வெறுத்து b 'என்னுடைக் கோவலனே — என்னுடை ஆருயிராரெங்ஙனே கொல் வந்தெய்துவர்', c 'என்னை நீ புறம்போக்கலுற்றால்', d 'என் நான் செய்கேன்' என்று கண்ணும் கண்ணீருமாய் கையில் வில்லோடே சோர்ந்துவிழ e மண்ணின்பாரம் நீக்குதற்குத் தான் f இருள்நாள் பிறந்த கார்யம் இவனைக்கொண்டு தலைக்கட்டவும், பரிப4வ காலத்தில் தூ3ரவாஸியான தன்னை நினைத்த g மைத்துனன்மார் காதலியை மயிர்முடிக்கும்படி, h பாரதப்போர் முடித்து த்3ரௌபதி3யினுடைய i அலக்கண் நூற்றுவர்தம் பெண்டிருமெய்தி நூலிழப்ப j வென்ற பரஞ்சுடராய்த் தன் ஸ்வரூபம் பெறவுமிருக்கிற க்ருஷ்ணன் 'இவனுக்கிவ்வளவும் பிறக்கப் பெற்றோமே' என்று உகந்து அர்ஜுநனைப் பார்த்து, 'கீழ்ச் சொன்ன உபாயங்களைவிட்டு என்னையே உபாயமாகப் பற்று: நானுன்னை விரோதி4களில் நின்றும் விடுவிக்கிறேன்; நீ சோகியாதே கொள் என்று ஸ்வரூபாநுரூபமான உபாயத்தை வெளியிடுகிறான்.

ருசித்ததொன்றைச் செய்) *என்று—இங்கே "யதே2ச்ச2ஸி ததா2 குரு" [18-63] என்ற கீ3தாவசநம் அநுஸந்தே4யம். "விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ரதோ2பஸ்த2 உபாவிஶத்" [1-47] இத்யாதி3 கீ3தா வசநத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார்* (கண்ணும் கண்ணீருமாய் கையில் வில்லோடே சோர்ந்து விழ) *என்று.*

---

a பெரியதிருவ 6 b திருவாய் 7-6-5 c திருவாய் 10-10-5
d திருவாய் 5-8-3 e திருவாய் 9-1-10 f பெரியதிரு 8-8-9
g பெரியாழ்திரு 4-9-6 h இராமா 51 i பெரியதிரு 2-3-6
j பெரியதிரு 1-8-4

சரமோபாயம்

இதொழிந்தவுபாயங்களிலே பரந்தது இப்பாகம் பிறந்தாலல்லது இவ்வுபாயம் வெளியிடலாகாமையாலே. a முத்திறத்து வாணியத்திரண்டிலொன்றி வழிகெட நடக்கிறவர்களையும் வாத்ஸல்யத்தின் மிகுதியாலே பித்தனைத்தொடரும் மாதாபிதாக்களைப்போலே மீட்கவிடம் பார்க்கிற ஶாஸ்த்ரம் b கோடிய மனத்தால் சினத்தொழில் புரிகிற நாஸ்திகனுக்கும் ஶத்ருவையழிக்கைக்கு அபி₄சாரமாகிற வழியைக் காட்டித் தன்னை விஶ்வஸிப்பித்து, த்₃ருஷ்டபே₄ாக₃த்துக்கு வழிகளை

(இதொழிந்த) இத்யாதி₃—"புறம்பு பிற(பர?)ந்தது எல்லாம் இவன் நெஞ்சைச் சோதிக்கைக்காக" என்றிறே உலகாரியன் அருளிச்செய்தது. அதாவது "யச்ச்₂ரேய: ஸ்யாந் நிஶ்சிதம் ப்₃ரூஹி தந்மே ஶிஷ்யஸ் தேऽஹம் ஶாதி₄ மாம் த்வாம் ப்ரபந்நம்" [2-7] என்ற இவனுக்கு உபாயோபதே₃ஶம் பண்ணத் தொடங்குகிறவளவிலே முதலிலே இத்தை உபதே₃ஶியாதே உபாயாந்தரங்களைப் பரக்க நின்று உபதே₃ஶித்ததெல்லாம், அவ்வளவிலே பர்யவஸித்துவிடுமோ? அவற்றினுடைய தோ₃ஷதர்₃ஶநத்தாலே இவ்வுபாயோபதே₃ஶத்துக்கு அதி₄காரியாமோ? என்று இவனுடைய ஹ்ருத₃யத்தைச் சோதிக்கைக்காக என்றபடி. (முத்திறத்து) இத்யாதி₃— "ஆற்றநல்ல வகை காட்டுமம்மான்" [திருவாய்4-5-5] என்றிறே ஆழ்வார் அருளிச்செய்தது. காட்டும் ப்ரகாரத்தை ஸத்₃ருஷ்டாந்தமாக ஆழ்வார் அருளிச்செய்கிறார் "எல்லாப்பொருளும் விரித்தானை" என்று. முதல் வார்த்தையிலே "த₄ர்மாத₄ர்மங்கள் இன்னது என்று அறிகிலேன். உனக்கு நான் ஶிஷ்யன்; ப்ரபந்நனை எனக்கு நல்லதைச் சொல்லுவாய்" என்ற அர்ஜுநனுக்கு—ப்ரக்ருதி புருஷவிவேகத்தைப் பிறப்பித்து, கர்மயோக₃த்தை விதி₄த்து, "அது தன்னை

a திருச்சந்த 68 b பெரியதிரு 1-6-5

யிட்டுத் தன்னோடிணக்கி. ஸ்வர்க3ாதி3 ப2லங்களுக்கு வழி காட்டி. தே3ஹாத்மாபி4மாநத்தைக் குலைத்து, ஆத்மபோ4க3த்துக்கு வழிகாட்டி, அந்யஶேஷத்வத்தையறுத்து, பரமாத்ம போ4க3த்துக்கு வழிகாட்டி, ஸ்வாதந்த்ர்யத்தைப் போக்கி, ஸ்வரூப பாரதந்த்ர்யத்தையுணர்த்தி, ஸித்3தோ4பாயத்திலே மூட்டுமாப்போலே. உ முந்தைத் தாய்தந்தையான இவனும்,

கர்த்ருத்வத்தைப் பொகட்டு ப2லாபி4ஸந்தி4ரஹிதமாக அநுஷ்டி2" என்று, அநந்தரம் ஆத்மஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, அநந்தரம் ப4க3வத்3ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து அநவரத பா4வநாரூபமான உபாஸநக்ரமத்தை அறிவித்து, இவ்வளவும் கொண்டுபோந்து இதின் அருமையை இவன் நெஞ்சிலே படுத்தி. இவை அஶக்யம் என்று ஶோகித்த வநந்தரம் "ஆகில் என்னைப்பற்றி நிர்ப4ரனாயிரு" என்று தலைக்கட்டுகிறான் என்றபடி. இவ்விடத்தில் "மஹாக்ரம:" [676] என்ற திருநாமத்தின் வ்யாக்2யாநமான "பரம துங்க3ம் ஆத்மாநம் பரமநிம்ந ப4வ பாதாளாத் ஜீவாந் ஆரோஹயத: மஹதீ ஆரோஹண ஸோபாநபர்வாநுபூர்வீ அஸ்ய இதி — மஹாக்ரம:| யதா2 ஜநநீ ஸ்தநந்த4யம் ஆதௌ3 ஸ்தந்யம் தா4பயதி, அத2 து3க்3த4ம், அத2 ஆஹாரம், அத2 போ4கா3ந் க3மயதி. ஏவமயம் ஸுக்ருதிநம் அத்3வேஷ ஆஸ்திக்ய ஆபி4முக்2ய அநுவர்த்தந ஜ்ஞாந ப4க்தி விஸ்ரம்ப4க்ரமேணைவ ப்ராபயதி, அப்4யுத்தா2நார்த்த2ம் ச2ந்தா3நுவர்த்தநார்த்த2ம் ச" என்ற பட்டர் பா4ஷ்யத்தையும், "தத்தத3தி4காரி விஶேஷாபேக்ஷயா புருஷார்த்த2த்வம் அஸ்தி....ப4க்ஷ்ய விஶேஷை: பா3லாநிவ ஶடா2ந் வஶீகர்த்தும்" என்ற வேதா3ர்த்த2 ஸங்க்3ரஹ தாத்பர்யதீ3பிகா வாக்யத்தையும். "தம: ப்ரசுராணாம் ரஜ: ப்ரசுராணாம் ஸத்வ ப்ரசுராணாம் ச வத்ஸலதரதயைவ ஹிதம் அவபோ3த4யந்தி வேதா3:" என்ற கீ3தா பா4ஷ்ய வாக்யத்தையும், "தாம் பூ3லாத்3யர்த்தி2ந: புத்ரா: பித்ராதி3பி4: தத்ப்ரதா3நாபா4வே

திருவாய் 5-7-7

a நெறியுள்ளி. b எல்லாப் பொருளும் விரிக்கிருனுகையாலே. பூசலுக்கேறிக் கொலைக்கஞ்சி விற்பொகட்டவனுக்குத் தன்னைப் பெறுகைக்குத் தானே உபாயமென்கை சேராதென்று புறம்பே பரந்து மோக்ஷாதி₄காரியாக்கி உபாயாந்தரங்களைக்கேட்டுக் கலங்கினவளவிலே இவனையுளனுக்குகைக்காகப் பரமரஹஸ்யத்தை வெளியிட்டருளினுன்.

சரமஶ்லோகார்த்தம் பரமரஹஸ்யம்

ஐந்தாம் வேதத்துக்கு உபநிஷத்தான ஸ்ரீ கீ₃தையிலே பரக்கச்சொல்லி கு₃ஹ்யதமமென்று தலைக்கட்டின ப₄க்தி யோக₃த்துக்கு மேலாக ஒரு வார்த்தையாகச் சொல்லி.

சௌர்யாதி₃நா ப்ரணஶ்யந்தி. தத₂ா அத்ராபி" என்ற தாத்பர்யசந்த்₃ரிகா வாக்யத்தையும், "ஶாஸ்த்ரமானது.... வத்ஸலதரமாகையாலே,....அவர்கள் அபதே₂ப்ரவ்ருத்தராய் நஶிக்கவிட க்ஷமமல்லாமையாலே....கொள்கொம்பிலே ஏற்றுகைக்குச் சுள்ளிக்கால் நாட்டுவாரோபாதி. இவ்வேர் முக₂ங்களாலே தன்னுடைய தாத்பர்யாம்ஶத்திலே ஆரோபிக்கைக்காக ப்ரவர்த்திப்பிக்கிறது" என்ற மாமுநிகளின் ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்₂யாந தி₃வ்யஸூக்தியையும் கண்டு கொள்வது. "வத்ஸலையான மாதா பிள்ளை பேகணியாமல் மண் தின்னவிட்டு ப்ரத்யௌஷத₄மிடுமாபோலே எவ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமான இவனும் ருசிக்கிடாக பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே. அதுதானும் ஆஸ்திக்ய விவேக அந்யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களையுண்டாக்கின வழி" [சூர்ணை 41] என்றிறே இவர் தாமும் ஆசார்ய ஹ்ருத₃யத்திலே அருளிச்செய்தது.

சரமஶ்லோகத்தின் பரமரஹஸ்யத்வத்தை அருளிச் செய்கிருர் (ஐந்தாம் வேதத்துக்கு) என்று தொடங்கி. "கோ₃விந்தே₃தி" ஶ்லோகார்த்தத்தை உட்கொண்டருளிச்

---

a திருவாய் 1-3-5 b திருவாய் 4-5-5

ஒருத்தியுடைய ஶரணாக3தி நம்மை நெஞ்சழித்ததென்கிற துணுக்கத்தோடே இதொருவருக்கும் சொல்லாதே கொள்ளென்று மறைத்தபோதே இது பரமகு3ஹ்யதமமென்று தோன்றும்.

சரமஶ்லோகார்த்த2 வைப4வஜ்ஞர்

இதினேற்ற மறிவார் a 'பரமன் பணித்த பணிவகை' b 'திறனுரை', c 'பெருவார்த்தை' d 'கிடக்குமுள்ளத்தெனக்கு' என்றிருக்கும் e வார்த்தையறிபவரிறே.

சரமஶ்லோகார்த்த2கௌ3ரவம்

இதுக்கு அதி4காரிகள் கிடையாமையாலே தேர்த்தட்டினையும் சேரபாண்டியனையும் சீர்தூக்கிச் செய்யவடுப்பதென்னென்று பலகால் நடந்து துவளப்பண்ணி, சூழறவு கொண்டு மாஸோபவாஸம்கொண்டு மூன்று தத்துக்குப் பிழைத்தால் சொல்லுகிறோமென்றும், இவனுக்குச் சொல்ல வெளிதுகாணென்றும், நம் முதலிகள் பேணிக்கொண்டு போருவர்கள்.

செய்கிறார் (ஒருத்தி) இத்யாதி—(துணுக்கத்தோடே) என்று— இங்கே, "மாலென்கோ" (3-4-6) என்கிறவிடத்து ஈடு அநுஸந்தேயம். "இத3ம் தே நாதபஸ்காய" [கீதை 18-67] என்றத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (இதொருவர்க்கும் சொல்லாதே கொள்) என்று. தே—த்வயா என்றபடி. சரமஶ்லோகார்த்த2வைப4வஜ்ஞர் இன்னார் என்பதனை அருளிச்செய்கிறார் (இதின் ஏற்றமறிவார்) இத்யாதி3. எம்பெருமானார் முதலியாண்டான் போன்ற மஹாசார்யர்கள் சரிதத்தையடியொற்றி அருளிச்செய்கிறார் (இதுக்கு) இத்யாதி. (மாஸோபவாஸம்) இத்யாதி—ஆழ்வான் சரித்ரத்திலே மாஸோபவாஸம் கொண்டதும், ஆண்டான் சரித்ரத்திலே மூன்று தத்து இத்யாதியும் ப்ரஸித்3த3ம். (மூன்று தத்து) வித்3யாத4நாபி4ஜாத்யமத3ங்கள். இது தனக்கு அதி4காரிகள் இன்னார் என்னுமத்தை

---

a திருவாய் 10-4-9 b முதல் திருவ 41 c நாச்சியார் திரு 11-10 d நான்முகன் திருவ 50 e திருவாய் 7-5-10 f திருவாய் 1-5-3 g திருவெழுகூற்றி 9

சரமஶ்லோகாதி₄காரிகள்

இதில் சொல்லுகிற அர்த்த₂ம் f எவ்வுயிர்க்குமாயிருந் ததேயாகிலும் g முக்குணத்திரண்டவையகற்றி, பரமஸாத்விக ஞய், a மாற்பால் மனஞ்சுழிப்ப ஸம்ஸாரத்தில் அருசியை யுடையனுய் b திருவரங்கர்தாம் பணித்ததென்றல் c 'துணி யேனினி' என்னும்படி வ்யவஸாயமுடையவனுய் நாஸ்திக னும் ஆஸ்திகநாஸ்திகனுமன்றிக்கே d ஒள்வாளுருவியெறியும் படி ஆஸ்திகாக்₃ரேஸரனுனவன் இதுக்கதி₄காரியாம்படியா யிருக்கும்.

சரமஶ்லோகவாக்யார்த்த₂ம்

கீழே உபாயங்களை வெளியிட்டு அவற்றுக்குள்ளீடாய் நின்று கார்யம் செய்கிற தன்னை உபாயமாகச் சொல்லி மேலோருபாயம் சொல்லாமையாலே சரமஶ்லோகமென்று

அருளிச்செய்கிருர் (இதில்) என்று தொடங்கி. "விட்டு சித்தர் கேட்டிருப்பர்" என்கிறபடியே அதி₄காரிகள் நியதர். அதாவது—"செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" [நாச்-திரு 11-10] என்று கரணத்ரயத்தாலும் செவ்வியராய் அதுதன்னை அர்த்த₂க்ரியா காரியாய்க்கொண்டு கோயிலிலே சாய்ந்தருளினவர்தாம். அர்ஜுநவ்யாஜத்தாலே திருத்தேர்த் தட்டிலே நின்று அருளிச்செய்த, யதா₂ர்த்த₂முமாய், சிரியது மாய் ஸுலப₄முமான "மாமேகம் ஶரணம் வ்ரஜ" [கீதை 18-66] என்கிற வார்த்தையைப் பெரியாழ்வார் கேட்டு, தந்நிஷ்ட₂ராயிருப்பர் என்கிறபடியே, இவ்வர்த்த₂த்துக்கு அதி₄காரிகள், இது கேட்டால் இதன்படியே நியதரா யிருக்குமவர்கள் என்றபடி.

சரமஶ்லோக நாம நிர்தே₃ஶஹேதுவை அருளிச்செய் கிருர் (கீழே) என்று தொடங்கி. சரமஶ்லோகத்தின்

---

a மூன்ரும் அந். 14 b நாச்சியார்திரு 11-10 c பெரியதிரு 11-8-8
b பெரியதிரு 6-2-4

பேரானவிது, இவ்வுபாயத்துக்கிவன் செய்யவேண்டுமவற்றையும், இவ்வுபாயம் இவனுக்குச் செய்யுமவற்றையும் சொல்லுகிறது.

ஶரண்ய ஶரணாக₃த க்ருத்யம்

விடுவித்துப் பற்றுவித்து விலக்கடியறுக்கை உபாய க்ருத்யம். விட்டுப்பற்றித் தேறியிருக்கை அதி₄காரிக்ருத்யம்.

அவதாரிகை முற்றிற்று.

பத₃விப₄ாகம்

பதினொரு பதமான இதில் முதல்பதம் விடப்படுகிற உபாயங்களைச் சொல்லுகிறது.

வாக்யார்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (இவ்வுபாயத்துக்கு) என்று தொடங்கி. பூர்வார்த்த₄த்தாலே அதி₄காரி க்ருத்யத்தையும் உத்தரார்த்த₄த்தாலே உபாய க்ருத்யத்தையும் அருளிச்செய்கிறான் என்றபடி. உத்தரார்த்த₄த்தில் அதி₄காரி க்ருத்யாம்ஶலேஶமும் கூறப்படுவதாகப் பரந்தரஹஸ்யம் கூறுகிறது.

ஶரண்ய ஶரணாக₃தக்ருத்யங்களை அருளிச்செய்கிறார் (விடுவித்து) என்று தொடங்கி.

அவதாரிகை முற்றிற்று.

மேலே பத₃ஸங்க்₂யா நிர்தே₃ஶ பூர்வகமாக ப்ரத₂ம பத₃ார்த்த₂த்தை அருளிச்செய்கிறார். (பதினொரு) இத்யாதி₃நா. பூர்வார்த்த₄ம் ஆறுபத₃ம். உத்தரார்த்த₄ம் ஐந்துபத₃ம் என்றபடி. இத்தால் ஸ்ரீந்ருஸிம்ஹ சரம ஶ்லோக வ்யாவ்ருத்தி சொல்லிற்றாய்த்து. அங்கு பூர்வார்த்த₄ம் ஐந்துபத₃ம், உத்தரார்த்த₄ம் ஆறுபத₃மிறே. "மாஶுச:" என்பது ஓரே பத₃ம் என்று இவர்கள் திருவுள்ளம். "ஸஹ" [பாணினி 2-1-4] இதியோக₃ விப₄ாக₃ாத் "பர்யபூ₄ஷயத்" இதிவத் ஸமாஸ:. "நாஸ்தீதி" ஏகம் பத₃ம் இதி வ்யவஹார த₃ர்ஶநாத் இதி தத₃ாஶய:— இத்யாதி₃ நிர்வாஹங்களைக் கண்டுகொள்வது.

"ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய" என்கிற ஶ்லோகத்திற்
சொல்லுகிற த4ர்மபரித்யாக3ம் ஶாஸ்த்ர விரோத4த்தாலும்
அநுஷ்டா2ந விரோத4த்தாலும் ப்ரகரண விரோத4த்தாலும்
அயுக்தம். "யாவஜ்ஜீவம் அக்3நிஹோத்ரம் ஜுஹுயாத்"
"த4ர்மேண பாபம் அபநுத3தி" "யஜ்ஞேந தா3நேந
தபஸாऽநாஶகேந ப்3ராஹ்மணா விவிதி3ஷந்தி" "ஸர்வா
பேக்ஷா ச யஜ்ஞாதி3 ஶ்ருதே: அஶ்வவத்" என்று ஜ்ஞாந
ஸாத4நமாகக் கர்மத்தை அவஶ்யாநுஷ்டே2யமாக ஓதுகை
யாலும், "ப்3ரஹ்மவிதா3ப்நோதி பரம்" "தமேவம் வித்3
வாந் அம்ருத இஹ ப4வதி" "ப்3ரஹ்ம வேத3 ப்3ரஹ்மைவ
ப4வதி" "ததா3 வித்3வாந் புண்யபாபே விதூ4ய நிரஞ்ஜந:
பரமம் ஸாம்யம் உபைதி" "அஸ்தி ப்3ரஹ்மேதி சேத்
வேத3 ஸந்தமேநம் ததோ விது3:" "வித்3யாத்து புருஷம்
பரம்" என்று வேத3நவிஶேஷத்தை ப4க3வத் ப்ராப்தி
ஸாத4நமாக விதி4க்கையாலும். "யமேவ ஏஷ வ்ருணுதே
தேந லப்4ய:. தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்
ஸ்வாம்" "ப4க்த்யா ச த்4ருத்யா ச ஸமாஹிதாத்மா ஜ்ஞாந
ஸ்வரூபம் பரிபஶ்யதீஹ" "ஹ்ருதா3 மநீஷா மநஸாऽ-
பி4க்லுப்த:" என்று ப்ராப்தி ஸாத4நமாக ப4க்தியை
விதி4க்கையாலும் இவற்றினுடைய த்யாக3ம் ஶாஸ்த்ர
விருத்த4ம். "ஶுகோ முக்த: வாமதே3வோ முக்த:" என்று
முக்தராக ஶ்ருதரான ஶுகாதி3களோடு, "உபமாந
மஶேஷாணாம் ஸாதூ4நாம்" என்னப்பிறந்த ப்ரஹ்லாத3நோடு,
ப4ரத ஸௌப4ரி ப்ரப்4ருதிகளான அல்லாத முமுக்ஷுக்
களோடு வாசியற கர்மஜ்ஞாநாதி3களையே அநுஷ்டி2த்துப்
போருகையாலே. த4ர்மத்யாக3விதி4 அநுஷ்டா2நத்தோடும்
விரோதி4க்கும். "நியதம் குரு கர்ம த்வம்" "கர்ம ஜ்யா
யோ ஹ்யகர்மண:" "கர்மணைவ ஹி ஸம்ஸித்3தி4ம் ஆஸ்த்
தி2தா ஜநகாத3ய:" "ஸர்வம் கர்மாகி2லம் பார்த்த2 ஜ்ஞாநே
பரிஸமாப்யதே" "ந ஹி ஜ்ஞாநேந ஸத்3ருஶம் பவித்ரமிஹ
வித்3யதே" "ஜ்ஞாநாக்3நி: ஸர்வகர்மாணி ப4ஸ்மஸாத்

குருதேऽர்ஜுந" "போ$_4$க்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக மஹேஶ்வரம் | ஸுஹ்ருத$_3$ம் ஸர்வபூ$_4$தாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்ச$_2$தி ||" "ப$_4$க்த்யா மாம் அபி$_4$ஜாநாதி" "ப$_4$க்த்யா த்வநந்யயா ஶக்ய:" "மத்$_3$ப$_4$க்திம் லப$_4$தே பராம்" "மந்மநா ப$_4$வ மத்$_3$ப$_4$க்த:" என்று ஸாத$_3$ரமாகவும் ஸவிஸ்தரமாகவும் பதினெட்டோத்தாலும் உபதி$_3$ஷ்டமான கர்மாதி$_3$ த்யாக$_3$ம் ப்ரகரணவிருத்$_3$த$_4$ம். ஆக ஶாஸ்த்ர விரோத$_4$மும் கர்மஜ்ஞாநாநுஷ்டா$_2$ந விரோத$_4$மும் ப்ரகரண விரோத$_4$மும் பிறக்கையாலே, இஶ்லோகத்துக்கு இவற்றோடே சேர்ந்தஅர்த்த$_2$ம் அர்த்த$_2$மாமத்தனை. விருத்$_3$த$_4$மான த்யாக$_3$ம் அர்த்த$_2$மாகமாட்டாது என்று சிலர் சொன்னார்கள்.

ஶாஸ்த்ர விரோத$_4$மும் அநுஷ்டா$_2$ந விரோத$_4$மும் ப்ரகரண விரோத$_4$மும் பிறவாமையாலே அது அர்த்த$_2$மாகாது. "யோ ப்$_3$ரஹ்மாணம் வித$_3$தா$_4$தி பூர்வம் யோ வை வேதா$_3$ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை| தம் ஹ தே$_3$வம் ஆத்மபு$_3$த்$_3$தி$_4$ ப்ரஸாத$_3$ம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்$_3$யே" "தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:" "ந்யாஸ இதி ப்$_3$ரஹ்ம(ா)" "தே$_3$வாநாம் கு$_3$ஹ்யம் ய ஏவம் வேத$_3$ ப்$_3$ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி" "தாவதா$_3$ர்த்தி: ததா$_2$ வாஞ்சா$_2$ தாவந்மோஹ: ததா$_2$ऽஸுக$_2$ம்| யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாக$_4$நாஶநம்||" "ஶரண்யம் ஶரணம் யாத: கோ$_3$விந்த$_3$ம் நாவஸீத$_3$தி" "வ்ருதை$_2$வ ப$_4$வதோ யாதா பூ$_4$யஸீ ஜந்ம ஸந்ததி:| தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய ஶரணம் வ்ரஜ||" "தேஷாம் து தபஸாம் ந்யாஸம் அதிரிக்தம் தப: ஶ்ருதம்" "ஸா தே$_3$வேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம்" என்று ஸர்வத$_4$ர்ம பரித்யாக$_3$ பூர்வகமாக அநுஷ்டே$_2$யையான ப்ரபத்தியையும் ப$_4$க$_3$வத் ப்ராப்திக்கு ஸ்வதந்த்ர ஸாத$_4$நமாக ஶாஸ்த்ரத்திலே விதி$_4$க்கையாலே ஶாஸ்த்ர விரோத$_4$மில்லை. கர்மஜ்ஞாநாதி$_3$ விதா$_4$யக ஶாஸ்த்ரங்களுக்கும் தத்த்யாக$_3$ பூர்வகமாக அநுஷ்டே$_2$யமான ப்ரபத்தியை விதி$_4$க்கிற ஶாஸ்த்ரங்களுக்கும்

விரோத₄ம் சொல்லப்பார்க்கில், ஶ்யேந விதி₄க்கும் காமநா விதி₄க்கும் மோக்ஷ விதி₄க்கும் அந்யோந்யம் விரோத₄ம் பிறக்கையாலும், ப்₃ரஹ்மசர்யம் க₃ார்ஹஸ்த்₂யம் வாநப்ர ஸ்த₂த₄ர்மம் பி₄க்ஷுத₄ர்மம் இவற்றுக்கு அந்யோந்யம் விரோத₄ம் பிறக்கையாலும். "ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூ₄தாநி" என்று பூ₄தஹிம்ஸையை நிஷேதி₄த்து வைத்து பஶுவிஶஸநத்தை விதி₄க்கையாலும், "யாவஜ்ஜீவம் அக்₃நி ஹோத்ரம் ஜுஹுயாத்" என்று அக்₃நிஹோத்ர ஹோமத்தை விதி₄த்து வைத்து, தத்த்யாக₃த்தை "ஸந்ந்யஸேத் ஸர்வ கர்மாணி" என்று விதி₄க்கையாலும், கர்மத்தை அநுஷ் டே₂யமாகச் சொல்லிவைத்து தத்த்யாக₃ பூர்வகமாக அநுஷ் டே₂யமான ஜ்ஞாநயோக₃த்தை விதி₄க்கையாலும், உபாஸ்ய வஸ்துவை "யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" என்று ஸகு₃ண மாகச் சொல்லிவைத்து "நிர்கு₃ணம்" "நிரஞ்ஜநம்" என்று கு₃ணவிது₄ரமாகச் சொல்லுகையாலும், ஆக இவ்வோ முக₂ங்களாலே ஆபாத₃ருஷ்டி₃ம் பரஸ்பர விருத்₃த₄மாகத் தோற்றுகையாலே ஶாஸ்த்ரமாக த்யாஜ்யமாம். இவ் விரோத₄த்தை, கு₃ணபே₄த₃த்தாலும், வர்ணபே₄த₃த்தாலும், ஆஶ்ரமபே₄த₃த்தாலும், பாகபே₄த₃த்தாலும், ருசிபே₄த₃த் தாலும், அதி₄காரிபே₄த₃த்தாலும் பிறக்கையாலே பரி ஹரிக்கிறவோபாதி இதுவும் அதி₄காரி பே₄த₃த்தாலே பரி ஹ்ருதம். ஆகையால் ஶாஸ்த்ர விரோத₄மில்லை. கர்ம ஜ்ஞாநாதி₃களை அநுஷ்டி₂த்த ஶுகாதி₃களோபாதி, கண்டு₃ முசுகுந்த₃ப்ரப்₄ருதிகளான முமுக்ஷுக்களோடு, து₃ர்வாஸஶ் ஶாபது₃ஷிதரான தே₃வதைகளோடு வாசியற ப்ரபத்த் யநுஷ்டா₂நம் பண்ணிப் ப₂லிக்கக் காண்கையாலே அநுஷ் டா₂ந விரோத₄மில்லை. கர்மயோகா₃தி₃களுக்கு ஸஹாநுஷ் டா₂நமில்லாமையாலே பாகக்ரமநிப₃ந்த₄நமான அதி₄காரி பே₄த₃த்தாலே பரிஹரிக்கிறவோபாதி இதுவும் அதி₄காரி பே₄த₃த்தாலே பரிஹ்ருதம். ஆகையாலே ப்ரகரண விரோத₄மில்லை.

ஸர்வ த4ர்ம ஶப்3தா3ர்த்த2ம்

(ஸர்வத4ர்மாந்) — எல்லா த4ர்மங்களையும். த4ர்மமென்கிறது — ஆசைப்பட்டவை கைபுகுருகைக்கு நல்வழியாக ஶாஸ்த்ரங்கள் சொல்லுமத்தை. இவ்விடத்தில் த4ர்மமென்கிறது—மோக்ஷமாகிற பெரியபேறு பெறுகைக்கு ஶாஸ்த்ரங்களிலும் பதினெட்டோத்திலும் சொல்லப்பட்ட கர்மஜ்ஞாநங்களைப் பரிகரமாகவுடைய ப4க்தியாகிற ஸாத4நத்தை.

ப்ரத2ம பத3த்தை உபாதா3நம் பண்ணுகிறார் (ஸர்வ த4ர்மாந்) *என்று. அதுக்கு அர்த்த2ம் அருளிச்செய்கிறார்* (எல்லா த4ர்மங்களையும்) *என்று. அது தான் த4ர்மபத3மும் ப3ஹுவசநமும் ஸர்வஶப்3த3முமாய் த்ரிப்ரகாரமாயிருக்கையாலே இம்மூன்றுக்கும் அர்த்த2மருளிச் செய்வதாக ப்ரத2மம் த4ர்மலக்ஷணத்தை அருளிச்செய்கிறார்* (த4ர்மமென்கிறது) *என்று தொடங்கி. இங்குள்ள த4ர்மஶப்3த3ம் த4ர்மஸாமாந்ய பரமன்று. த4ர்மவிஶேஷபரம் என்று அருளிச்செய்கிறார்* (இவ்விடத்தில்) *இத்யாதி3நா. ப2ல ஸாத4ந த4ர்மந்தான் "த4ர்ம" "பரத4ர்ம" "பரமத4ர்ம" என்கிற பே4த3த்தாலே மூன்று வகைப்பட்டிருக்கும். அதில் அத4ர்மவ்யாவ்ருத்தமான ஸ்வர்க்கா3தி3 க்ஷுத்3ர புருஷார்த்த2ஸாத4நம் த4ர்மமாகிறது. பரத4ர்மமாகிறது—விமோசகமாகையாலே ப3ந்த4கமானதிற்காட்டில் விலக்ஷணமான பரமபுருஷார்த்த2 லக்ஷண மோக்ஷஸாத4நம். பரமத4ர்மமாகிறது — த4ர்மம் போலே க்ஷுத்3ரபுருஷார்த்த2த்தையே ஸாதி4த்தல், பர த4ர்மம்போலே சேதந யத்ந ஸாத்4யமாதலாகையன்றிக்கே, ஸித்3த4மாகையாலும் பரமப்ரயோஜந ஸாத4நமாகையாலும், தனக்கவ்வருகில்லாத ப4க3வத்3விஷயம். இந்த த4ர்ம ஶப்3த3த்துக்கு இவை மூன்றும் அர்த்த2மேயாகிலும் இப்போது பரத4ர்மத்திலே நோக்காகக்கடவது. இங்ஙன் ஓதுக்கித் தருவார் ஆரென்னில்: அடியிலே முமுக்ஷுவான போதே க்ஷுத்3ர ப2ல ஸாத4நமான த4ர்மம் கழிகையாலும், பரமத4ர்மத்தை கோ3ப3லீவர்த3 ந்யாயத்தாலே மேலே*

‘த$_4$ர்மாந்’ என்கிற ப$_3$ஹூவசனம்— a ‘அறமுயல் ஞானச் சமயிகள் பேசும் வித்$_3$யாபே$_4$த$_3$ங்கள், b ‘ஆணொப்பாரி வன்னேரில்லை’ என்கிற புருஷோத்தம வித்$_3$யை, c பிறவியஞ் சிறையறுக்கும் d நிலைவரம்பில்லாத அவதார ரஹஸ்யஜ்ஞாநம், e ‘நற்பாலயோத்தி’ தொடக்கமான க்ஷேத்ரவாஸம், f ‘பாடீர் அவன் நாமம்’ என்கிற ஸங்கீர்த்தநம், g ‘கடைத்தலை சீய்க்கை, h மாகந்த நீர்கொண்டு தூவிவலம் செய்கை, i பூவிற்புகையும் விளக்கும் சாந்தமும் நீரும்கொண்டு j பூசனை செய்கை தொடக்கமாக ஸாத$_4$நபு$_3$த்$_3$தி$_4$யோடே செய்யுமவற்றைக் காட்டுகிறது. k ‘நெறியெல்லா மெடுத் துரைத்த’ என்கையாலே அவையும் தனித்தனியே ஸாத$_4$ந மாயிருக்குமிறே. ‘ஸர்வ’ஶப்$_3$த$_3$ம்— யஜ்ஞம், தா$_3$நம், தபஸ், தீர்த்த$_2$ஸேவை முதலானவை. கர்மயோக்$_3$யதையுண்டாம்படி ஶூத்$_3$தி$_4$யை விளைக்கும் l ஓதியுருவெண்ணும் அந்தி, m ஐந்து வேள்வி தொடக்கமானவற்றைச் சொல்லுகிறது. த$_4$ர்மத்திலே சொருகாமல் இவற்றை ஸர்வஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகத் தனித்துச் சொல்லுகிறது — ப்ரபத்திக்கு யோக்$_3$யதை தேட வேண்டா. இவனையும் இவனுடைய ஸ்த்ரீயையும்போலே

ஸ்வீகார்யமாக விஶேஷிக்கையாலும், த்யாஜ்யதயா பர த$_4$ர்மத்தையே உபாத$_3$ாநம் பண்ணுகிறது.

ப$_3$ஹூவசநார்த்த$_2$த்தை அருளிச்செய்கிறார்—(த$_4$ாமாந் என்கிற) *இத்யாதி$_3$நா. ஸர்வஶப்$_3$த$_3$ார்த்த$_2$த்தை அருளிச் செய்கிறார்* (ஸர்வ ஶப்$_3$த$_3$ம்) *என்று. ப்ரபத்தியின் தே$_3$ஶ காலாதி$_4$காரி ப$_2$ல ப்ரகார நியமாபா$_4$வ வைஶிஷ்ட்யத்தைப் பற்ற அருளிச்செய்கிறார்*— (ப்ரபத்திக்கு) *என்று தொடங்கி.* (இவன்)—*அர்ஜுநன்.* (இவன் ஸ்த்ரீ)—*த்$_3$ரௌபதி$_3$.*

---

a திருவிருத்தம் 44 b பெரியாழ்திரு 1-1-3 c திருவாய் 1-3-11
d திருவாய் 1-3-2 e திருவாய் 7-5-1 f திருவாய் 10-5-5
g திருவாய் 10-2-7 h திருவாய் 7-10-2 i திருவாய் 5-2-9
j திருவாய் 10-2-4 k திருவாய் 4-8-6 l முதல்திருவ 33
m

நீசர்நடுவே கேட்கவும் அநுஷ்டி₂க்கவுமாய், a குலங்களாயவிரி ரண்டில் பிறவாதாரும் இதிலே அந்வயிக்கலாமென்று தேறுகைக்காக. முத்து விளக்கி, மூழ்கி, மூக்குப் புதைத்து, கிழக்குநோக்கிக் கும்பிட்டு, கீழ்மேலாகப் புறப்படுத்து, நாளெண்ணி, குறுவிழிக்கொண்டு, ஸாத₄நாந்தரங்களிலே நினைவாய்க் கிடந்ததிறே. இவையொன்றும் செய்யாதே ஶரணாக₃தனை b இக்கரையேறினவன் உபதே₃ஶிக்கக்கேட்டு, ஶரணாக₃தரக்ஷணம் பண்ணின குலத்திலே பிறந்து, உறவை யுட்படக் கொண்டாடுகிறவர்க்கு ப்ரபத்தி பழுதுபோய் அக் கரைப்படவொண்ணாதொழிந்தது. நன்மை தீமைகள் தேடவும் பொகடவும் வேண்டா. இவை விலக்கும் பற்றுசுமாயிருக்கு மென்றிருக்கையே அதி₄காரம்.

இவர்களிருவரும் ப்ரபத்தி ஶ்ரவணாநுஷ்டா₂நகர்த்தாக்க ளிறே. "ஶாத்₃த₄னுக்கு அஶாத்₃தி₄ ஸம்பாதி₃க்கவேண்டா, அஶாத்₃த₄னுக்கு ஶாத்₃தி₄ ஸம்பாதி₃க்கவேண்டா. இருந்த படியே அதி₄காரியாமித்தனை" என்கிற ஸத்ஸம்ப்ரதா₃ய நிஷ்கர்ஷம் நிரூபிதமாயிற்று. இவ்விடத்தில், வேல்வெட்டிப் பிள்ளை நம்பிள்ளை ஸம்வாத₃த்தை அநுஸந்தி₄ப்பது. "மன முடையீர்" என்கிற ஶ்ரத்₃தை₄யே யமைந்த மர்மஸ்பர்ஶிக்கு நானும் நமரும் என்னும்படி ஸர்வரும் அதி₄காரிகள். "போதுவீர்" என்றிறே அதி₄காரத்தை ஆண்டாள் அறுதி யிட்டது. (நன்மை தீமைகள்) இத்யாதி—நன்மை தேட வேண்டா. அது விலக்கு. தீமை பொகடவேண்டா. அது பற்றுசு என்றபடி. தோ₃ஷத்தையும் கு₃ணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாதவளவன்றிக்கே அங்கீ₃காரத்துக்கு அவைதன்னையே பச்சையாக்குகையிறே ஶேஷித₃ம்பதி களின் ஸாத₄ரண வைப₄வம். பாபத்தோடேவரிலும் அமை யும் என்றான் சக்ரவர்த்தித் திருமகன். புண்ணியத்தைப் பொகட்டுவா என்றான் ஸ்ரீகிருஷ்ணன். ஆக, ப₄க₃வானுடைய நிரபேக்ஷோபாயத்வம் நிரூபிக்கப்பட்டதாகிறது.

---

a *திருச்சந்த 90* b *பெரியாழ்திரு 5-3-7*

"பரித்யஜ்ய" பதா3ர்த்த2ம்

'பரித்யஜ்ய' என்று இந்தவுபாயங்களை விடும்படியைச் சொல்லுகிறது. த்யாக3மாவது விடுகை. பரித்யாக3மாவது பற்றறவிடுகை. உபாயமல்லாதவற்றை உபாயமாக நினைத்தோமென்று சிப்பியை வெள்ளியென்றெடுத்தவன் லஜ்ஜித்துப் பொகடுமாபோலே புகுந்துபோனமை தெரியாதபடி விடவேணும். பித்தேறினாலும் அவற்றில் நினைவு செல்லாதபடி. விட்டோமென்கிற நினைவையுங்கூட விடச்சொன்னபடி. த4ர்மதே3வதை பாதகமென்பது, ஆழ்வார் a 'எய்தக் கூவுதலாவதே' என்று b புலையறங்களோபாதியாகிற இத்தை. த4ர்மமென்று விடச் சொல்லுகிறது—பூசலை அத4ர்மமென்றும், இவற்றை த4ர்மமென்றும் ப்4ரமித்த அர்ஜுநன் நினைவாலே. நிஷித்3த4ம் செய்கை அஶக்தியாலன்றிக்கே. ஆகாதேயென்று

அநந்தரம் த்3விதீயபதா3ர்த்த2ம் அருளிச்செய்கிறார் (பரித்யஜ்ய) என்று தொடங்கி. இதுவும்—த்யாக3மும் ல்யப்பும் உபஸர்க3முமாய் த்ரிப்ரகாரமாயிருக்கையாலே, அதில் த்யாக3த்தை முந்துற அருளிச்செய்கிறார் (த்யாக3மாவது) என்று தொடங்கி. உபஸர்க்கா3ர்த்த2த்தை அருளிச்செய்கிறார் (பரித்யாக3மாவது) என்று தொடங்கி. த்யாக3வேஷத்தை அருளிச்செய்கிறார் (உபாயமல்லாத) என்று தொடங்கி. "அத2 பாதகபீ4தஸ் த்வம்" என்ற த4ர்மதே3வதாவசனத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (த4ர்மதே3வதை) இத்யாதி3. "த4ர்மாத4ர்ம தி4யாகுலம்" என்ற ஆளவந்தார் திருவாக்கைத் திருவுள்ளத்தேகொண்டு அருளிச்செய்கிறார் (பூசலை) இத்யாதி3. 'ப்ராபகாந்தர பரித்யாக3த்துக்கு அஜ்ஞாநாஶக்திகளன்று ப்ரத4ாநஹேது' என்றத்தைத் திருவுள்ளத்தேகொண்டு ஸத்3ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (நிஷித்3த4ம்) என்று தொடங்கி. (ஆகாதே

---

a திருவாய் 5-7-5 b திருமாலை 7

விடுமாபோலே. உபாயாந்தரங்களை ஸ்வரூபவிருத்$_3$த$_4$மென்றிறே—தபோத$_4$நரான ரிஷிகளும், நெருப்பை நீராக்குகிற தேஜஸ்ஸையுடைய பிராட்டியும், ஸ்வரக்ஷணத்தில் இழியாதே க$_3$ர்ப்ப$_4$த்திலிருப்பாரைப்போலேயிருந்தது. நாண்தழும்பு வால்

யென்று) என்று. அப்ராப்தம் என்றபடி. இத்தால் "நித்யமான ஆத்மஸ்வரூபத்துக்கு இவை நாஶகங்களாய்க் கொண்டு ஸ்வரூபவிருத்$_3$த$_4$ங்கள் என்னவொண்ணாது......... ஆகையால் ஆத்மஸ்வரூபத்தைப்பற்ற உபாஸநாதி$_3$களுக்கு நாஶகத்வ அஸம்ப$_4$விதத்வ அநர்த்த$_2$ாவஹத்வங்களில்லாமையாலே ஒருபடியாலும் ஸ்வரூபவிரோத$_4$ப்ரஸங்க$_3$மில்லை" என்கிற பக்ஷம் நிரஸ்தம். (அப்ராப்தம்)—ப$_4$க$_3$வத$_3$த்யந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்றபடி; ஸ்வரூபவிரோத$_4$ம் என்கிறவிடத்தில் ஸ்வரூபஶப்$_3$த$_3$ம் த$_4$ர்மியைக் குறிக்குமதல்ல; அஸாத$_4$ாரண த$_4$ர்மத்தைக் குறிக்கும் என்றபடி. "ஶீதோ ப$_4$வ" என்ற பிராட்டி "நஷ்டோ ப$_4$வ" என்னாதது அப்ராப்தியைக் கணிசித்திறே. இங்கே, "அர்த்த$_4$ராத்ரியிலே தனிவழி போகாநிற்க, து$_3$ஷ்டம்ருக$_3$ங்களாலே மிடைந்ததொரு காட்டிலே முன்னடி தோற்றாதபடி இருண்டு, வர்ஷமும் இடியும் உண்டாய்க் கண்ணுக்குள்ளே கொள்ளியை வீசினாற்போல் மின்னிக்கொண்டு வாராநிற்க, அவ்வவஸ்தை$_2$யில் திருநாமோச்சாரணம் பண்ணுதொழிகை ப்ரபந்நலக்ஷணம்" என்ற ப$_4$ட்டர் ஸம்வாதம் (வார்த்தாமாலை 417) அநுஸந்தே$_4$யம். "க$_3$ர்ப$_4$பூ$_4$தா: தபோத$_4$நா:" என்றத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (தபோத$_4$நரான) இத்யாதி$_3$. "ஶீதோ ப$_4$வ" என்றத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (நெருப்பை) இத்யாதி$_3$. கீ$_3$தை கேட்ட அர்ஜுநன்கலக்கத்தை உபபாதி$_3$க்கிறார் (நாண்) இத்யாதி$_3$. சரமஶ்லோகத்தில் கழிக்கிற ஶோகம் யதா$_2$வஸ்தி$_2$த ஆத்மோபதே$_3$ஶாதி$_3$களாலே கழிந்த ப$_3$ந்து$_4$வதா$_4$தி$_3$நிமித்தமான பழைய

தீவிளையாத விடவாயும் வல்வாயுமேறி. பரலோகங்களிலே சென்று. படைத்துணைசெய்து. அரிய தபஸ்ஸுக்களைச் செய்து, வெருட்டுவார் சபையிலே வில்லிட்டடித்து. ஊர் வசியை முறை கூறுகிறவன் கர்மஜ்ஞாநங்களிலிழியமாட்டாமை யன்றே கலங்குகிறது; ஸ்வரூப பாரதந்த்ர்யத்தைக் கேட்ட படியாலேயிறே. தன்னை ராஜமஹிஷியென்றறிந்தவள்—உதிர் நெல் பொறுக்கவும். கொட்டை நூற்கவும், குடம் சுமக்கவும் லஜ்ஜிக்குமிறே. இவன் தான் சுமப்பேனென்ற(ன) இவனை யெடுத்திருனித்தனையிறே. இவ்வுபாயத்திலிழியும்போது உபா யாந்தரங்களை அத$_4$ர்மமென்று விடவேண்டுமென்று ஶாஸ்த்

ஶோகமன்று. ப்ரகரணாநுகு$_3$ணஶோகாந்தரம். எங்ஙனே யென்னில். "தை$_3$வீ ஸம்பத் விமோக்ஷாய நிப$_3$ந்த$_4$ாயா ஸுரீ மதா" [கீ$_3$தை 16-5] என்று பிரித்துச் சொன்னவாறே. "நாம் ஆஸுரப்ரக்ருதிகளாகில் செய்வதென்?" என்று ஶோகித்த அர்ஜுநனைப்பற்ற "மாஶுச: ஸம்பத$_3$ம் தை$_3$வீம் அபி$_4$ஜாதோऽஸி பாண்ட$_3$வ" [கீ$_3$தை 16-5] என்றாப்போலே, இங்கு கீழ் உக்தங்களான உபாயங்கள் அநுஷ்டி$_2$க்க அஶக்யங்களென்றும். ஸ்வஶரீரத்வகத$_2$நாதி$_3$ களாலே ப்ரதிபாதி$_3$க்கப்பட்ட பரதந்த்ரமான ஸ்வரூபத் துக்கு ஸ்வயத்நரூபங்களான இவை விரோதி$_4$கள் என்றும் பு$_3$த்$_3$தி$_4$பண்ணி "இவற்றாலே எம்பெருமானைப்பெற என்ப தொன்றில்லை. இனி இழந்தே போமித்தனையாகாதே" என்கிற ஶோகம். ஜிதேந்த்$_3$ரியரில் தலைவனாய், ஆஸ்தி காக்$_3$ரேஸரனாய் "கேஶவஸ்ய ஆத்மா" என்று க்ருஷ்ண னுக்கு த$_4$ாரகனாயிருந்துள்ள அர்ஜுநனுக்கு இப்போது ஶோகம்—"உபாயாந்தரங்கள்,ப$_4$க$_3$வதத$_3$த்யந்த பாரதந்த்ர்யம் (ப$_4$க$_3$வச்ச$_2$ரீரத்வம்) ஆகிற ஸ்வஸ்வரூபத்துக்குச்சேராதவை யாகையாலே. நாம் ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தையிழந்தோமித்தனை" என்கிற மஹாஶோகம் என்றபடி. உபாயாந்தராநுஷ்ட$_2$ா- நௌபயிக ஜ்ஞாநஶக்த்யாதி$_3$களை அர்ஜுநனுக்கு உபபாதி$_3$க் கிறார் (நாண்) என்று தொடங்கி. (உத்தமாஶ்ரமத்தில்) இத்

ரங்கள் பலவும் சொல்லுகையாலும், உத்தமாஶ்ரமத்திலே புகுமவனுக்கு முன்பிலாஶ்ரம த₄ர்மங்களை விடுகை குறையல்லாமையாலும் த₄ர்மங்களை விடச்சொல்லுகை தப்பல்ல.

த்யாக₃விதி₄

'பரித்யஜ்ய' என்கிறவிது, விட்டாலல்லது பற்றவொண்ணாதென்னுமிடத்தைக் காட்டுகிறது. குளித்துண்பானென்றால் உண்டு குளிக்கையும் குளியாமே உண்கையும் தப்பிறே. பற்றுகைக்கு அங்க₃மானபோதிறே விடுகையும் நன்மையாவது. இவைதான் சுமந்தான் விழ, உறங்குவான் கைப்பண்டம் போலே ஆமவையிறே. இவற்றைப் பேற்றுக்கென்றதே பேறென்னபோது கைங்கர்யத்திலும் ஸ்வரூபஜ்ஞாநத்திலும் ப்ராப்ய ருசியிலும் சொருகுமிறே.

யாதி₃—"ஜாத்யாஶ்ரமதீ₃க்ஷைகளில் பே₄தி₃க்கும் த₄ர்மங்கள்" [ஆசார்யஹ்ருத₃ய 31] இத்யாதி₃யை நினைப்பது.

இனி "ல்யப்புக்கு" அர்த்த₂மருளிச்செய்கிறார் (பரித்யஜ்ய) என்று தொடங்கி. "ஸ்நாத்வா பு₄ஞ்ஜீத" என்றத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (குளித்து)இத்யாதி₃. அதாவது, "த்யஜ்ய"என்கிற ல்யப்பாலே, "பு₄க்த்வா சாந்த்₃ராயணம் சரேத்" என்னுமாபோலன்றிக்கே, "ஸ்நாத்வா பு₄ஞ்ஜீத" என்கிற விதி₄—'பு₄ஜிக்குமளவில், ஸ்நாநம் பண்ணியே பு₄ஜிக்கவேணும்' என்கிற நியமத்தைச் சொல்லுமாபோலே, ஸித்₃தே₄பாயத்தைப் பரிக்₃ரஹிக்குமளவில், த்யாஜ்யமான உபாயாந்தரங்களை த்யஜித்தே பரிக்₃ரஹிக்கவேணுமென்கிற நியமத்தைச் சொல்லுகிறதென்கை. இத்தால் த்யாக₃ாநுவாத₃பக்ஷம் அநாத₃ரணீயம் என்றதாயிற்று. (கைங்கர்யத்திலும்) இத்யாதி₃. இத்தால், "கர்மம் கைங்கர்யத்திலே புகும். ஜ்ஞாநம் ஸ்வரூபப்ரகாஶத்திலே புகும். ப₄க்தி ப்ராப்யருசியிலே புகும். ப்ரபத்தி ஸ்வரூபயாத₂ாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும்" என்ற வேதா₃ந்த ஸாரவேத்₃ய ஸாரதம நிஷ்கர்ஷம் நிரூபிதமாயிற்று.

இங்கு த்யாக₃ ஶப்₃த₃த்தாலே சொல்லுகிறது த₄ர்ம ஸ்வரூப த்யாக₃த்தையோ? த₄ர்மப₂லாதி₃ த்யாக₃த்தையோ? த₄ர்மத்தில் உபாயத்வபு₃த்₃தி₄ த்யாக₃த்தையோ? என்னில்:- இவ்வதி₄காரிக்கு, யாவச்ச₂ரீரபாதம் காலக்ஷேபத்துக்காக ப₄க₃வத் தோஷஹேதுபூ₄தமானவை அநுஷ்டே₂யமாகை யாலே த₄ர்மஸ்வரூப த்யாக₃மாகமாட்டாது. ப₂லாதி₃கள் ஸாத₄கனுக்குங்கூட த்யாஜ்யமாகக் கீழே உக்தமாகை யாலே ப₂லாதி₃த்யாக₃த்தைச் சொல்லுகிறதாகவொண்ணாது. ஆக இங்கு த₄ர்மங்களினுடைய உபாயத்வபு₃த்₃தி₄த்யாக₃த் தைச் சொல்லுகிறது. அந்த உபாயத்வபு₃த்₃தி₄த்யாக₃ மாவது—லாப₄ஹேதுவான ப₄க₃வத் ப்ரீதிக்கு ஸாத₄ந மென்கிற ப்ரதிபத்தியைத் தவிருகை. ஆகையாலே, ஸ்வ ரூப த்யாக₃த்தால் வந்த குறையும் ப₂லாதி₃ த்யாக₃த்தைச் சொல்லுகிறது என்கிறத்தால் வரும் புநருக்தியுமின்றியிலே ஒழியும். அவன் உபாய பு₃த்₃த்₄யா அநுஷ்டி₂க்கும். இவன் போ₄க₃பு₃த்₃த்₄யா அநுஷ்டி₂க்கும். அவன் விதி₄ப்ரேரிதனாய் அநுஷ்டி₂க்கும். இவன் ராக₃ப்ரேரிதனாய் அநுஷ்டி₂க்கும். அவனுக்கு வர்ணாஶ்ரமத₄ர்மம் நியமேந அனுஷ்டி₂க்க வேணும். இவனுக்கு வர்ணாஶ்ரம த₄ர்மாநுஷ்டா₂நமாகவு மாம். வைஷ்ணவ கிஞ்சித்காரமாகவுமாம். ப்ராதிகூல்ய நிவ்ருத்தியிலே நியமம். ஆநுகூல்யங்களில் ஏதேனுமாம். ஆகையிறே நம்மாசார்யர்கள் இவற்றை அநுஷ்டி₂ப்பாரும் அநுஷ்டி₂யாதாருமாய்ப் போருகிறது. ஆகையிறே. "ஆநு கூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்" என்று ஆநுகூல்யஸங்கல்பத்தோபாதி ப்ராதிகூல்ய நிவ்ருத்தியை யும் ஸம்பா₄வித ஸ்வபா₄வமாகச் சொல்லுகிறது. ஆக. காம்யகர்மத்தோபாதி மோக்ஷஸாத₄நத₄ர்மமும் இவனுக்கு த்யாஜ்யமாகையாலே ஸாங்க₃மான அந்த த₄ர்மத்யாக₃த்தை த்யாக₃ஶப்₃த₃த்தாலே சொல்லிற்றாய்த்து.

த்யாக₃விஶேஷணமான "பரி" ஶப்₃த₃ம் "பரி- ஸாகல்யே" என்கிறபடியே ஸாகல்ய வாசியாய்க் கிடக்

கிறது. ஸாகல்ய ஶப்₃த₃வாச்யம் வாஸநையாய், ஸவாஸந த்யாக₃த்தைச் சொல்லுகிறது. அதாகிறது—லஜ்ஜாபுரஸ்ஸர த்யாக₃ம். ஸ்வரக்ஷணார்த்தை₂யான ஸ்வப்ரவ்ருத்தி ஸ்வ ரூபஹாநியென்றறிந்தால், "நெடுநாள் ஸ்வரூபஹாநியான வற்றையாகாதே உபாயமாக நினைத்திருந்தது" என்று லஜ்ஜை பிறக்கக் கடவதிறே. ப₄ர்த்ருபே₄க₃த்தை உத₃ர போஷணத்துக்கு உறுப்பாக்குகையாகிறது—பதிவ்ரதைக்கு ஸ்வரூபஹாநியாமாப்போலேயிறே. பே₄க₃ரூபமான ப்ர வ்ருத்தியை ஸாத₄நமாக்குகையாகிறது. "த்யஜ்ய" என் கிற "ல்யப்"பாலே—த₄ர்மத்யாக₃ம் ஸ்வீகாரத்துக்கு அங்க₃ மானவன்று கர்த்தவ்யம். அல்லாதபோது அயுக்தம் என்னு மிடத்தைக் காட்டுகிறது. த₄ர்மத்தைவிட்டு ஸ்வீகாரத்தில் இழியாதேயிருக்குமாகில், உப₄ய ப்₄ரஷ்டனுகையாலே நாஶமே ப₂லமாயறுமே. இத்தைப் பற்றவிறே நஞ்ஜீயர் "ஒன்றில் நாரகிகளுக்கு மூர்த்தா₄பி₄ஷிக்தனாதல், இல்லை யாகில் பரமபத₃ம் என் சிறுமுறிப்படியே செல்லுதல் செய்யும்படியிறே நான் நிற்கிற நிலை" என்றருளிச்செய்தது. அதாகிறது—த₄ர்மத்யாக₃ப₂லமான பாபம் மேலிட்டு நரகம் வஸ்தவ்யபூ₄மியாதல், த்யாக₃பூர்வகமாக ஸ்வீக்ருதமான உபாயம் ப₂லித்து பரமபத₃ம் வஸ்தவ்ய பூ₄மியாதலாம் இத்தனையிறே என்கை. ஆக, "ல்யப்"பாலே மேல் சொல்லப்போகிற ஸ்வீகாரம் த்யாகா₃ங்க₃கம் என்னுமிடம் சொல்லிற்றாய்த்து. ஸ்வஸ்வரூபத்தைப் பார்த்தாலும் ஸாத₄ நாந்தரங்களை விடவேண்டிவரும். அவற்றினுடைய ஸ்வ ரூபங்களைப் பார்த்தாலும் ஸாத₄நாந்தரங்கள் த்யாஜ்ய மாயறும், பற்றப்புகுகிற உபாயஸ்வரூபத்தைப் பார்த் தாலும் ஸாத₄நாந்தரங்கள் த்யாஜ்யமாயறும். ஸ்வஸ்வ ரூபத்தைப் பார்த்தால் நமஶ்ஶப்₃த₃த்தில் சொல்லுகிற படியே, ஸ்வரக்ஷணவ்யாபாரத்திலே இழிகை ஸ்வரூப ஹாநியாம்படி அத்யந்த பரதந்த்ரமாயிருக்கும். அவை தன்னைப் பார்த்தால், ப₃ஹுயத்நஸாத்₄யமாகையால் து₃ஷ்

"மாம்" ஸப்3தா3ர்த்த2ம்

'மாம்' என்று பற்றப்படுமுபாயத்தைச் சொல்லுகிறது. மாம்—என்னை. a 'அறமல்லனவும் சொல்லல்ல' என்னும் கழிப்பனான த4ர்மங்கள் போலன்றிக்கே கைக்கொள்ளப்படும் நல்லறத்தைக் காட்டுகிறான். வேத2த்தில் இரண்டு கூற்றிலும் அறிவுடையார்க்கும் நல்லறமாகச் சொல்லுவது. b பறைதரும்

கரமுமாய். "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதி4பி4:" என்று சிரகால ஸாத்4யமுமாய். இந்த்3ரிய ஜயாதி3கள் அபேக்ஷிதமாகையாலும். ஆதி3ப4ரதாதி3கள் ப்4ரஷ்டராகக் காண்கையாலும் ஸாபாயமுமாய். ப்ராரப்3த4 கர்மாவஸாநாபேக்ஷமாகையாலே விளம்ப்3ய ப2லப்ரத3முமாயிருக்கும். உபாயத்தைப் பார்த்தால். நித்யாநபாயிநியான பிராட்டியும் ஸஹகாரியாக ஸஹியாதபடி சணற்கயிறு கண்ட ப்3ரஹ்மாஸ்த்ரம்போலே நிரபேக்ஷமாயிருக்கும். ஆக. தான் அநந்யஸாத4நனுகையாலும். அவை து3ஷ்கரத்வாதி3 தோ3ஷதூ3ஷிதமாகையாலும். உபாயம் ஸஹகாரி நிரபேக்ஷமாகையாலும். த4ர்மத்யாக3ம் உபாயஸ்வீகாரத்துக்கு அங்க3மாகக் கடவது. இப்போதிறே ஆகிஞ்சந்ய ரூபாதி4கார ஸித்3தி4 உண்டாவது.

அநந்தரம் த்ருதீயபத3ார்த்த2மருளிச்செய்கிறார் (மாம் என்று) *என்று தொடங்கி. ஸர்வேஸ்வரனுடைய நிருபாதி4கத4ர்மத்வத்தை உபபாதி3க்கிறார்* (அறம்) *என்று தொடங்கி. இங்கே. "ராமோ விக்3ரஹவாந் த4ர்ம:" "க்ருஷ்ணம் த4ர்மம் ஸநாதநம்" "அத2ாதோ த4ர்ம ஜிஜ்ஞாஸா" இத்யாதி3வசநங்களை அநுஸந்தி4ப்பது. "வேத3 வித3:—அத்4யாத்மவித3:" என்ற பத3ங்களைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார்* (வேத3த்தில் இரண்டு கூற்றிலும்) *என்று தொடங்கி. த4ர்மங்களையெல்லாம் விட்டுத் தன்னைப்பற்றச் சொல்லுகையாலே ப2லிதமானதொரு அர்த்த2விஶேஷத்தை*

a நான்-திருவ 72 b திருப்பாவை 10

புண்ணியனுன க்ருஷ்ணனையிறே. த$_4$ர்மங்களை நிலைநிறுத்தப் பிறந்தவன்தானே த$_4$ர்மங்களை விடுவித்து, அவற்றின் நிலையிலே தன்னை நிறுத்துகையாலே நேரே த$_4$ர்மம் தானென்னுமிடத்தை வெளியிட்டானுயிற்று.

அல்லாத த$_4$ர்மங்கள் சேதநனுலே செய்யப்பட்டு, பலகூடி ஒன்றுய், நிலைநில்லாதே, அறிவும் மிடுக்குமற்று, இவன் கைபார்த்து, தாழ்த்துப் ப$_2$லிக்கக்கடவனவாயிருக்கும். இந்த த$_4$ர்மம் a 'அறஞ்சுவராகி நின்ற' என்று படியெடுத்தாப்போலே கோயிலாம்படி ஸித்$_3$த$_4$ரூபமாய், ஒன்றுய் நிலைநின்று, ஜ்ஞாநஶக்திகளோடே கூடி, ஒன்றுல் அபேக்ஷையற்றுத் தாழாமல் ப$_2$லிக்குமதாயிருக்கும். 'என்னை' என்று b 'வைகுந்தம் கோயில் கொண்ட' c 'வேலைவாய்க் கண் வளரும்' d 'ஒழிவற நிறைந்து நின்ற' e 'எம்மாண்புமானுன்'

அருளிச்செய்கிருர் (த$_4$ர்மங்களை நிலைநிறுத்த) இத்யாதி$_3$நா. இப்படிச் சொன்னவித்தால் கீழ் விட்ட ஸாத$_4$நங்களிற்காட்டில் இந்த ஸாத$_4$நத்துக்குண்டான ஏற்றம் சொல்லுகிறது. அது தான் எது என்ன அருளிச்செய்கிருர் (அல்லாத) என்று தொடங்கி. அதாவது—ஸித்$_3$த$_4$மாய், பரமசேதநமாய், ஸர்வஶக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தரநிரபேக்ஷமாயிருக்கும் என்றபடி. "மாம்" என்று ஸ்ரீக்ருஷ்ணரூபத்தைக் காட்டுகையாலே வ்யாவர்த்திக்கப்படுகிறவற்றை அருளிச்செய்கிருர் (என்னை என்று) என்று தொடங்கி. இத்தால், தே$_3$ஶவிப்ரக்ருஷ்டதையாலே காணவும் கிட்டவும் ஒண்ணுதபடியிருக்கிற பரவ்யூஹங்களையும், அஸாத$_4$ரண விக்$_3$ரஹயுக்தமன்றிக்கே உபாயாந்தரநிஷ்ட$_2$ர்க்கு உத்$_3$தே$_3$ஶ்யமாயிருக்கிற அக்$_3$நீந்த்$_3$ராதி$_3$ தே$_3$வதாந்தர்யாமித்வத்தையும் வ்யாவர்த்திக்கிறதுஎன்கை. அவதாராந்தரங்களின் ஸௌலப்$_4$யம் பரத்வம் என்னலாம்படியாகவிறே ஸ்ரீகிருஷ்ணஸௌலப்$_4$யம். அத்தைப்பற்ற விப$_4$வாந்தரங்களும் கழியுண்ணுமத்தையருளிச்செய்கிருா (எம்மாண்புமானுன்) என்று.

a *திருமாலை 6* b *திருவாய் 8-6-5* c *பெரியதிருவ 85*
d *திருவாய் 3-2-7* e *திருவாய் 1-8-2*

என்கிற தன்னுடைய பரத்வாதி₃களைக் கழித்து க்ருஷ்ணனுன நிலையைக் காட்டுகிறுன். a பாலப்பிராயத்தே இவனைக் கைக் கொண்டு, ஒக்கவிளையாடி, ஒருபடுக்கையிலே கிடந்து, ஓராஸநத்திலே கால்மேல் காலேறிட்டிருந்து, ஒரு கலத்திலே யுண்டு, காட்டுக்குத் துணையாகக் கார்யவிசாரங்களைப்பண்ணி, ஆபத்துக்களிலேயுதவி, நன்மைகளைச் சிந்தித்து b மண்ண கலம் கூறிடுவான் ஓலைகட்டித் தூதுசென்று c ஊரொன்று வேண்டிப்பெருதவுரோடத்தால் பாரதம் கைசெய்து d தேச மறிய ஓர் சாரதியாய் அவர்களையே யெண்ணும்படியான இவனுடைய குற்றங்களைக் கணக்கறுத்து நலமான வாத்ஸல் யத்துக் கிரையாக்கி, சீரிய அர்த்த₂ங்களை வெளியிட்டு e 'தேவர் தலைமன்னர் தாமே' என்னும்படியான ஸ்வாமித் வத்தைப் பின் விஶ்வரூபமுக₂த்தாலே காட்டி f 'பாங்காக முனைவரொடன்பளவி' என்னும்படி ஸௌஶீல்யம் தோற்றும்

இனி, இப்பத₃த்திலே ஆஶ்ரயணஸௌகர்யாபாத₃கங்களான கு₃ணவிஶேஷங்களெல்லாம் ப்ரகாஶிக்கிறபடியை அருளிச் செய்கிருர் (பாலப்பிராயத்தே) என்று தொடங்கி. இத்தால், "மாம்" என்று ஆஶ்ரயணீயமான வ்யக்தியைச் சொல்லுகை யாலே, ஆஶ்ரயணோபயோகி₃யான "நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் என்னையாள்வானே திருவேங்கடத்தானே" என்று முதல்வரான ஆழ்வாரும் அநுஷ்டி₂த்த அநுஷ்டா₂ந வாக்யத்தில் நாராயண பத₃த்தாலே அநு ஸந்தே₄யங்களான வாத்ஸல்யாதி₃ கு₃ணசதுஷ்டயமும் அநுஸந்தே₄யம் என்கை. வாத்ஸல்யமாவது—அன்றீன்ற கன்றின் பக்கல் தாய் பண்ணும் வ்யாமோஹம். ஸ்வாமித்வ மாவது—ஆஶ்ரிதருடைய பேறிழவுகளில் உண்டான ஸுக₂ து₃:க்க₂ங்கள் அவர்களுக்கன்றிக்கே தனக்கேயாம்படி அவர் களை உடையனுகை. ஸௌஶீல்யமாவது — க்ஷுத்₃ரஸம் ஸாரிகளான சேதநரோடே கலக்கும்போது, அவன் சிறுமையாதல், தன் பெருமையாதல் நெஞ்சில்படாதபடி

---

a பெரியாழ்திரு 2-6-6 b பெரியதிரு 11-5-7 c பெரியாழ்திரு 2-6-5
d திருவாய் 7-5-9 e நான்திருவ 16 f பெரியதிரு 2-4-4

படி புரையறக்கலந்து. a 'பக்கமே கண்டாருளர்' என்னும் படி ஸுலப₄னாய் b காரொக்கும் மேனியைக் கண்ணுக்கு இலக்காக்கிக்கொண்டு போருகிறவன். ஸேநாதூ₄ளியாலே புழுதிபடைத்த c கொத்தார்கருங்குழலும். குருவேர்ப்பரும்பின d கோளிழை வாண்முகமும். e குருமாமணிப்பூண் குலாவித்திகழும் திரு f மார்வணிந்த வனமாலையும். இடுக்கின g மெச்சூது சங்கமும். h அணிமிகு தாமரைக் கையிலே கோத்த சிறுவாய்க்கயிறும். முடைகோலும். அர்த்த₂ப்ர

புரையறக் கலக்கை. ஸௌலப்₄யமாவது—அதீந்த்₃ரியனை வன் எல்லாருடைய கண்ணுக்கும் இலக்காய்க்கொண்டு ஸுலப₄னாயிருக்கை. இவையெல்லாவற்றிலும் வைத்துக் கொண்டு மிகவும் அபேக்ஷிதம் ஸௌலப்₄யமாகையாலே. அவதார ப்ரயுக்தமான ஸௌலப்₄யத்தளவன்றிக்கே ஸாரத்₂யேऽவஸ்த்தி₂தனாய் நிற்கிற ஸௌலப்₄யாதிஶயத்தை த₃ர்ஶிப்பித்தமையை அருளிச்செய்கிறார் (ஸேநாதூ₄ளி) இத்யாதி₃. இத்தால். ஸேநாதூ₄ளி தூ₄ஸரிதமாய் அலைகிற திருக்குழல் கற்றையும். ஸ்வேத₃பி₃ந்து₃ஸ்தப₃கிதமான திருமுகமும், ஆஶ்ரித விரோதி₄த₃ர்ஶநத்தால் சீறிச் சிவந்து. ஶீதளமாய்ச் சிதற அலர்ந்த தாமரைத் தடாகம் போலே கண்டவிடமெங்கும் அலையெறிகிற திருக்கண்களும். காளமேக₄ம்போலே இருண்டு குளிர்ந்த திருமேனியும். அதுக்குப் பரபா₄க₃மாம்படி சாத்தின திருப்பீதாம்ப₃ரமும். தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளும். அதிலே சாற்றின சிறுசதங்கைகளும். தூக்கின உழவுகோலும். பிடித்த சிறுவாய்க்கயிறுமாய் நிற்கிற நிலையைக் காட்டுகையாலே விலக்ஷண விக்₃ரஹயோக₃மும் தோற்றுகிறது. தன் சிறுமை கண்டு இருக்கவேண்டா; அவன் ஸுஶீலனாகை

---

a பெரியாழ்திரு 4- -8 b திருவாய் 9-9-7 c பெரியாழ்திரு 2-1-7
d திருவாய் 7-7-8 e பெரியாழ்திரு 1-2-10 f நாச்-திரு 13-3
g பெரியாழ்திரு 2-1-1 h திருவாய் 10-3-5

காமமகமான ஜ்ஞாநமுத்₃ரையும், a கட்டி நன்குடுத்த பீதக வாடையும், b சிலம்பும் செறிகழலும் c வெள்ளித்தளையும் d சதங்கையும் கலந்தார்ப்பத் தேருக்குக் கீழே நாற்றின e கனை கழலுமாய் நிற்கிறநிலையை 'மாம்' என்று காட்டுகிருன்.

யாலே. து₃ர்லப₄னென்று இருக்கவேண்டா; அவன் ஸுலப₄னுகையாலே. தன் தோ₃ஷம் கண்டு இருய்க்க வேண்டா; அவன் வத்ஸலனுகையாலே. அப்ராப்தன் என்று இருய்க்கவேண்டா; ஸர்வஸ்வாமியாகையாலே. ஆஶ்ர யிக்கைக்கு ஶுப₄ாஶ்ரயமேதென்று கலங்கவேண்டா; விலக்ஷணவிக்₃ரஹயுக்தனுகையாலே. இந்த விலக்ஷண விக்₃ரஹயோக₃த்தைச் சொன்னபோதே, அந்த விக்₃ர ஹத்துக்கு நிரூபகபூ₄தையாய் "அகலகில்லேனிறையும்" என்று திருமார்விலே எழுந்தருளியிருக்கிற பிராட்டியை யும் சொல்லிற்றுயறுகையாலே இவனுடைய பூர்வாபரா த₄த்தைப் பொறுப்பித்துச் சேரவிடுகைக்குப் புருஷகார யோக₃மும் சொல்லிற்றுய்த்து என்கை. ஆக "மாம்"என்று—ஸ்ரீமானுமாய், நாராயணனுமாய் இருக்கிற என்னை—என்ற படி. இத்தால் அநுஷ்டா₂ந வாக்யத்தில் 'ஸ்ரீமத்' ஶப்₃ த₃த்தையும் நாராயண ஶப்₃த₃த்தையும் ஸ்மரிப்பிக்கிறது. அதுக்கு ஹேது—வித்₄யநுஷ்டா₂நங்களிரண்டும் ஏகார்த்த₂ மாகையாலே. ஆகவித்தால் ஸ்ரீமானை நாராயணனே ஶரண்யன் என்றதாயிற்று, இவ்விஶிஷ்டவேஷத்திலே ஆஶ்ரயித்தாலாயிற்று ப₂ல ஸித்₃தி₄யுள்ளது. பிரிய ஆஶ்ரயிக்கையாவது — தே₃வதாந்தரத்தை ஆஶ்ர யித்தவோபாதியிறே. அநுஸந்த₄ாந ரஹஸ்யத்தில் ஸ்ரீமத் பத₃ம் இருக்கக்காண்கையாலே ஐகார்த்₂யத்தைப் பற்ற இந்த விதி₄ரஹஸ்யத்திலும் ஸ்ரீமத்த்வம் அநுஸந்தே₄ய மாகத் தட்டில்லை என்றபடி. இங்கு "மாம்" "அஹம்" என்கிற பத₃ங்களுக்கு—அடைவே அவதார ரஹஸ்யத்திலும்

---

a பெரியாழ்திரு 3-6-10 b மூன்-திருவ 90 c பெரியாழ்திரு 1-2-3
d பெரியாழ்திரு 1-2-20 e திருவாய் 3-6-10

புருஷோத்தமத்வ ப்ரதிபாத₃ந ப்ரகரணத்திலும் சொல்லு கிறபடியே, ஸௌலப்₄யத்திலும் ஸ்வாதந்த்ர்யத்திலும் ப்ராத₄ந்யேந நோக்கு. "அவதாரஸ்ய ஸத்யத்வம் அஜஹத்ஸ்வ ஸ்வபா₄வதா। ஶுத்₃த₄ஸத்வமயத்வம் ச, ஸ்வேச்சா₂மாத்ர நித₃ாநதா॥ த₄ர்ம க்₃லாநௌ ஸமுத₃ய:, ஸாது₄ ஸம்ரக்ஷணார்த்த₂தா। இதி ஜந்ம ரஹஸ்யம் யோ வேத்தி நாஸ்ய புநர்ப₄வ:॥" இவ்வவதார ரஹஸ்ய ஜ்ஞாநம் ஸத்₃வாரக ப்ரபத்தி நிஷ்ட₂னுக்கு உபாயபூரகம். ஸ்வ தந்த்ர ப்ரபத்தி நிஷ்ட₂னுக்கு ஸ்வதந்த்ரனுடைய ஸௌலப்₄ யத்தைக் காட்டும். இப்ரகரணங்களிரண்டிலும் ஸித்₃த₄மான ஸௌலப்₄யமும், ஸ்வாதந்த்ர்யமும் ஒன்றுக்கொன்று துணை யாயிருக்கும். "ஸ்வதந்த்ரஸ்யாபி நைவ ஸ்யாத் ஆஶ்ரயோ து₃ர்லப₄ஸ்ய து। அஸ்வதந்த்ராத் ப₂லம் ந ஸ்யாத் ஸுலப₄ாத₃ாஶ்ரிதாத₃பி॥ அஸ்வதந்த்ரே ந கைங்கர்யம் ஸித்₃த்₄யேத் ஸ்வைர ப்ரஸங்க₃த:। து₃ர்லபே₄ ஸாத்₄யமப்யேதத் ந ஹ்ருத்₃யம் லோகநீதித:॥" ஆகையாலே கேவலஸுலப₄ மான த்ருணாதி₃களைப் போலன்றிக்கே ஶ்லாக்₄யனுமாய், து₃ர்லப₄மான மேருவைப்போலுமன்றிக்கே ஸுலப₄னு மாய்ப் பரனுமான ஶரண்யன் ஆஶ்ரயணீயனுமாய், ப்ராப் யனுமாகிறான். இவ்விரண்டு பத₃த்திலும் ஸர்வரக்ஷகனை ஸர்வஶேஷி ரக்ஷணத்துக்கு அவஸரம் பார்த்து நிற்கிற நிலையும் தோற்றுகிறது. இப்படி அவஸர ப்ரதீக்ஷனை ஈஶ்வரன் "ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்கிறபடியே "என்றோ இவர்கள் நம்மை அபேக்ஷிப்பது?" என்கிற அபி₄ப்ராயத்தாலே அபி₄முக₂னாய் நிற்கிறநிலை "மாம்" என்கிற பத₃த்திலே ஸூசிதம். "என்று நாம் இவர்களை அழுக்குக் கழற்றின ஆப₄ரணத்தைப்போலே அங்கீ₃கரிப் பது" என்கிற அபி₄ப்ராயத்தாலே ஸத்வரனாய்த் தன் பேறாகப் ப₂லம்கொடுக்க நிற்கிறநிலை "அஹம்" என்கிற பத₃த்திலே காட்டப்படுகிறது. இங்கு, "மாம்" என்று, "நீ உனக்கு போ₄க்₃யமான ஶப்₃த₃ாதி₃ விஷயங்களை பு₄ஜிக்கையாலே உன்னுடம்பில் புகரைப் பாராய். எனக்கு

போ4க்3யமான உன்னையநுப4விக்கப் பெறுமையாலே என்னுடம்பில் வெளுப்பைப்பார் — என்று சட்டையை அவிழ்த்துக் காட்டுகிறான்” என்று எம்பார் அருளிச்செய்வர். “மாம்” என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டுகிறான் என்று நம்பிள்ளை அருளிச்செய்வர். அதாவது:— “வைகுண்டே2 து பரே லோகே” இத்யாதி3களிற்படியே “ப4க்தை: பா4க3வதை: ஸஹ” என்கிற வைகுந்தத்தமரரும் முனிவருமான அயர்வறுமமரர்களோடும் ஸ்ரீபூ4மிநீளைகளோடும் எழுந்தருளியிருந்து நிரந்தரபரிபூர்ணாநுப4வம் நடக்கச்செய்தேயும், லீலாவிபூ4தியிலுள்ளாருடைய இழவே திருவுள்ளத்திற்பட்டு “ஸ ஏகாகீ ந ரமேத” என்று அவ்வநுப4வம் உண்டதுருக்காட்டாதே திருவுள்ளம் புண்பட்டு இவர்களையும் அவ்வநுப4வத்திலே மூட்டலாமோ என்னும் நசையாலே அவதரித்துத் தாழநின்று அவன் கால் தன் தலையிலே படநின்று வ்யாபரித்த தன் வ்யாமோஹமெல்லாம் தோற்றும்படியிருக்கை. இத்தால், நீ விமுக2னான த3ஶயிலும் அந்தர்யாமியாய் நின்று ஸத்தையை நோக்கியும், கரணகளேப3ரவிது4ரனாய் அசித்3விஶேஷிதனானவன்றும் என் பக்கலிலே ஏறிட்டுக்கொண்டு நோக்கியும், பின்பு, “நீ அபி4முக2னாய், உஜ்ஜீவிக்கக்கூடுமோ” என்று கரணகளேப3ர ப்ரதா3நம் பண்ணியும், பின்பு அவற்றைக்கொண்டு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி பண்ணுகைக்காக அநுப்ரவேஶித்து, “என்னைப் பெறுகைக்கு உடலாயிருப்பதொரு ஜ்ஞானவிஶேஷம் உண்டாமோ” என்னும் நசையாலே வேத3ங்களை ப்ரவர்த்திப்பித்தும், அவதரித்தும் திரிகிற தன் வ்யாபாராதி3களைக் காட்டுகிறான் என்றதாயிற்று. ஆக, ஆஶ்ரிதசேதநனுடைய ஸ்வாபராத4ப4ய நிவ்ருத்தி ஹேதுபூ4த புருஷகாரயோக3மும், ஸ்வதோ3ஷாதி3 ப4ய நிவ்ருத்தி ஹேதுபூ4த வாத்ஸல்யாதி3களும், விலக்ஷண விக்3ரஹயோக3மும் “மாம்” என்று ஆஶ்ரயணீய வஸ்துவின் பக்கலிலே அநுஸந்தி4த்ததாயிற்று.

"ஏக" ஶப்₃த₃ார்த்த₂ம்

புறப்பகையறுத்துக் காட்டின உபாயத்துக்கு 'ஏகம்' என்று உட்பகையறுக்கிறது. இந்த உபாயத்தைச் சொல்லுமிடங்களிலே a 'களைகண் நீயே' b சரணே சரண்' என்பதொரு

அநந்தரம் சதுர்த்த₂ பத₃ார்த்த₂மருளிச்செய்கிறார் (புறப்பகை) இத்யாதி₃. அதாவது—உபாயாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் பௌநருக்த்யம் ப்ரஸங்கி₃க்கையாலும், தே₃வதாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் "மாம்" என்று அஸாத₄ாரணாகாரத்தைச் சொல்லுகையாலே அது ஸித்₃த₄மாகையாலும், இந்த அவத₄ாரணத்தால் "வ்ரஜ" என்று மேல் சொல்லுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது—என்கை. இந்த ஸ்வீகாரந்தானும் அந்வய வ்யதிரேகத்தாலே ஸாத₄நம் என்று நினைக்கலாயிருக்கையாலே இதன் ஸாத₄நத்வம் அவஶ்யம் கழிக்கவேணுமிறே. சிலர் "ஏகம்" என்கிற இதுக்குப் பொருள்—கர்த்தாவான என்னை என்றபடி என்றார்கள். அதாவது "பராத்து தச்ச்ருதே:" என்று ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் ப₄க₃வத₃தீ₄நமாயிருக்குமென்கை. சிலர், ஏகஶப்₃த₃ம் ஸக்ருத் ப்ரபத்தியைச் சொல்லுகிறதென்றார்கள். சிலர், உன்னுடைய இச்சை₂யொழிய நாமே ரக்ஷகன் என்கிறான் என்றார்கள். சிலர், உபாயோபேயமிரண்டுமொன்று என்கிறது என்றார்கள். சிலர், ஶரணஶப்₃த₃த்துக்கு விஶேஷணமாக்கி, அத்₃விதீயமான உபாயம் என்கிறது என்றார்கள். ஏகஶப்₃த₃ம் அவத₄ாரணார்த்த₂மாய் ஒன்றே உபாயம் என்கிறது என்று நம்மாசார்யர்கள் அருளிச்செய்வர்கள். ஏகஶப்₃த₃ம் அவத₄ாரணார்த்த₂ம் என்பது ஸ்த₂ாந ப்ரமாணத்தாலேயிறே. அதற்கு ப்ரமாணம் காட்டுகிறார் (களைகண்) இத்யாதி₃யால்.

ஈஶ்வரன் ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வரூபாவிர்ப₄ாவத்தை உண்டாக்குவதாகப் பூர்வமேவ சிந்தித்து, அவஸரப்ரதீக்ஷு

a பெரியதிரு 4-6-1 b திருவாய் 5-10-11

நிர்ப்ப3ந்த4முண்டாகையாலே என்னையேயென்று, ‘வ்ரஜ’ என்று சொல்லப்படுகிற ஸ்வீகாரத்தில் உபாயபு3த்3தி4யைத் துடைத்து உபாயத்தை ஓடவைக்கிறது. a ‘அவனே அகல்

யிருக்கையாலே அவனுக்கு ப்ரஸாத3ஜநகமாகச் செய்ய வேண்டுவதொன்றுமில்லை. உண்டென்றிருக்கில், தன் ஸ்வரூபபாரதந்த்ர்யத்தையுமழித்து, அவனுடைய ரக்ஷகத்வத்தையும் ஸோபாதி4கமாக்குகிறானித்தனை. ஆனால், ‘ப்ரபத்தி உபாயம்’ என்று வ்யவஹரிப்பது எப்படி? எனில்: ப்ரபத்தியாவது — “த்வமேவ உபாயபூ4தோ மே ப4வ இதி ப்ரார்த்த2நாமதி: ஶரணாக3தி:” என்று சேதநனுடைய ப்ரார்த்த2நாரூப ஜ்ஞாநமாயிராநின்றது. எம்பெருமானாகிறான் — ப்ரார்த்த2நீயனாயிருப்பானொரு பரம சேதநனாயிராநின்றான். ஆகையாலே இரண்டுக்கும் ந்யாஸஶப்3த3வாச்யத்வமும், உபாயமென்னும் வ்யவஹாரமும் கூடும். எங்ஙனேயென்னில்:— பராம்ருஷ்டலிங்க3ம் அநுமாநமாயிருக்க, ‘லிங்க3பராமர்ஶம் அநுமாநம்’ என்று பராமர்ஶ ப்ராதா4ந்யத்தைப்பற்ற ஔபசாரிகமாகப் பராமர்ஶத்தைச் சொன்னாப்போலேயும், “நீலம் ஜ்ஞாநம் பீதம் ஜ்ஞாநம்” என்று விஷயிப்ராதா4ந்யத்தைப்பற்ற விஷயியான ஜ்ஞாநத்திலே நைல்யபீதிமாதி3களை உபசரிக்குமா போலேயும், ஸ்வீகார ப்ராதா4ந்யத்தைப்பற்ற ஸ்வீகார விஷயமான ப4க3வது3பாயத்வ வ்யவஹாரத்தை விஷயியான ஸ்வீகாரரூப ப்ரபத்தி ஜ்ஞாநத்திலே உபசரித்துச் சொல்லுகிறது. ஆகையாலே விரோத4மில்லை. இந்த அவதா4ரணத்தால் வ்யாவர்த்திக்கப்படுகிறது “வ்ரஜ” என்று விஹிதமான ஸ்வீகாரத்தினுடைய அங்க3பா4வம். ஸ்வீகாரத்தையொழிய அவனுடைய உபாயபா4வம் ஜீவியாமையாலே ஸ்வீகாரத்தில் அங்க3பு3த்3தி4 பிறக்க யோக்3யதையுண்டு. யோக்3யதையுண்டாகில் அங்க3பா4வம் கழிகிறபடியென்னென்னில்: அங்க3மாவது அங்கிக்குக் கிஞ்சித்கார

---

a திருவாய் 9-3-2

ஞாலம் படைத்திடந்தான்' a 'அவனேயருவரையாலாநிரை கள் காத்தான்' என்னும்படி ஒன்றிலும் ஒரு ஸஹாயம் பொருதே. வேறொன்றைக் காணில் சணற்கயிறு கண்ட

மாவதிறே. அந்தக் கிஞ்சித்காரந்தான் ஸ்வரூபோத்பாத$_3$க த்$_3$வாரத்தாலேயாதல், உத்பந்நமான ஸ்வரூபத்துக்கு வர்த்த$_4$கமாயாதல், வர்த்தி$_4$த்ததுக்கு ப$_2$ல ப்ரத$_3$ாநமுக்தி முக$_2$த்தாலேயாதலாயிருக்கும். அதில், ப$_4$க்திக்கு, ஸாத்$_4$ய மாகையாலே உத்பத்த்யபேக்ஷையுண்டு. அஹரஹராதே$_4$ யாதிமுயமாகையாலே வ்ருத்$_3$த்$_4$யபேக்ஷையுண்டு. தான் சேதந மல்லாமையாலே ப$_2$ல ப்ரத$_3$ாந வேளையிலே சேதநாபேக்ஷை யுண்டு. ஆகையாலே, அதுக்குக் கர்மஜ்ஞாநாத்$_3$யங்க$_3$ங்கள் அபேக்ஷிதமாகக் கடவது. இந்த உபாயம் ஸித்$_3$த$_4$மாகை யாலே உத்பத்த்யபேக்ஷையில்லை. ஏகரூபமாகையாலே வ்ருத்$_3$த்$_4$யபேக்ஷையில்லை. பரமசேதநமாகையாலே ப$_2$ல ப்ரத$_3$ாநத்தில் அந்யஸாபேக்ஷதையில்லை. ஆக, அங்கங் களைக்கொண்டு கொள்வதொரு கார்யம் இவ்வுபாயத்துக்கு இல்லாமையாலே இந்த ஸ்வீகாரம் அங்க$_3$மாகமாட்டாது. ஸ்வரூபோத்பத்த்யாதி$_3$களிலே அங்க$_3$நிரபேக்ஷமாகில், இவ் வுபாயம் என்றுமொக்க ஜீவிக்கையாகாதொழிகைக்கு ஹேது என்னென்னில்; உபாயத்வமாவது—ஒருவனுடைய அநிஷ்டத்தைக் கழிக்கையும், இஷ்டத்தைக் கொடுக்கையு மாகையாலே ஒரு அதி$_4$காரி அபேக்ஷிதம். அது பெறுமை யாலே உபாய(த்வ)ம் ஜீவிக்கையாகாதொழிந்தது. அதி$_4$காரி யாகில் அபேக்ஷிதம் — ஸ்வீகாரம் செய்கிற கார்யமென் னென்னில்; ஐஶ்வர்யார்த்தி$_2$யிலும், கைவல்யார்த்தி$_2$யிலும், ப$_4$க$_3$வச்சரணார்த்தி$_2$யாய் ஸாத$_4$நாநுஷ்ட$_2$ாநம் பண்ணு மவனிற்காட்டிலும் இவ்வதி$_4$காரியை வ்யாவ்ருத்தனாக்கு கிறது-ப$_4$க$_3$வல்லாப$_4$ார்த்த$_2$மான இந்த ஸ்வீகாரம். ஆகை யாலே, "அருணயா ஏகஹாயந்யா பிங்க$_3$ாக்ஷ்யா ஸோமம் க்ரீணாதி" என்கிறவிடத்தில் அருணத்வ பிங்க$_3$ாக்ஷத்வாதி$_3$

a மூன்-திருவ 51

ப்$_3$ரஹ்மாஸ்த்ரம்போலே தன்னைக்கொண்டு நழுவும்படியிறே உபாயத்தின் சுணையுடைமை. a 'அதுவுமவனதின்னருளே' என்று இத்தலையில் நினைவுக்கும் அடி அவனுகையாலே b 'நீ என்னைக் கைக்கொண்டபின்' என்னும்படியான அவனுடைய ஸ்வீகாரமொழியத் தன் நினைவாலே பெறவிருக்கை c 'என் நினைந்திருந்தாய்' என்கிற அதி$_4$காரிக்குக் கொற்றை

கள் ஸோமக்ரயத்துக்குறுப்பான பசுவுக்குப் பஶ்வந்தரத்திற் காட்டில் வ்யாவர்த்தக விஶேஷணமானாப்போலே. இதுவும் அதி$_4$காரிக்கு வ்யாவர்த்தக விஶேஷணமாய்க் கிடக்கிறது. இனி அதி$_4$காரி அங்க$_3$மாமன்று, தத்$_3$விஶேஷணமான இந்த ஸ்வீகாரமும் அங்க$_3$மாகக் கடவது.

நநு; "ஸித்$_3$த$_4$மேவ ஹி ஸர்வத்ர நியோஜ்யஸ்ய விஶேஷணம்" **(ஆக$_3$மப்ராமாண்யம்)** *என்பதால் அதி$_4$காரிவிஶேஷணமாயிருப்பது ஸித்$_3$த$_4$மாகவேயிருக்கவேணும் என்று ஏற்படுவதால், "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்று விதே$_4$யமாகச் சொல்லுவது கூடாதேயென்னில்; அந்த நியமம் ஸாத்$_4$யோபாய விஷயமாகையால் ஸித்$_3$தே$_4$ாபாய விஷயத்தில் விரோதி$_4$க்காது. அல்லாமல் ஸித்$_3$தே$_4$ாபாய விஷயத்திலும் அதி$_4$காரி விஶேஷணம் ஸித்$_3$த$_4$மாகவே இருக்கவேணும் என்னில், உபாயமும் ஸித்$_3$த$_4$மாய் அதி$_4$காரமும் ஸித்$_3$த$_4$மாயிருக்கும் பக்ஷத்தில் ஸர்வமுக்தி ப்ரஸங்க$_3$ம் ஏற்படுமாதலால் அது கூடாது. ஆக அதி$_4$காரி விஶேஷணமான ஸ்வீகாரம் விதே$_4$யமாகத் தட்டில்லை. க்ஷுத்து அந்நத்துக்கு ஸாத$_4$நமாமன்றிறே இந்த ஸ்வீகாரத்துக்கு ஸாத$_4$நத்வமுண்டாவது. ஸ்வீகாரத்துக்கு அங்க$_3$தயா உபாயத்வம் கொள்ளப் பார்க்கில் "த்வமேவ உபாயபூ$_4$தோ மே ப$_4$வ இதி ப்ரார்த்த$_2$நாமதி: ஶரணாக$_3$தி:" என்று "அவனையே நிரபேக்ஷோபாயமாகப் பற்றுகை ப்ரபத்தி" என்கிற லக்ஷண*

---

a திருவாய் 8-8-3 b பெரியாழ்திரு 5-4-2 c பெரியதிரு 2-7-1

யிறே. விட்டோம், பற்றினோம், விடுவித்துப் பற்றுவிக்கப் பெற்றோமென்கிற நினைவுகளும் உபாயத்துக்கு விலக்கிறே.

"ஶரண" ஶப்$_3$தா$_3$ர்த்த$_2$ம்

'ஶரணம்' என்று பற்றும்படியைச் சொல்லுகிறது. ஶரணம்—உபாயமாக. இதுக்குப் பல பொருள்களுமுண்டே யாகிலும் இவ்விடத்தில்—விரோதி$_4$யைக் கழித்துப் ப$_2$லத்தைத் தரும் உபாயத்தைக் காட்டக்கடவது. 'மாமேகம்

வாக்யத்தோடு விரோதி$_4$க்கும். ஆகையாலே, ஈஶ்வரன் கார்யம் செய்கைக்கு ஆபி$_4$முக்$_2$ய ஸூசகமாய்க் கிடக்கிறது. இது ஸர்வமுக்தி ப்ரஸங்க$_3$ பரிஹாரார்த்த$_2$ம். பு$_3$த்$_3$தி$_4$ ஸமாதா$_4$நார்த்த$_2$ம். சைதந்ய கார்யம். ராக$_3$ப்ராப்தம். ஸ்வரூபநிஷ்ட$_2$ம். அப்ரதிஷேத$_4$த்$_3$யோதகம் என்றபடி. "கீழை மேலை வடக்கில் அவை புறம்பாகத் தன்பற்று உள்ளசல்" என்று இவர் தாமே ஆசார்ய ஹ்ருத$_3$யத்தில் அருளிச்செய்தாரிறே.

ஏகாந்தமான ஸ்வபா₄வங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்—என்றபடி. இனி, இந்த ஶ்ரீஶப்₃த₃த்துக்கு அர்த்த₂ம் அருளிச்செய்வதாக, ப்ரத₂மம் இதற்குள்ள வ்யுத்பத்தி த்₃வயத்தை அருளிச்செய்கிறார் ("ஶ்ரீயதே" "ஶ்ரயதே") என்று. அதாவது—"ஶ்ரிஞ் ஸேவாயாம்" என்கிற த₄ாது விலே "ஶ்ரீயதே இதி ஶ்ரீ:" "ஶ்ரயதே இதி ஶ்ரீ:" என்று ஸித்₃த₄மான கர்மணி வ்யுத்பத்தியையும் கர்த்தரி வ்யுத்பத்தியையும் சொன்னபடி. இவ்வ்யுத்பத்தித்₃வயத்துக்கும் அர்த்த₂ம் அருளிச்செய்கிறார் (மூன்று) இத்யாதி₃. அதாவது—இவ்வுப₄ய வ்யுத்பத்திக்கும் அர்த்த₂ம், ஶ்ரீயதே என்று எல்லாராலும் ஸேவிக்கப்படாநின்றாள் என்கையாலே ஸகல சேதநர்க்கும் இவளைப்பற்றித் தங்களுடைய ஶேஷத்வரூபஸ்வரூபலாப₄மாய், ஶ்ரயதே என்று ஈஶ்வரனை ஸேவியாநின்றாள் என்கையாலே, இவள் தனக்கும் ஈஶ்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூபலாப₄மாயிருக்கும் என்கை. இவள் தனக்குச் சேதநவிஷயத்தில் ஶேஷித்வமும், ஈஶ்வரவிஷயத்தில் ஶேஷத்வமும் என்றும் உண்டாயிரே யிருப்பது. ஆகையால், இந்த ஸேவ்யத்வஸேவகத்வங்கள் இரண்டும் இவளுக்கு நித்யமாய்ச் செல்லாநிற்கும் என்றதாயிற்று. சேதநர்களாலே ஆஶ்ரயிக்கப்படுமென்றும், இவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ஸர்வேஶ்வரனைத் தான் ஆஶ்ரயித்திருக்கும் என்றும் கூறுகையால், "பிதேவ த்வத்ப்ரேயாந்....விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத₃ஸி ந:" என்கிறபடியே ஸாபராத₄ரானவர்கள்பக்கல் ஸ்வயம் ஹிதைஷியாய் த₃ண்ட₃த₄ரனை ஸர்வேஶ்வரனுடைய சீற்றத்தை ஆற்றி அவனுடைய ஸஹஜகாருண்யம் இவர்களுக்கு உஜ்ஜீவகமாம்படி பண்ணிக்கொடுக்கையால், மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யாதிஶயத்தாலே புருஷகாரமாய் நிற்கிற நிலை சொல்லிற்றும். "அவிஜ்ஞாதா"

ஸேவிக்கப்படுகிறமையும் தான் நிழல்போலே எம்பெருமானை ஸேவிக்கும்படியையும் காட்டக்கடவது. சேரவிடுவார்க்கு

இத்யாதி3களிற்போலே. இங்கு "விஸ்மார்ய" என்றதுக்கும். "அல்லிமலர்மகள்போக மயக்குக்கள்" இத்யாதி3களுக்கும் ஸஹஜ3ா ஸர்வஜ்ஞனை ஈஶ்வரனுடைய நிக்3ரஹாபி4ஸந்தி4 நிவ்ருத்தியிலே தாத்பர்யம். ஸாபேக்ஷனை புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக் கொடுக்கவல்ல சேதநன் அபி4கம்யனைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரத்தைப் புருஷகாரம் என்று வ்யவஹரிப்பர்கள். இப்புருஷகாரம் ப2லத்துக்குப் பரம்பரயா காரணம். "அர்த்த2ஸ்வப4ாவாநுஷ்ட2ாநலோகத்3ருஷ்டிகு3ருக்திபி4:। ஶ்ருத்யா ஸ்ம்ருத்யா ச ஸம்ஸித்3த4ம் க4டகார்த்த2ாவலம்ப3நம் ||" இவற்றில் அர்த்த2ஸ்வப4ாவமாவது — ஈஶ்வரனைப்போலே பித்ருத்வாநுரூபமான ப்ரதாபோஷ்மலத்வம் கலசாதே மாத்ருத்வ ப்ரயுக்தங்களான வாத்ஸல்யாதி3கள் அதிஶயித்து. "ந கஶ்சிந்நாபராத்4யதி" "க: குப்யேத் வாநரோத்தம" "மர்ஷயாமீஹ து3ர்ப3லா" என்கையே ஸ்வப4ாவமாயிருக்கையும், வால்லப்4யாதிஶயத்தாலே, இவளை முன்னிட்டால் அவன் மறுக்கமாட்டாதொழிகையும். இவ்வர்த்த2ஸ்வப4ாவத்தாலே இவளைப் பற்றுவார்க்குப் புருஷகாராந்தராபேக்ஷை உண்டாய் அநவஸ்தை2 வாராது. அநுஷ்ட2ாநமாவது:— ப்ரஹ்லாத3 விஷயத்தில் ப்ரேமாதிஶயத்தாலே. ப்ரதிகூல விஷயத்தில் பிறந்த சீற்றத்தின் கனத்தைக் கண்டு அணுக அஞ்சின ப்3ரஹ்மாதி3கள் இவளை ஶரணமாகப்பற்றி இவள் முன்னிலையாக ஸ்ரீந்ருஸிம்ஹரூபனை ஸர்வேஶ்வரனைக் கிட்டி ஸ்தோத்ரம் பண்ணினார்கள் என்று புராண ப்ரஸித்3த4ம். "ஸீதாமுவாச அதியஶா: ராக4வம் ச மஹாவ்ரதம்" "ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்த2ம்" இத்யாதி3களிலும் கண்டுகொள்வது. லோகத்3ருஷ்டியாவது— அந்த:புர பரிஜநத்தை அபராத4பூ4யஸ்தையுண்டானாலும் ராஜாக்கள் அல்பங்களான ப்ரஸாத3நங்களாலே க்ஷமிக்கக்

இரண்டிடத்திலும் உறவு வேண்டுகையாலே சேதனர்க்குத் தாயாய் முன்னிலே தேடாமல் பற்றி ஸ்வரூபம் பெறலாய், அவனுக்கு தி3வ்யமஹிஷியாய்க் கிட்டித்தன் ஸ்வரூபம்பெறலாய்

காண்கை. இவ்வர்த்த2ம் "மாதர் லக்ஷ்மி யதை2வ மைதி2ல ஜந:" என்கிற ஶ்லோகத்திலும் விவக்ஷிதம். கு3ருக்தி யாவது—நம்மாழ்வார் முதலான ஆசார்யர்களுடைய "அகல கில்லேன்" முதலான பாசுரங்கள். இவற்றுக்கு மூலமான ஸக்திவிஶேஷ ரூபைகளான ஶ்ருதிகளையும் கண்டு கொள்வது. இவையடியாக வந்த ஸ்ம்ருதிகளாவன— "வாச: பரம் ப்ரார்த்த2யிதா ப்ரபத்3யேந்ஶியத: ஶ்ரியம்" இத்யாதி3களான ஶௌநகாதி3 வாக்யங்கள். இப்படி இவளுக்கு ஸர்வேஶ்வரன் திருவடிகளில் க4டகத்வம் ப3ஹு ப்ரமாண ஸித்3த4மாகையால் இங்கும் இவ்விவக்ஷைகொள்ள உசிதம். வ்யுத்பத்தி த்3வயத்தாலும் — ஸேவிக்கப்படா நின்றாள், ஸேவியா நின்றாள் என்று ஸேவாவிஷயமாயிருக்கும் ஸேவைக்கு ஆஶ்ரயமுமாயிருக்கும் என்கிறது. "ஈஶ்வரீம் ஸர்வபூ4தாநாம்" "விஷ்ணுபத்நீ" என்னக் கடவதிறே. சேதனர்களாலே ஸேவிக்கப்படா நின்றாள்; ஆகையாலே ஸேவா விஷயமாயிருக்கும். தான் ஈஶ்வரனை ஸேவியா நின்றாள்; ஆகையாலே ஸேவாஶ்ரயமுமாயிருக்கும். ஆனபோதிறே கர்மகர்த்ருபா4வவிரோத4மின்றிக்கேயொழிவது. (புருஷகாரமான) என்று—"நேத்ருத்வம்" என்றருளிச்செய்தாரிறே ஸ்ரீபராஶரபட்டர். இத்தால் பிராட்டிக்குப் புருஷகாரத்வமே அஸாதா4ரணமென்று தோற்றுகிறது. இத்தால் இவளுக்கு உபாயத்வமில்லை என்கிறது. உபாயத்வமில்லையென்கிறது எங்ஙனேயென்னில்-"மாமேகம் ஶரணம் வ்ரஜ" "தமேவ ஶரணம் க3ச்ச2" "மாமேவ யே ப்ரபத்3யந்தே" "தமேவ சாத்3யம் புருஷம்" "யோ ப்3ரஹ்மாணம் வித3தா4தி பூர்வம் யோவை வேதா3ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை| தம் ஹ தே3வம் ஆத்மபு3த்3தி4 ப்ரஸாத3ம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்3யே||" நாகணையிசை

நம்பிரான் சரணே சரண்" "கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்" "களைகண் மற்றிலேன்" இத்யாதி₃களில் வ்யக்த்யந்தர நிஷேத₄பூர்வகமாக ஸர்வகாரணவஸ்துவுக்கே உபாயத்வத்தை விதி₄க்கையாலே. ஆக, பிராட்டிக்குப் பு₄ருஷகாரத்வம் விஶேஷம்—அஸாத₄ாரணாகாரம். ப₄க₃வானுக்கு விஶேஷம்—அஸாத₄ாரணாகாரம் உபாயத்வம் என்றபடி.

" *ஸ்ரீமந்நாராயணசரணௌ* " என்று உபாயதயா வக்ஷ்யமாணனை நாராயணனுக்கு விஶேஷணமாக ஸ்ரீமத்தையைச் சொல்லாநின்றால், நாராயண ஶப்₃த₃த்தினுல் சொல்லப்புகுகிற கு₃ணவிஶேஷங்கள் விஶேஷணத்வேந உபாயஶரீரத்தில் அந்விதமாகிறவோபாதி, இவளும் உபாயாவயவமாக ப்ராப்தையுமாய், மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து ப்ரஜாரக்ஷணம் பண்ணுகை ப்ராப்தமுமாய், அதுக்கு மேலே "வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்" என்று உபாயக்ருத்யமான விரோதி₄நிவர்த்தகத்வம் இவ்வர்த்த₂த்திலே நிஷ்ட₂ரான நம்மாழ்வார் திருவுள்ளத்தாலுமுண்டாய், ப்ரதே₃ஶாந்தரங்களில் இவளைப் புருஷகாரமாக நினைத்துச் சொல்லுகிறார்களென்கிற அவையும் உபாயபா₄வத்திலே அந்வயிப்பிக்க யோக்₃யமுமாய், அதுக்கு மேலே, " *அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய:* " என்று மேலே அநுஷ்டி₂க்கப்புகுகிற ப்ரபத்தி தானே, புருஷகாரக்ருத்யத்தைச் செய்யவற்றாகையாலும், மாட்டாதாகில், இவள் ஸ்வாதந்த்ர்யத்தை ஆற்றிச் சேரவிட, உபாயபூ₄தனை ஈஶ்வரன் ரக்ஷிக்க அமைந்திருக்க உபாயாந்விதமான இவனுடைய ப்ரபத்த்யநுஷ்டா₂நம் நிஷ்ப₂லமாம்படியுமாயிருக்க, இவளுக்கு உபாயஶரீரத்திலே அந்வயமில்லை; புருஷகாரத்திலே என்று ஒதுக்கித் தருவார் ஆரென்னில்:

விஶேஷணத்வமுண்டேயாகிலும், விஶேஷணபூ₄தமான கு₃ணவிஶேஷங்களோபாதி, உபாயோபயோகி₃த்வம் அவளுக்கில்லாமையாலும், ஸமாஶ்ரயணைகாந்தமான ஸௌஶீல்யாதி₃ கு₃ணைத₃யவிரோதி₄யான ஸ்வாதந்த்ர்யத்தைப் புருஷகாரபூ₄தையான இவள் ஆற்றினாலும், அவன் கார்யம் செய்யும்போதைக்கு " *ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே* " என்கிறபடியே உபாயப்ரார்த்த₂நாரூபமான ப்ரபத்தி வேண்டுகையாலும், "வினை தீர்க்கும்" என்கிற இடம்

"களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைக்கண் மற்றிலேன்" என்கிறவருடைய உக்தியாகையாலே, இத்திருவாய்மொழி அநுஸந்தி4த்தவர்கள் பக்கல் இவளுக்குண்டான ஆத3ராதிஶயப்ரகாஶக மாகையாலும், இவளுக்குப் புருஷகாரபா4வத்திலே நோக்காகக் கடவது.

இவளுக்கு, உபாயபா4வத்தில் அந்வயமுண்டாகில், ஸாத4ந பூ4தமான கர்மஜ்ஞாநாதி3களுக்கு *"ப2லமத:" "ஸ ப்ரீதோலம் ப2லாய"* என்று, ஆராத4நப்ரீதனான ஈஶ்வரமுக2த்தாலே இஷ்டா நிஷ்டப்ராப்திபரிஹாரரூபமான ப2லஸித்3தி4 இவளாலேயாதல், அங்ஙனன்றியிலே ப2லோபபாத3நஹேதுவான ஜ்ஞாநஶக்த்யாதி3 களுக்கு உத்பாத3கையாதலாகவேண்டும். தான் ப2லப்ரஸாத3கை யாகில், *"யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" "பராஸ்ய ஶக்திர் விவிதை4வ ஶ்ருயதே ஸ்வாபா4விகீ ஜ்ஞாநப3லக்ரியா ச" "தேஜோப3லைஶ்வர்ய மஹாவபோ3த4ஸுவீர்யஶக்த்யாதி3கு3ணைகராஶி:"* என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ஈஶ்வரனுக்குச் சொல்லுகிற ஜ்ஞாநஶக்த்யாதி3கு3ண விஶேஷங்களின்றியிலே ஒழியவேணும் உண்டாகில் இவளை யொழியவே ஈஶ்வரன்றானே கார்யம் செய்ய க்ஷமனே. அக்கு3ணங் களை உத்பாதி3க்கிறாளாகில் கு3ணங்களுக்கு ஸ்வாபா4விகத்வ மின்றியிலே ஒழியும்.

ஸௌஶீல்யாதி3களோபாதி திரோஹிதமானவற்றை ப்ரகாஶிப் பிக்கிறாளென்னில் ; ஜகத்ஸ்ருஷ்டிஸ்தி2தி ஸம்ஹாராதி3களிலே இடைவிடாமல் விநியோக3ங்கொண்டு போருகிற ஜ்ஞாநஶக்த்யாதி3 களுக்கு, ஸௌஶீல்யாதி3திரோத4ாயகமான ஸ்வாதந்த்ர்யத்தோபாதி ஒரு திரோத4ாநமில்லையே. உண்டாகில் ஸ்ருஷ்ட்யாதி3கள் நடவா தொழியவேணும். ஸர்வதா2 அந்விதையாமாகில் ஸ்வவிரோதி4 நிவ்ருத்தியில் *"தத் தஸ்ய ஸத்3ருஶம் ப4வேத்"* என்றிருக்கக் கூடாதே. கு3ணவிஶேஷங்களே அமைகையன்றோ, *"ஆஶம் ஸேயம் ஹரிஶ்ரேஷ்ட2 க்ஷிப்ரம் மாம் ப்ராப்ஸ்யதே பதி:, அந்த ராத்மா ஹி மே ஶுத்3த4ஸ் தஸ்மிம்ஶ்ச ப3ஹவோ கு3ணா:"* என்று தன் பக்கல் அநந்யோபாயத்வமும் அவன் பக்கல் கு3ணவிஶேஷங் களுமே ப2லஸித்3தி4க்கு அபேக்ஷிதமாகத் தான் அறுதியிட்டு வைத்தது.

நாம் உபாயமாக யாதொரு வஸ்துவை ஸ்வீகரிக்கிறோம்; அவ்வஸ்துவுக்கு இவள் ஸ்வரூபம் நிரூபகமாகையாலே. ப்ரண வத்தில் ப்ரத₂மபத₃த்திற்போலே *"யத்₃யபி ஸச்சித்த:"* என்கிற கு₃ணஸித்₃தி₄ந்யாயத்தாலே, அவர்ஜநீயமாய் அந்வயியாதோ? என்னில்: ஸ்வரூபநிரூபகத்வேந அவர்ஜநீயபா₃ந்த₄முண்டேயாகிலும், உபாயத₃சையில் கண்டுகொள்வதொரு ப்ரயோஜநமில்லாமையாலே, ஸ்வரூபநிரூபகங்களான ஜ்ஞாநாநந்த₃ங்களோபாதியும் ஸ்வரூபா ஶ்ரயமான கு₃ணாந்தரங்களோபாதியும் குமிரிருந்து போமத்தனை.

இவற்றுக்கு ப்ரயோஜநமின்றிக்கே ஒழிகைக்கு ஹேது அவனுடைய நைரபேக்ஷ்யமாகில், சில கு₃ணவிஶேஷங்கள் உபாயதயா அந்வயிக்கிறபடி என்னென்னில்: அவை கார்யோபயோகி₃பாகையாலும், கு₃ணத்வேந அப்ருத₂க்₃பூ₃த₃ஸி₄ப்ரவ்ருத்திகமாகையாலும், கு₃ணி கு₃ணத்₃வாரா கார்யம்செய்கை நைரபேக்ஷ்யத்துக்குக் குறையில்லாமையாலும், அவற்றுக்குத் தட்டில்லை இவள் கார்யாநுபயுக்தையாகையாலும், த்₃ரவ்யத்வேந ப்ருத₂க்₃பூ₃த₃ஸி₄ப்ர வ்ருத்தி யோக்₃யதையுண்டாகையாலும், அத்தாலே உபாயநைர பேக்ஷ்யத்துக்குக் கொத்தையாயறுகையாலும், உபாயபா₄வத்தில் அந்வயமில்லை ஆகையாலே, ஶேஷித்வத₃சையிலும் ப்ராப்யத்வ த₃சையிலும் ஒரு மிது₂நமேயாகவேண்டினவோபாதி, உபாய த₃சையிலே ஸ்வேதரஸகலஸஹாயாஸஹமாயிருக்கையாலே, இவளுக்கு உபாயபா₄வத்தில் அந்வயமின்றியிலே புருஷகாரபா₄வத்திலேயாகக் கடவது.

இச்சேதநனோட்டை ஸம்ப₃ந்த₄ம், ஈஶ்வரனுக்கும் பிராட்டிக்கும் ஒத்திருக்க, அவன் புருஷகாரத்₃வாரா ஸமாஶ்ரயணீயனாகைக்கும், இவள் புருஷகாரபூ₄தையாகைக்கும் ஹேது என்னென்னில்: அவன் புருஷோத்தமனாய், பும்ஸ்த்வப்ரயுக்தமாய் வரும் காடி₂ந்யம் நடையாடுகையாலும், *"தே₃வதே₃வோ ஹரி: பிதா"* என்கிற படியே பித்ருத்வப்ரயுக்தமாய் வரும் ஹிதபர வத்தாலும், அதுக்கு மேலே ஸ்வேதரஸகலபத₃ார்த்த₂ஸார்த்த₂நிருபாதி₄க நிர்வாஹக னாகையாலே "த₃ஹ; பச" என்னும்படியான க்ரௌர்யத்தாலும், அவனை ஆஶ்ரயிக்கும்போது புருஷகாரத்₃வாரா ஆஶ்ரயிக்கவேண்டும். இவள் நாரீணாமுத்தமையாகையாலே, ஸ்த்ரீத்வப்ரயுக்தமாய் வரும்

மார்த₃வத்தாலும். "*த்வம் மாதா ஸர்வலோகாநாம்*" என்கிற படியே மாத்ருத்வப்ரயுக்தமான வாத்ஸல்யாதிஶயத்தாலும், தத்தத் கர்மாநுகு₃ணநிர்வஹணமில்லாமையால் வரும் மாது₄ர்யத்தாலும், அவனிற்காட்டில் இவளுக்கு நெடுவாசியுண்டாகையால் இவள் புருஷகாரபூ₄தையாகக்கடவள். (புருஷகாரபூ₄தையான பிராட்டி உத்₃ப₄வித்த வாத்ஸல்யாதி₃கு₃ணவிஶிஷ்டன் உபாயம் என்றபடி.)

இந்த கு₃ணோத₃யத்துக்குப் புருஷகாராபேக்ஷையுண்டாகில், உபாயம் ஸாத்₄யமுமாய் ஸாபேக்ஷமுமாம்; அநுத்₃பூ₄தமான கு₃ணங்கள் உத்₃பூ₄தங்களாகிறதாகையாலே. உபாயத்துக்கு ஸாத்₄யத்வமுண்டாம்; உபாயஸ்வரூபோத்பத்திக்கு ஸஹகாரிஸாபேக்ஷத்வமுண்டாகையாலே, ப₄க்தியோபாதி அங்க₃ஸாபேக்ஷத்வமுமாம்; ஸ்வரூபக₃தமாய் திரோஹிதமாய்க் கிடந்தத்தை ப்ரகாஶிப்பிக்குங்காட்டில் புருஷகாரத்துக்கு அங்க₃ஸாத₄நத்வம் உண்டாமோ? என்ன ஒண்ணாதபடி. ஆத்மத₄ர்மமான ப₄க்தி விஶேஷத்துக்கு ப்ரகாஶகமான கர்மயோக₃ாதி₃களை அங்க₃ஸாத₄நமாகச் சொல்லாநின்றது; அதுக்கு மேலே, ஆத்மத₄ர்மமாய் அப்ரகாஶமான அபஹதபாப்மத்வாதி₃கு₃ணங்களை ப்ரகாஶிப்பிக்கிற ஈஶ்வரனுக்கு ப்ரத₄ாநஸாத₄நத்வவ்யவஹாரம் உண்டாகாநின்றது. ஆகையாலே, உபாயாந்தரவ்யாவ்ருத்திரூபமான ஸித்₃த₄த்வநைரபேக்ஷ்யங்கள் இரண்டும் குலையுமே என்னில்: உபாயமாவது:— இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரகரமாய் இருப்பதொன்றாய், அப்படிப்பட்ட உபாயமாவது, ஜ்ஞாநஶக்த்யாதி₃கு₃ணவிஶிஷ்டனான ஈஶ்வரனாகையாலே வாத்ஸல்யாதி₃கு₃ணங்களுக்கு உபாயத்வமில்லை; உள்ளது ஆஶ்ரயணைகாந்ததையே. ஆகையாலே உபாயபூ₄தமான ஜ்ஞாநஶக்த்யாதி₃களுடைய உத்பத்த்யாதி₃களுக்குப் புருஷகாராபேக்ஷை இல்லாமையாலே. உபாயாந்தரவ்யாவ்ருத்திரூபமான ஸித்₃த₄த்வத்துக்கும் நிரபேக்ஷத்வத்துக்கும் ஒரு குறையில்லை. ஆகையிறே, "*மாம்*" என்கிற ஸ்வீகாரவிஷயத்திலே ஸ்வீகாரோபயோகி₃யான ஸௌஶீல்யாதி₃களை அநுஸந்தி₄த்து, "*அஹம்*" என்கிற பாபவிமோசகன் பக்கலிலே ஜ்ஞாநஶக்த்யாதி₃களை அநுஸந்தி₄த்தது.

ப்₃ரஹ்ம ஸ்வரூப க்₃ராஹக ப்ரமாணம் "யேந ஜாதாநி ஜீவந்தி" இத்யாதி₃களிலே *உபாயத்வேந க்₃ரஹிக்கை*

யாலும். "ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற உக்த்யநந்தரம் ஶோகநிவ்ருத்தி பிறக்கையாலும். இவ்வுக்திக்குமுன் ஶோகநிவ்ருத்தி பிறவாமையாலும். அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்தி நிர்ஹேதுக க்ருபா விஶிஷ்டனை ஸர்வேஶ்வரன்தன்னாலே உபபந்நமாகையாலும். "ஸர்வலோக ஶரண்யாய" என்று ஸர்வஶரண்யனைச் சொல்லுகையாலும். இவள் ஸ்வரூபத்தை உபாயத்வேந க்3ரஹிப்பதொரு ப்ரமாணமில்லாமையாலும், இவளுடைய உக்தியையொழிய ப4க3வது3க்தியாலே ஶோக நிவ்ருத்தி பிறக்கையாலும். இவள் ஸஹகரியாதபோதும் உபாயத்வம் உபபந்நமாகையாலும். இவளுக்கு உபாயத்வம் இல்லையென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். இவளுக்குப் புருஷ காரத்வமே ஸ்வரூபமென்றும், உபாயத்வமே தனக்கு ஸ்வரூபமென்றும் ப4க3வச்சா2ஸ்த்ரத்திலே எம்பெருமான் தானே அருளிச்செய்தானிறே—"மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத4:। லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்தி3ஷ்டா பரமர்ஷிபி4:॥ மமாபி ச மதம் ஹ்யேதந் நாந்யதா2 லக்ஷணம் ப4வேத்॥" "அஹம் மத்ப்ராப்த்யுபாயோ வை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி: ஸ்வயம்। லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா4 ப்ராப்தியோகி3நீ॥ ஏதஸ்யாஶ்ச விஶேஷோऽயம் நிக3மாந்தேஷு ஶப்3த்3யதே॥ ஆகிஞ்சந்யைகஶரணா: கேசித் பா4க்3யாதி4கா: புந:। மத்பதா3ம்போ4ருஹத்3வந்த்3வம் ப்ரபத்3ய ப்ரீதமாநஸா:। லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந। மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேஶ ப்ராப்யம் ப்ராபகமேவ மாம்॥ லப்3த்4வா க்ருதார்த்தா2: ப்ராப்ஸ்யந்தே மாமேவாநந்யமாநஸா:॥" இத்யாதி3களாலே. இத்தால், க்ஷமாத்3யுத்3பா4வநத்3வாரா ப4க3வதீ3யோபாயபா4வப்ரயோஜகத்வமாகிற புருஷகாரத்வம் பிராட்டிக்குத் ததி3தராவ்ருத்தியாய். தத்3வ்ருத்தியான த4ர்மமென்றும். உபாயாநபேக்ஷ உபாயத்வமாதல். ப2ல ப்ரத3த்வே ஸதி ப2லகரணத்வமாதலாகிற உபாயத்வம்ஈஶ்வர

னுக்கு அஸாத4ாரண த4ர்மமென்றும் சொல்லிற்றுய்த்து. (அந்யதா2 லக்ஷணம் ந ப4வேத்) ப்ராப்தி பூர்வப4ாவியாய், புருஷகாரத்வாதிரிக்தமாய். ப்ராப்த்யுயோகி3யான அஸாத4ாரண த4ர்மமில்லை என்றபடி. இங்கே '' அந்யத் லக்ஷணம் நாஸ்தி'' என்கிற இத்தாலே புருஷகாரத்வம் லக்ஷணம் என்று ஸித்3த4ம் என்று கருத்து. (அஹம்) இத்யாதி3— ''லக்ஷ்மீபதி: அஹம் ஸாக்ஷாத் ஸ்வயம் மத் ப்ராப்த்யுபாய:'' (லக்ஷ்மீபதி:) என்று விஶ்வாஸஹேது புருஷகார ஸம்ப3ந்த4மும். (ஸாக்ஷாத்) என்று உபாயாந்தர வ்யாவ்ருத்தியும். (ஸ்வயம்) என்று லக்ஷ்மீவ்யாவ்ருத்தியும் ஸித்3த4ம். (லக்ஷ்மீ:) இத்யாதி3—(மம வல்லப4ா லக்ஷ்மீ: புருஷகாரேண ப்ராப்தி யோகி3நீ) புருஷகாரத்வமாகிற ப்ராப்தி ஸம்ப3ந்த4த்தையுடையவளென்றபடி. இங்கே. (மம வல்லப4ா) என்று புருஷகாரஹேதுவால்லப்4யம் சொல்லிற்று. இங்கே. ''ரத2ந்தரே ப்ரஸ்தூயமானே ஸம்மீலயேத்| ப்3ருஹதி ப்ரஸ்தூயமானே ஸமுத்3ரம் மநஸா த்4யாயேத்'' இத்யத்ர. ரத2ந்தர ஸாமம் ப்ரஸ்தூயமானமாய் இருந்துள்ளவளவில் ஸம்மீலநமும். ப்3ருஹத்ஸாமம் ப்ரஸ்தூயமாநமாயிருந்துள்ளவளவில் ஸமுத்3ரத்4யாநமும், ''ஸாம்நோர் வ்யவஸ்த2யா யஸ்மாத் நிர்தே3ஶோ மீலநாதி3ஷு| தஸ்மாந் ந ஸங்கரோ யுக்த: ந த்வேவம் ப்ரோக்ஷணாதி3ஷு'' என்று வ்யவஸ்தா2ம்நாநத்தாலே வ்யவஸ்தி2தங்களென்று. ''ஏகார்த்த2த்வாத் விப4ாக3: ஸ்யாத்'' என்கிற நாவமிகாதி4கரணத்திலே நிர்ணயிக்கப்பட்டது. அந்த ந்யாயத்தாலே ''அஹம் மத்ப்ராப்த்யுபாய:. லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லப4ா ப்ராப்தியோகி3நீ'' என்று வ்யவஸ்தா2ம்நாநத்தாலே. ஈ ஶ் வ ர னு க் கு உபாயத்வமும் பிராட்டிக்கு புருஷகாரத்வமும் வ்யவஸ்தி2தமென்று ஸ்பஷ்டம். (ஏதஸ்யாஶ்ச விஶேஷோऽயம்) இத்யாதி3— (அஹம் மத் ப்ராப்தி) இத்யாதி3 பூர்வவாக்யத்திலே ப்ரதிநியத த4ர்மத்3வயம் ப்ராப்தமாகையாலே. ப்ராபகவாக்யாவக3த த்3வித்வவிருத்3தை4கத்வமும் ப்ராபகவாக்யாவக3த

ப₃ஹுத்வ விருத்₃த₄க்₃ரஹைகத்வம்போலே அவிவக்ஷிதம். ஆக, "மம ஏதஸ்யாஶ்ச இமௌ விஶேஷௌ—உபாயத்வ புருஷகாரத்வரூப ப்ரதிநியத த₄ர்மௌ" என்று பர்யவஸிதம். வேதா₃ந்த ப்ரதிபாத்₃யமான அர்த்த₂ம் இந்த ப்ரதிநியத த₄ர்மங்கள் என்கிறவித்தால், ஸர்வத்ர உபாய ப்ரகரணங்களிலே, "உதா₃ராம்" "அம்ருதம் து₃ஹாநா" "பரநிர்வாணதா₃யிநீ" "ஸம்ஸாரார்ணவதாரிணீ" "விமுக்தி ப₂லதா₃யிநீ" "அஹம் ஹி ஶரணம் ப்ராப்தா" "ஶரணம் ப₄வ மேऽம்பு₃ஜே" "ஏஷா ப்ரஸாத₃ ஸுமுகீ₂ ஸ்வ பத₃ம் ப்ராபயிஷ்யதி" "அலமேஷா பரித்ராதும்" "வேரி மாருத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" "பூவளரும் திரு மகளால் அருள்பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்" "அரவிந்த₃ லோசந மந: காந்தா ப்ரஸாதா₃த்" "அஞ்ஜலி பூ₄ரம் வஹதே விதீர்ய" "பத்₃மாயா: தவ ச சரணௌ ந: ஶரணயந்" "அங்ய கல்யாண காரணம்" இத்யாதி₃ரூபேண உபாயத்வ ப்ரதிபாத₃கங்களாக ப்ரதீயமானங்களான வாச்யங்களுக்கு இந்த ப்ரதிநியதத₄ர்மங்களே அர்த்த₂மென்று ப்ரப₃லப்ரமாணமான ப₄க₃வச்சா₂ஸ்த்ரமே வேதா₃ந்த தது₃பப்₃ரும்ஹணஸ்த₂ வாக்யங்களுக்கு வ்யாக்₂யாநம் பண்ணினபடியால் தத்₃விருத்₃த₄கல்பநம் கூடாதிறே. (ஏதஸ்யா: அயம் ச விஶேஷ:) என்றந்வயிக்கில், ஸமுச்சேதவ்யம் ப்ரக்ருதமல்லாமையாலே ஸமுச்சயம் வ்யர்த்த₂மாம். (ஏதஸ்யா: அயம் து விஶேஷ:) என்னப் பார்க்கில், சகாரத்துக்குத் "து" ஶப்₃தா₃ர்த்த₂த்வம் க்₃லிஷ்டம். சகாரத்துக்கு பி₄ந்நக்ரமத்வமும் க்லிஷ்டம். (அயமேவ விஶேஷ:) என்னப்பார்க்கில், விஶேஷாந்தரங்கள் பலவுமிருக்கையாலே பா₃த₄மும் ப்ரஸங்கி₃க்கும். இருவர்க்கும் த₄ர்மப்ரதிநியமம் ப்ரக்ராந்தமாகையாலே, புருஷகாரத்வ மாத்ரத்துக்கு நிக₃மாந்த ப்ரதிபாத்₃யத்வகத₂நம் ந்யூநமாகையாலே, (ஏதஸ்யாஸ்து அயம் விஶேஷ: நிக₃மாந்தேஷு ஶப்₃த்₃யதே) என்னவும் கூடாது. ஆகையாலே, "மம ஏதஸ்யாஶ்ச இமௌ விஶேஷௌ நிக₃மாந்தேஷு

ஶப்3த்3யேதே" என்றே பொருளாகக் கடவது. உபாயத்வத்தில் ப்ரமாணமாக ப்ரத்யாஶாவிஷய வசநங்களெல்லாம் உப4யாப்4யுபேத புருஷகாரத்வத்திலே உபக்ஷீணங்களாகையாலே அநந்யதா2 ஸித்3த4ப்ரமாணமுமில்லை. "ஸப்4ராது: சரணௌ கா3ட4ம் நிபீட்3ய" இத்யாதி3களில் பூர்வோக்தரீத்யா பிராட்டிக்கு உபாயதயா வரணமில்லாமையாலும். "ஸீதாமுவாச" என்கிறவித்தை உபாயதயா வரணம் என்னில், புருஷகாரதயா வரணம் அத்4யாஹரித்துக்கொள்ளவேண்டிவருகையாலும், இத்தைப் புருஷகாரதயா வரணம் என்னில், உபாயதயா வரணம் அத்4யாஹரிக்கவேண்டிவருகையாலும், உப4யாப்4யுபேதமான புருஷகாரத்வமே பிராட்டிக்கு ப்ராமாணிகமாகையாலும். புருஷகாரதயா வரணமே 'ஸீதாமுவாச" "ஸீதாஸமக்ஷம்" என்கிறவிடத்தில் விவக்ஷிதம். ஆகவித்தால் சொல்லிற்றுய்த்து-லக்ஷ்மீ விஶிஷ்டமாய், கு3ணவிஶிஷ்டமாய், விக்3ரஹ விஶிஷ்டமான வஸ்து உபாயம் என்னுமிடத்தில் யாதொருபடி வாத்ஸல்யாதி3 கு3ணங்கள். உபாய கார்யமான அநிஷ்டநிவ்ருத்த்யாதி3களுக்கு உறுப்பான ஜ்ஞாநஶக்த்யாதி3கள் போலன்றியே. ஆஶ்ரயணஸௌகர்யமாகிற கார்யாந்தரத்துக்கு உறுப்பாயிருக்கும். விக்3ரஹங்களும் ஶுபா4ஶ்ரயத்துக்கு உறுப்பாயிருக்கும். இக்கு3ணங்களில் தான் ஒன்றின் கார்யம் ஒன்றுக்கில்லையே. தனித்தனியே கார்யபே4த3த்தையுடைத்தாயிருக்குமாபோலே லக்ஷ்மீஸம்ப3ந்த4மும் இக்கு3ணோந்மேஷத்தைப்பண்ணிக் கார்யம் செய்வித்துக் கொடுக்கையாகிற புருஷகாரத்வமாகிற கார்யத்திலே உபயுக்தமாயிருக்கும் என்றதாயிற்று. "ஸ்ரீஶ! ஶ்ரியா க4டிகயா த்வது3பாயபா4வே. ப்ராப்யே த்வயி ஸ்வயம் உபேயதயா ஸ்பு2ரந்த்யா" என்று ப்ரதிவாதி3 ப4யங்கரம் அண்ணவும் அருளிச்செய்தாரிறே. மற்றை பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீ3யர்க்கும் இவள் ஸம்ப3ந்த4மடியாக வருகிற புருஷகாரத்வமேயுள்ளது. இவளைப் போலே ஸ்வதஸ்ஸித்3த4மன்றே. ஆகையிறே "ஏதத்

ஸாபேக்ஷ ஸம்ப₃ந்த₄ாத் அந்யேஷாமமலாத்மநாம்। சே₃வீ ஸ்ரீகு₃ரூணாம் ச க₄டகத்வம் ந து ஸ்வத:॥" என்று தீ₃பஸங்க்₃ரஹத்திலே ஜீயரருளிச் செய்தது. ஆகப் புருஷ காரத்வம் பிராட்டிக்கு அஸாத₄ாரணம் என்றதாய்த்து. ஆனால் பரதந்த்ரவஸ்துவுக்கு ஸம்ப்ரதா₄ாநக்ருத்யமான புருஷகாரத்வம் விருத்₃த₄மன்றோ என்னில். ஸ்வதந்த்ரனை ஈஶ்வரன் தன்னுடைய நிருபாதி₄க ஸௌஹார்த்த₃த்தாலே அத்₃வேஷாதி₃ ஸமஸ்தாத்ம கு₃ணங்களையும் ஆசார்ய ஸமாஶ்ரயணத்தையும் உண்டாக்கி, தத்₃த்₃வாரா ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞாநத்தையும் பிறப்பித்து ஸம்ஸார தோ₃ஷத்தையும் ப்ரகாஶிப்பித்து புருஷகார பூர்வகமாக ஆஶ்ரயிக்கவேணுமென்கிற ஸங்கல்பாநுரூபமாக ஆஶ்ரயிப் பிக்கிறானாகையாலே. அவனுடைய ஹ்ருத₃யாநுத₄ாவநம் பண்ணிப் புருஷீகரித்து ஶேஷியான ஈஶ்வரனுக்கு ஶேஷ ப்ரத₃ாநம்பண்ணி அவன் இவர்களையும் ரக்ஷித்துத் தானும் உளளாம்படி அவன் ஸ்வரூபரூபகு₃ணாதி₃களுக்கு அதிஶயமுண்டாக்குகிறாளாகையாலே ஶேஷத்வ பார தந்த்ர்யங்களுடைய கார்யமித்தனையல்லது அவற்றுக்கு விருத்₃த₄மன்று. ஆனாலும் அந்யாதீ₄நாதிஶயம் ஸ்வதந்த்ர வஸ்துவுக்கு அநுரூபமன்றேயென்னில்:—ஸ்வரூபாந்தர்க₃தை யாய்க் கொண்டே இவளுக்கு வஸ்துத்வமாகையாலே. அந் யத்வமில்லாமையாலே ஸ்வாதீ₄ந விப₄வமேயாகக் கடவது. ஆகையாலே அநுரூபமாயிருக்கும். "ஸ்வதஶ் ஶ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி" "ப்ரஸாதநம் புஷ்யந்தீமபி பரி மளர்த்₃தி₄ம்" என்று இவ்வர்த்த₂ விஶேஷங்களை பட்டர் அருளிச்செய்தாரிறே. இவள் அபராத₄ங்களைப் பொறுப்பித் துச் சேரவிட நாம் கைக்கொள்ளக் கடவோம் என்கிற ஈஶ்வர ஸங்கல்பத்தாலும் இவள் புருஷகாரமாகக் குறை யில்லை. இவையித்தனையும் திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறார் (மூன்று) இத்யாதி₃. ப₄ர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே யிருக்கும் மாதாவைப்போலே புருஷகாரபூ₄தையான இவ

a 'நங்கள் திரு' b 'உன் திரு' என்னலாம்படி இரண்டிடத்திலும் விடவொண்ணாத ஸம்பந்தமுண்டு. c 'செல்வர் பெரியர்' d 'அவனெவ்விடத்தான் யானார்' e 'செய்வினையோ பெரிதால்' என்று அவன் பெருமையையும் தங்கள் தண்மையையும் அபராதத்தின் கனத்தையும் நினைத்து அஞ்சினவர்கள் f 'இலக்குமனோடு மைதிலியும்' என்னும்படி தன்னோடு ஒரு கோர்வையான இளையபெருமாளோபாதி g கீழ்மகன், மற்றோர் சாதி, h சிறுகாக்கை, i 'புன்மையாளன், j 'அடியார்' என்று தண்மை பாராமல் நாடும் காடும் மேடும் கல்லும் கடலும் ஒருவெளுப்பாம்படி k 'பங்கயத்தாள் திருவருள்' என்கிற தன்னுடைய காருண்யவர்ஷத்தைச் சொல்லுகிற l மழைக்கண்களையுடைய m பார்வண்ணமாட மங்கையாய், அஶரண்ய ஶரண்யையான இவளே நமக்குப் புகலென்று புகுந்து கைங்கர்யப்ராப்தியுபாயத்தில் அபேக்ஷைகள் தோற்ற விண்ணப்பம் செய்யும் வார்த்தைகளைக் கேட்டு 'அஸ்து தே' என்று தொடங்கி இவர்கள்

ளுக்கும் உண்டான அகார மகாரார்த்தபூத ஜீவேஶ்வர ஸம்பந்தத்தை ஸப்ரமாணமாக அருளிச்செய்கிறார் (நங்கள் திரு உன்திரு) *என்று. வ்யுத்பத்தி த்வயத்தாலுமுண்டான அர்த்தத்தை "யஸ்யா: கடாக்ஷணம் அநுக்ஷணம்" இத்யாதியாலே ஆழ்வான் அருளிச்செய்தார். பெரிய பிராட்டியார்க்குண்டான "கமலா" என்னும் திருநாமம் இவ்வர்த்தத்தை வலியுறுத்தும். "கஶ்ச மஶ்ச கமௌ| தௌ லாதீதி கமலா" என்றிறே வ்யுத்பத்தி. ஆக இவளுக்குண்டான உபயஸம்பந்தம் சொன்னபடி. ஸம்ஸாரி ஜீவாத்மாக்களினுடைய அநாதிகால ப்ரவ்ருத்த விபரீதாசாரங்களையும், நிரங்குஶஸ்வதந்த்ரனை ஈஶ்வரனுடைய தண்டதரத்வத்தையும், நித்யாநபாயிநியான பிராட்டியுடைய புருஷகார க்ருத்யத்தையும் அருளிச்செயல் சந்தைகளைக்கொண்டு தொகுத்தருளிச்செய்கிறார்* (செல்வர் பெரியர்) *என்று தொடங்கி.*

---

a இர-திருவ 56 b திருவாய் 10-10-2 c நாச்-திரு 10-10 d திருவாய் 5-1-7 e திருவாய் 4-7-1 f பெரியதிரு 2-3-7 g பெரியதிரு 5-8-1,2 h பெரியாழ்திரு 3-10-6 i பெரியதிரு 10-2-8 j பெரியாழ்-திரு 4-9-2 k திருவாய் 9-2-1 l திருவிருத்தம் 52 m பெரியதிரு 2-6-2

வினைகள் தீர்த்துத் a தூவி சேரன்னமான தன் சிறகிலே இட்டுக்கொண்டு, ஈஶ்வரன் இத்தலையில் பிழைகளை நினைத்து b எரிபொங்கி c அழல் விழித்துச் d சலம்புரிந்து அங்கு அருளின்றிக்கே சீறிக்கலங்கினவளவிலே e நன்னெஞ்சவன்னமானமை தோற்றக் கால்வாங்கிக் கடக்க நின்று இரண்டு தலையும் பட்டதுபட, நங்கோலரை(ற?)யான குடியிருப்பை முதல் திருத்தவேணுமென்று பார்த்து ஹிரண்யவர்ணையான தன்னுடைய f பான்மொழிகளாலே ப்ரியஹிதங்கள் குலையாதபடி இடமற வார்த்தை சொல்லி ஆறவிட்டு g வடிக்கோலவாள் நெடுங்கண்களாலே தேற்றி h 'திருமகட்கே தீர்ந்தவாறு' என்னும்படி திருவுள்ளம் மாறுடினவளவிலே, ஓடமேற்றிக் கூலி கொள்வாரைப்போலே அபராத₄ங்களைப் பொறுப்பித்துப் i பொன்பாவையானமை தோற்றும்படி விளக்குப் பொன்போலே இரண்டு தலையையும் பொருந்தவிட்டு j 'நமக்கும் பூவின் மிசை நங்கைக்குமின்பன்' என்னும்படி ஏகரஸமாக்கிப் பின்பு அந்த:புரத்தில் ஆளாய்நின்று k 'இரந்துரைப்பதுண்டு', l வேறே கூறுவதுண்டு', m 'நின்று கேட்டருளாய்', n போற்றும் பொருள் கேளாய் என்று இவன் விண்ணப்பம் செய்யும் வார்த்தைகளை o 'திருமங்கை தங்கிய p என்திருமார்வற்கு q ஒருவாய் சொல் r 'என்வாய் மாற்றம் என்னும்படி சேர விருந்து திருச்செவிசாத்துகையாலே, 'ஶ்ருணோதி' 'ஶ்ராவயதி' என்கிறவிரண்டாலும் புருஷகாரமான இவளுடைய

(ஶ்ருணோதி ஶ்ராவயதி என்கிற இரண்டாலும்) இத்யாதி₃— "ஶ்ருணோதி ஶ்ராவயதி" என்கிற வ்யுத்பத்திகளில் "ஸாபராத₄ரான அடியோங்களை ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே காட்டிக் கொடுத்தருளவேணும்" என்று இப்புடைகளிலே ஆஶ்ரிதருடைய ஆர்த்தத்₄வநியைக் கேட்டு ஸர்வேஶ்வரனுக்கு விண்ணப்பம்செய்து இவர்களுடைய ஆர்த்தியை ஶமிப்பிக்குமென்றதாம். (ஶ்ருணோதி) என்றது கேளாநிற்கும் என்றபடி. (ஶ்ராவயதி) என்றது கேட்பியாநிற்குமென்றபடி.

---

a பெரியதிரு 3-7-9 b நானதிருவ 21 c பெரியாழ்திரு 1.8-5 d திருநெடு 6 e பெரியதிரு 7-2-7 f பெரியாழ்திரு 3-10-5 g இர-திருவ82 h முதல்திருவ 42 i நான்திருவ 59 j திருவாய் 4-5-8 k திருச்சந்த 101 l பெரியதிரு6-3-7 m திருவிரு1 n திருப்பாவை29 o நாச்-திரு 8-4 p திருவாய் 6-8-10 q திருவாய் 1-4-7 r திருவாய் 9-7-6

புருஷகாரபா₄வத்துக்கு ஏகாந்தமாக இவளுக்குச் சொன்ன உபா₄யஸம்ப₃ந்த₄த்துக்குமுண்டான ப்ரயோஜன விசேஷத்தைச் சொல்லுகிறது: *"ஶ்ருணோதீதி ஸ்ரீ:" "ஶ்ராவயதீதி ஸ்ரீ:"* என்கிற நிருக்தம். *"ஶ்ருணோதி"* என்று கேட்குமென்கையாலே, சேதநரோடுண்டான ப₃ந்த₄கார்யத்தைச் சொல்லுகிறது. *"ஶ்ராவயதி"* என்று, கேட்பியாநிற்குமென்கையாலே ஈஶ்வரனோடுண்டான ப₃ந்த₄கார்யத்தைச் சொல்லுகிறது.

அதாவது:— இவன் *"ஈஶ்வரதத்வமில்லை"* என்று எழுத்திடு மன்றும், இவன் உருமாயாதபடி இராமடமூட்டுவாரோபாதி, கண் காணாமல் நோக்கிப் போருவது; *கரணகளேப₃ரவிது₄ரமாய்* அசித்கல்பமாய்க் கிடக்க, அபேக்ஷாநிரபேக்ஷமாகவே த₃யமாநமநாவாய்க்கொண்டு கரணகளேப₃ரங்களைக்கொடுப்பது: பின்பு, இவற்றுக்கு ப்ரவ்ருத்திநிவ்ருத்தி ஶக்தியுண்டாகைக்காக அநுப்ரவேஶிப்பது; பின்பு, அஸுரராக்ஷஸாதி₃கள் காலிலே துகையுண்ணும் போது, "நாட்டில் பிறந்து படாதன பட்டு" ராமக்ருஷ்ணாதி₃ ரூபேண மார்பிலே அம்பேற்று, எதிரிகளை இடறிக்கொடுப்பது; "நம்மைப் பெறுகைக்கீடாயிருப்பதொரு அறிவுண்டாமோ" என்னும் நோயாசையாலே, வேத₃ங்களையும், வைதி₃கரையும், ப்ரவர்த்திப்பித்து, இவை படுகிற நோவைக் கண்டு, இவர்களிலும் *"ப்₄ருஶம் ப₄வதி து₃:கி₂த:"* என்று திருவுள்ளம் மிகவும் உடைகுலைப்படுவது; ஸாத₄னங்களாகக் கொடுத்த கரணகளேப₃ரங்களே பா₃த₄கங்களானால், அவற்றைக்கொண்டு அத₄:பதியாமைக்காக, அவற்றை ஒடித்திட்டுவைப்பது; பின்பு, *"ஸ ஏகாகீ ந ரமேத"* என்று நித்யவிபூ₄தியுக்தனான தான் இவற்றையொழியச் செல்லாமை உடம்பு வெளுப்பதாம்படியான நிருபாதி₄கப₃ந்த₄மும், *"ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே"* என்கிறபடியே, இவை படுகிற நோவு பொறுக்கமாட்டாமையாலே "நாம் இழிந்து நோக்குகைக்கு, சிறிது இடம் பண்ணித் தருவது காண்!" என்று அவஸரப்ரதீக்ஷனாவது; *"அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய:"* என்று "நான் அழிந்தேயாகிலும் ஆஶ்ரிதரை ரக்ஷிக்கக்கடவேன்" என்பது; *"தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத் — ந த்யஜேயம் கத₂ஞ்சந" "ஸமோஹம் ஸர்வபூ₄தேஷு"* என்னும் ஸ்வபா₄வவிஶேஷமும்; ஏவமாதி₃களுடைய ஆஶ்ரயணீயனான ஸர்வேஶ்வரன் பக்கலிலே

ஸமவேதமாயிராநிற்கச் செய்தேயும், அப்படிப்பட்டிருக்கிற அவனுடைய வாத்ஸல்யசீதளமான திருவுள்ளத்தை, *"க்ரோத₄மாஹாரயத் தீவ்ரம்"* என்கிறபடியே க்ரோத₄த்துக்கு இரையாக்கிக் கடல் கொதித்தாப்போலே கொதிக்கும்படி பண்ணுவது; *"ப்ரியம்வத₃:"* என்கிறபடியே ம்ருதஸஞ்ஜீவிநியான வாக₃ம்ருதத்தை *"க்ஷிபாமி" "ந க்ஷமாமி" "ஹந்யாம்"* என்கிறபடியே. விஷத₄ாரை போலே ஶ்ரவணகடுகமாம்படி பண்ணுவது; ஸர்வோஜ்ஜீவநஹேதுவான அவனுடைய தி₃வ்யவ்யாபாரங்களை நரகாதி₃களிலே தள்ளிக் குட்டிக்கொலையாக நிறுத்தறுத்துத் தீர்த்துகை யிலே அதி₄க்ருதமாம்படியும். அநாதி₃காலம் பண்ணிப்போருகிற ப₄க₃வத₃பசாரப₄ாக₃வதாபசாராஸஹ்யாபசார நாநாவித₄ாநந்தாபசாராநுஸந்த₄ாநத்தாலே குடல் கரிந்து அநாதி₃காலம் கர்மங்களை நிறுத்தறுத்துத் தீர்த்துப்போருகிற அவனை ஆஶ்ரயிக்கப் புகுகிறது; "அவன் உதிரக்கை கழுவாதபடி பண்ணிப்போந்த நான் ஆஶ்ரயிக்கப் புகுகிறேன்; அதுக்குக் கைதொடுமான கர்மம் இலச்சினைப்படியே குறியழியாமல் கிடக்கிறது." என்கிற ப₄யாதிஶயத்தாலே தேங்கி, ஸம்ஸாரத்தில் வெம்மையும். ப₄க₃வத்₃விஷயத்தில் வைலக்ஷண்யமும் வடிம்பிடுகையாலே. பண்டு போலே ஆஶ்ரயணவிமுக₂னுகமாட்டாதே. து₃ஷ்கரத்வாதி₃களாலே ஸாத₄நாந்தரங்களில் காலிடக்கூசி. புறம்பே போக்கடியற்றுத் தெகிடாடுகிற இச்சேதநன் 'ஈஶ்வரன் திருவுள்ளத்தில் நடையாடுகிற அழல் தீயை ஆற்றி, நம்மைச் சேரவிடுகைக்கு நம்மோடும் அவனோடும் நிருபாதி₄கஸம்ப₃ந்த₄த்தை உடையளாய், *"ந கஶ்சிந் நாபராத்₄யதி"* என்னுமிவளையொழியப் புகுவாசலில்லை' என்று காகவ்ருத்தாந்தாதி₃முக₂த்தாலே அறுதியிட்டு, *"ப்ரணிபாதப்ரஸந்நா ஹி மைதி₂லீ ஜநகாத்மஜா"* என்று புருஷகாரநிரபேக்ஷமாக அஞ்ஜலிமாத்ரஸாலபை₄யான இவளை வந்து கிட்டி, *"மாதர் மைதி₂லி ராக்ஷஸீஸ் த்வயி ததை₃வார்த்₃ராபராத₄ாஸ் த்வயா, ரக்ஷந்த்யா பவநாத்மஜால்லகு₄தரா ராமஸ்ய கோ₃ஷ்டீ₂ க்ருதா"* என்கிறபடியே. "புறம்புள்ள பொருத்தமடைய அற்று. ஈஶ்வரனுக்காளாகாதபடி. பூர்வாபராத₄த்தாலே அஞ்சின எனக்கு நிருபாதி₄கஜநநியான தேவரீர் திருவடிகளொழியப் புகலில்லை; இனி நான் ஈஶ்வரனுடைய இரக்கத்துக்கு இரையாய் ரக்ஷிதனுதல்; அவனுக்கு ஸ்வாதந்த்ர்ய

பாத்ரமாய் நாமத்தோடே தலைக்கட்டுதலொழிய இளைப்பாறுகைக் கிடமில்லாதபடி அநந்யகதி; இனி, அடியேனுக்கு ஹிதமின்ன தென்றறிந்து ரக்ஷித்தருளுகை தேவரீருக்கே பரம்.'' என்று இவன் சொன்ன வார்த்தையைக் கேட்கையும்;

அதுக்கு மேலே வெந்நீருக்குக் குளிர் நீர் போலே நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலே *'' அபீத: பாவகோபமம்* '' என்கிறபடியே அநபிபவநீயனான ஈச்வரனைத் தன்னுடைய பேராக்யதாதிசயத் தாலே பதமாக்கி ''நாயன்தே! இச்சேதநனை அங்கீகரித்தருளீர்'' என்னும்; '' ஆவதென்; *' ச்ருதிஸ்ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா* ' என்று நம்முடைய ஆஜ்ஞாரூபமான சாஸ்த்ரமர்யாதையை அதிலங்கித்து நம் நெஞ்சு புண்படும்படி தீரக்கழிய அபராதம் பண்ணிப்போந் தவனல்லனோ? இவனை அங்கீகரிக்கைபாவதென்?'' என்னும் ஈச்வரன்; '' அவனுடைய பூர்வாபராதங்களை உம்முடைய பொறைக்கிலக்காக்கி ரக்ஷித்தருளீர்'' என்னும் பிராட்டி; '' பொறையை நோக்குகைக்காக சாஸ்த்ரமர்யாதையைக் குடநீர் வழியவோ?'' என்னும் ஈச்வரன்; '' சாஸ்த்ரமர்யாதையை நோக்குகைக்காக உம்முடைய ஸ்வாபாவிகமான க்ஷமாதத்வத் தைக் குடநீர் வழியவோ?'' என்னும் பிராட்டி; '' க்ஷமையை நோக்கில், சாஸ்த்ரமர்யாதை குலையும்; சாஸ்த்ரமர்யாதையை நோக்கில் க்ஷமாதத்வம் குலையும்: இரண்டும் குலையாதொழிய வேண்டும்; செய்யவடுப்பதென்?'' என்னும் ஈச்வரன்; ''கிங்கர்த்த வ்யதாகுலனாயிருந்தால் அத்தனையே; அவை இரண்டும் குலையாத படி வழி சொல்லுகிறேன்; அப்படியே செய்தருளீர்.'' என்னும் பிராட்டி; '' இரண்டும் குலையாமல் இச்சேதநனை நோக்க வழி யுண்டாகில் நமக்குப் பொல்லாதோ? சொல்லிக்காண் '' என்னும் ஈச்வரன்; '' ஆனால், சாஸ்த்ரமர்யாதையை விமுகர் விஷய மாக்குவது; உம்முடைய க்ஷமையை அபிமுகவிஷயமாக்குவது; இரண்டும் ஜீவித்தாயறும் '' என்னும் விஷயவிபாகம் பண்ணிக் கொடுக்கும் பிராட்டி; அத்தைக்கேட்டு '' அழகிய விபாகம்! '' என்று இச்சேதநனை அங்கீகரித்தருளும் ஈச்வரன்; ஆக, இப்படி ஸாபராதஜந்துவை ஈச்வரன் அங்கீகரித்தருளும்படியான வார்த்தைகளைக் கேட்பித்தருளுகையும்.

ஆக, புருஷகாரத்வஸமர்ப்பகமான ஸ்வபாவவிசேஷங்களும், தத்கார்யங்களும் தர்மிக்ராஹகமான ஸ்ரீசப்தத்தாலே சொல்லிற்றாயிற்று.

செயல்களைச் சொல்லுகிறது. a 'செய்தகவினுக்கில்லை கைம் மாறு' என்று இரண்டு தலைக்கும் தலைதடுமாருக உபகரித்துத் தன் சொல்வழி போகவேண்டும்படியான திருவடியோடே மறு தலைக்குமவள், b தான்முயங்கும்படியான பே₄ாக்₃யதைக்குத் தோற்று எத்தைச் செய்வோமென்று தலைதடுமாறி c 'நின்னன் பின்வழி நின்று', d 'அதனின் பின்னே படர்ந்தான்' என்னும் படி விளைவதறியாதே முறுவலுக்குத் தோற்றுத் தன் சொல்வழி வருமவனைப் பொறுக்குமென்னுமிடம் சொல்லவேண்டாவிறே.

இப்படிப் புருஷகார க்ருத்யத்தைச் சொல்லுகிற இதுக் கும் புருஷகார ப₄ாவத்திலே நோக்கு. "மத்பக₃த்₃வந்த்₃வ மேகம் யே ப்ரபத்₃யந்தே பராயணம்। உத்₃த₄ரிஷ்யாம் யஹம் தே₃வி ஸம்ஸாராத் ஸ்வயமேவ தாந்॥" "ஆந்ருஶம் ஸ்யம் பரோ த₄ர்ம:" இத்யாதி₃களை அவன்பக்கலிலே கேட்டு, கபோதத்தைக் கபோதி கேட்பித்தாப்போலே அவஸரத்திலே கேட்பிக்கும் என்னவுமாம். ஸர்வேஶ்வரன் பக்கலிலே லோகஹிதத்தைக்கேட்டு "மித்ரமௌபயிகம் கர்த்தும்" இத்யாதி₃களிற்படியே விபரீதரையும் கூடக் கேட்பிக்கும் என்னவுமாம். விமுக₂நாமபி ப₄க₃வத₃₃ாஶ்ரயண ஶ்ராவயித்ருத்வம் புருஷகாரப₄ாவாநுப்ரவிஷ்டமிறே. எல் லாம் செய்தாலும் நிரங்குஶஸ்வதந்த்ரனை ஈஶ்வரன் சேதந ருடைய அபராத₄ங்களை நிறுத்து அறுத்துத் தீர்த்துவன் என்று நிற்குமளவில், இவளாலே பொறுப்பிக்கப் போமோ? என்ன அருளிச்செய்கிருர் (செய்தகவினுக்கு) இத்யாதி₃— (சொல்லவேண்டாவிறே) இத்யந்தம். "திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப் பிக்கச் சொல்ல வேண்டாவிறே" என்றருளிச் செய்தாரிறே பிள்ளைலோகாசார்யரும். ஆக ஸ்ரீமத்பத₃த்தில் ப்ரக்ருத் யம்ஶத்தை அருளிச்செய்தாராயிற்று.

---

a பெரியதிரு 5-8-2 b மூன்-திருவ 100 c பெரியாழ்திரு 3-10-7
d பெரியதிரு 2-5-6

மதுபர்த்தம்

மதுப்— இவனுமவளுமான சேர்த்தி எப்போதுமுண்டென்கிறது.

இனி ஸ்ரீமத் பத3த்தில் ப்ரத்யயார்த்தத்தை அருளிச் செய்கிறார் (மதுப்) என்று தொடங்கி. மதுப்புத்தான் "பூ4ம நிந்தா3 ப்ரஶம்ஸாஸு நித்யயோகே3திஶாயநே | ஸம்ஸர்கே3ஸ்திவிவக்ஷாயாம் ப4வந்தி மதுபாத3ய: ||" என்று. "த4நவாந்" "மஹிதா3கம் கௌஶலம் ஆயுஷ்மதாம்" "பு3த்3தி4மாந்" "ப்ரப4ாவாந்" "வீர்யவாந்" "ஸ்ப2டிகோ ரக்திமவாந்" "பர்வதோ வஹ்நிமாந்" இத்யாதி3களில் அநேகார்த்த2ங்களில் ப்ரஸித்3த4மிறே; அவற்றில் இங்கு விவக்ஷிதார்த்த2ம் எது என்னில்:— "லக்ஷ்மீம் அநபகா3மிநீம்" "அநந்யா ராக4வேணாஹம் பா4ஸ்கரேண ப்ரபா4 யதா2" "அநந்யா ஹி மயா ஸீதா பா4ஸ்கரேண ப்ரபா4 யதா2" "தஸ்யாநபாயிநீ ஶக்தி: தே3வீ தத்3த4ர்ம த4ர்மிணீ" "மம ஸர்வாத்ம பூ4தஸ்ய நித்யைவைஷாநபாயிநீ" "நித்யைவைஷா ஜக3ந்மாதா விஷ்ணோஶ்ஸ்ரீரநபாயிநீ" "அப்ருத2க்சாரிணீ ஸத்தா மஹாநந்த3மயீ பரா" இத்யாதி3 ப்ரமாணாந்தர ஸித்3த4 நித்யயோகே3 மதுப்பாகிறது. இத்தால் புருஷகாரபூ4தையான பிராட்டியும் ஈஶ்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போதுமுண்டு என்றபடி. "பூ4ம நிந்தா3 ப்ரஶம்ஸாஸு" என்று அநேகார்த்த2மாயிருந்ததேயாகிலும் இங்கு மதுப் உபயோக3விஶேஷத்தாலே ப்ரமாண ஸித்3த4மான நித்யயோக3த்தைச் சொல்லுகிறது. விக்3ரஹத்தில் ப்3ரஹ்மசர்யாவஸ்தை2யிலுங்கூட "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வது4ம் வக்ஷ:ஸ்த2லாலயாம்" என்னும்படியிறே நித்யயோக3மிருப்பது. அப்ருத2க்ஸித்3த4 வஸ்துவுக்கு "ஸ்ரீமாந்" என்று மத்வர்த்தீ2ய ப்ரத்யய ஸாபேக்ஷமாக ஸாமாநாதி4கரண்யம் கூடுமோ? என்றும், ப்ருத2க்ஸித்3த4மாகில் "கீர்த்தி: ஸ்ரீ: வாக் ச நாரீணாம்" என்றும் "பூவில் வாழ் மகளாய்" என்றும் மத்வர்த்தீ2ய

ப்ரத்யய நிரபேக்ஷமாக ஸாமாநாதி₄கரண்யம் கூடுமோ என்றும் சிலர் சொல்லும் சோத்₃யங்கள் இரண்டும் மந்த₃ங்கள். எங்ஙனேயென்னில்:— "தத்₃கு₃ணஸாரத்வாத்து தத்₃வ்யபதே₃ஶ: ப்ராஜ்ஞவத்" என்கிற ந்யாயத்தாலே ஜ்ஞாநகு₃ணத்தையிட்டு ஆத்மாவை ஜ்ஞாநமென்று சொல்லாநிற்கச் செய்தே. "ஜ்ஞாநவாந்" என்று மத்வர்த்தீ₂யப்ரத்யயாந்விதமாகவும் ஸாமாநாதி₄கரண்யம் உண்டாகிறாப்போலே இங்கும் குறையில்லை. ஆகையால் மத்வர்த்தீ₂யப்ரத்யயமாத்ரத்தைக்கொண்டு ப்ருத₂க்ஸித்₃த₄மென்று நிஶ்சயிக்கப் போகாது. "நரபதிரேவ ஸர்வே லோகா:" இத்யாதி₃களிற்போலே விவக்ஷாந்தரம் ஸம்ப₄விதமான விடத்தில் இப்ரத்யயமில்லாத ஸாமாநாதி₄கரண்ய மாத்ரத்தைக்கொண்டு ப்ருத₂க் ஸித்₃த₄மன்று என்னவொண்ணாது. ஆன பின்பு, விஶத₃மாக ப்ரதிபாதி₃க்கும் ப்ரமாணாந்தரங்களைக்கொண்டு இவ்வஸ்துஸ்தி₂தியிருக்கும்படி தெளிய ப்ராப்தம். இங்கு உபாயத₃ஶையிலும் ப₂லத₃ஶையிலும் ப்ரமாணங்கள் நித்யயோக₃த்தைச் சொல்லுகையாலும், இம்மந்த்ரத்தில் இவ்வர்த்த₂ம் ப்ரகாஶிப்பிக்கை அபேக்ஷிதமாகையாலும். பூர்வோத்தரக₂ண்ட₃ங்களில் மதுப்பாலே "ஸ ப்₄ராது: சரணௌ கா₃ட₄ம்" "ப₄வாம்ஸ்து ஸஹ வைதே₃ஹ்யா" என்கிறபடியே பிரிவற்றபடி சொல்லிற்றாயிற்று. நம்மாழ்வாரும் "அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா" என்றும், "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்றும், "இங்கு மங்கும் திருமாலன்றியின்மை கண்டு" என்றும் உபாயத₃ஶையிலும் ப₂லத₃ஶையிலும் ஶ்ரீமச்ச₂ப்₃த₃த்திற்சொன்ன நித்யயோக₃த்தை அநுஸந்தி₄த்தார். இவ்வநுஸந்த₄ாநம் ஸாபராத₄ர்க்கு அணியிடாதே, நினைத்தபோதே ஆஶ்ரயிக்கைக்குறுப்பாம். "ஆஶ்ரயண வேளையோடு போ₄க₃வேளையோடு வாசியற ஒரு மிது₂நமே உத்₃தே₃ஶ்யம்" என்றிறே நம்பிள்ளை ஈட்டிலே தி₃வ்யஸூக்தியிருப்பது. "ஶ்ரிய:பதி: நிகி₂லஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாந: ஸ்வேதர ஸமஸ்த

வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைத₃க ஸ்வரூப:" என்று ஸ்வரூபநிரூபகமான ஜ்ஞாநாநந்தா₃தி₃களுக்கு முன்னே ஶ்ரிய: பதித்வத்தைச் சொல்லும்படி அவன் ஸ்வரூபத்துக்கு ப்ரதா₄ந நிரூபகையாயிருக்கையாலே இவளோடே கூடியே வஸ்துவினுடைய ஸத்₃பா₄வம் இருப்பது என்றபடி. ஆக இந்நித்ய யோக₃ம் ஸ்வரூபாநுப₃ந்தி₄த்வ ப்ரயுக்தம் என்றதாயிற்று.

இப்படி, புருஷகாரபூ₄தையாயற்றாலும் இவள் அஸந்நிஹிதையாயிருக்குமாகில், "*சஞ்சலம் ஹி மந:*" "*சலசித்தம்*" "நின்றவா நில்லா நெஞ்சு" என்கிறபடியே, சூறாவழிக்காற்றுப் போலே சுழன்று வருகிற இஸ்ஸம்ஸாரி சேதநருடைய நெஞ்சு தளமாக அங்குரித்த ருசியாகையாலே, க்ஷணப₄ங்கு₃ரையாயிருக்குமாகையாலே, அது தீவதற்கு முன்னே ஈஶ்வரனை ஆஶ்ரயிக்கைக்கு விரகற்றுப் பழைய குருடே ஆய்விடும் என்கிற ஶங்கையிலே, ருசி பிறந்தபோதே ஆஶ்ரயிக்கலாம்படி ஆஶ்ரயணீயவஸ்துவோடே இவள் நித்யஸம்யுக்தையாய் இருக்கும் என்கிறது—மதுப்பு.

இம்மதுப்பு, '*நித்யயோகே₃ மதுப்*' ஆகையாலே இவள் நித்யாநபாயிநியாய் இருக்குமென்கிறது. அதுக்கு ஹேது என்னென்னில்: ஜ்ஞாநாநந்த₃லக்ஷணமான ப₄க₃வத்ஸ்வரூபத்துக்கு ஜ்ஞாநாநந்த₃லக்ஷணமான ஆத்மஸ்வரூபத்திற்காட்டில் வ்யாவர்த்தகமான ஹேயப்ரத்யநீகத்வ விபு₄த்வ ஶேஷித்வாதி₃களோபாதி, ஶ்ரிய:பதித்வமும், ம்ருது₃பாத₃ாநகமான க₄டகரகாதி₃களில் ப்ருது₂பு₃த்₄நோத₃ராகாரரூபையான க₄டத்வஜாதி க₄டத்துக்குக் கரகாதி₃ வ்யாவ்ருத்தியைப் பண்ணுகிறவோபாதி, வ்யாவ்ருத்தியைப் பண்ணித்தரும்படி ஸ்வரூபநிரூபகபூ₄தையாகையாலும், ஸ்வாபா₄விகமாகவும் ஔபாதி₄கமாகவும் ப₄க₃வத்ஸாரூப்யம் பெற்றிருக்கிற நித்யருடையவும் முக்தருடையவும் விக்₃ரஹங்களிற்காட்டில் வ்யாவ்ருத்தமாம்படி, "*ஸ்ரீவத்ஸவக்ஷா:*" என்கிறபடியே, அஸாத₄ாரணதி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்துக்கு நிரூபகபூ₄தையாகையாலும், ஒரு மிது₂நவிஷயகிஞ்சித்காரத்தையொழியில், க்ஷணகாலமும் த₄ரிக்கமாட்டாதபடியான நித்யரையும் முக்தரையும் நித்யகைங்கர்யம் கொள்ளுகைக்காக, "*ஶ்ரியா ஸார்த்த₄மாஸ்தே*" என்கிறபடியே நிரந்தர ஸம்ஶ்லேஷம் பண்ணிக்கொண்டிருக்கையாலும்,

விப₄வாதி₃களிலும் வந்தால், "தே₃வத்வே தே₃வதே₃ஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ। விஷ்ணோர் தே₃ஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும்॥" என்கிறபடியே அவ்வோ அவ்வோ அவதாரஸஜாதீயமான விக்₃ரஹபரிக்₃ரஹம் பண்ணி வந்து அவதரிக்கையாலும், அதுக்கு மேலே "அகலகில்லேனிறையும்" என்று மார்பிலேஇருந்து மடலெடுக்கும்படி ப₄க₃வத்₃பே₄க₃த்திலே ஆழங்காற்பட்டு, "ஜலாந் மத்ஸ்யாவிவோத்₃த்₃ருதௌ" என்கிற படியே க்ஷணகாலவிஶ்லேஷாஸஹையாய் இருக்கையாலும், "ஸ்வவைஶ்வருப்யேண ஸதா₃நுபூ₄தயாப்யபூர்வவத்₃ விஸ்மயமாத₃த₄ாநயா" என்கிறபடியே ப₄க₃வத₃நுப₄வாவகா₃ஹநம் பண்ணி நித்யமுக்தஸங்க₄ங்கள் "ஏகதா₄ ப₄வதி, த்₃விதா₄ ப₄வதி, த்ரிதா₄ ப₄வதி, ஶததா₄ ப₄வதி, ஸஹஸ்ரதா₄ ப₄வதி" என்று, அநேக ஶரீரபரிக்₃ரஹம் பண்ணி நிரந்தராநுப₄வம் பண்ணிலும், "நிரவத்₃ய: பர: ப்ராப்தே:" என்கிறபடியே அநுபூ₄தாம்ஶம் அல்பமாய், அநுப₄ாவ்யாம்ஶமே அபரிச்சி₂ந்நமாம்படியான பெரிய வைப₄வத்தையுடைய தானும் தன்னுடைய ஜ்ஞாநஶக்த்யாதி₃களை யும், ஸ்வவைஶ்வருப்யத்தையும் நேர்ந்து ஒருகாலகலேகதே₃ஶமும் மலடுபற்றுதபடி நிரந்தராநுப₄வம் பண்ணாநின்றாலும், ஆனைக்குக் குதிரை வைத்து அந்த வைஶ்வருப்யாநுப₄வமடைய, பே₄ாகே₃ா போத்₃க₄ாதகேளீசுளகிதமாம்படி பண்ணவற்றான அவளுடைய நிரவதி₄கபே₄ாக்₃யதாதிஶயத்தாலே மார்பிலே இருத்தி மடலெடுக் கும்படி க்ஷணகாலமும் விரஹாஸஹளைகயாலும், இவள் நித்ய ஸம்யுக்தையாயிருக்கும்.

"ஶ்ரீயதே" என்கிற வ்யுத்பத்தியாலே த்ரிவித₄ாத்மவர்க்க₃த் திற்காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லிற்று. மதுப்பாலே அல்லாத நாச்சிமாரிற்காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லிற்று. அல்லாதவர் களுக்கு நித்யஸம்யோக₃ஹேதுபூ₄தங்களான ஸ்வருபநிருபகத்வாதி₃க ளில்லையே. ஆக, இவள் சொன்னதொன்றை மேல் விழுந்து கேட்கும்படியான இவனோடுண்டான நிருபாதி₄கப₃ந்த₄த்தாலு, நித்யாநபாயிநியாய் நின்று, "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகி யும் நிற்கும்" என்னும்படி பண்ணும் தன்னுடைய வால்லப்₄யாதி ஶயத்தாலும் நிருத்தரமாம்படியான தன்னுடைய உக்திவிஶேஷங்க ளாலும், அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தை ஆற்றிச் சேரவிட க்ஷமையாகையாலும், புருஷகாரப₄ாவம் சொல்லிற்றாயிற்று.

ஒருவரை ஒருவர் பிரிந்தபோது நீரைப்பிரிந்த மீனும் தாமரையும்போலே ஸத்தையழிவது முகம்வாடுவதாகையாலே அவனுமிவளோடு a அன்பளவி, இவளும் b செவ்விப்படிக் கோலம் c அகலகில்லேனென்றிருக்கையாலே d என்றும் திருவிருந்தமார்வன் சிரீதரன்' என்னும்படி நித்யயோகம் குலே

உப₄யவிபூ₄திநாத₂னான ஈஶ்வரனுக்கு * நலமந்தமில்லதோர் நாடான நித்யவிபூ₄தியிலே அயர்வறுமமரர்களுடைய நிரந்தராநுப₄வஜநித ஹர்ஷப்ரகர்ஷ ப₃லாத்காரகாரிதமான நித்யகைங்கர்யத்துக்கு ப்ரதிஸம்ப₃ந்தி₄யாய்க்கொண்டு அவர்களோட்டை அநுப₄வம் நடவாநிற்கச்செய்தே. 'நல்கித்தான் காத்து அளிக்கும் பொழிலேழும்" என்கிறபடியே லீலாவிபூ₄தியில் ரக்ஷணம் குலேயாமல் நடத்திக்கொண்டு போகிறாப்போலே, இவளும் மாத்ருத்வரூபேணவும் மஹிஷீத்வரூபேணவும் சேதநரோடும் ஈஶ்வரனோடும் அவர்ஜநீய ஸம்ப₃ந்த₄முடையவளாகையாலே அவனோட்டையநுப₄வம் நடவாநிற்கச் செய்தேயும் ஜக₃த்₃ரக்ஷணார்த₂மான புருஷகாரத்வம்—ஸ்வபே₄க்₃யதாதிஶயத்தாலே 'இவளுக்கு என்ன உபகாரம் பண்ணுவோம்'' என்று உபகாரம்பண்ணியல்லது த₄ரிக்கமாட்டாதானான ஈஶ்வரனே உபகாரம் கொண்டு த₄ரிப்பித்த ப்ரகாரமாகையாலே. ஸ்வதந்த்ர வஸ்துவுக்கு. பரதந்த்ரையான இவள் புருஷகாரமாகப் போருமோ? என்கிற ஶங்கைக்கும். ப₄க₃வத்ஸ்வரூபரூப கு₃ணங்களை இடைவிடாமல் அஸங்குசிதமாக அநுப₄வித்துப் போருகிற இவளுக்கு. பரது₃:க்க₂த₃ர்ஶநமும் தந்நிவ்ருத்த்யபேக்ஷையும் உபபந்நமாகுமோ? என்கிற ஶங்கைக்கும் அவகாஶமில்லை.

"ஜலாந் மத்ஸ்யாவிவோத்₃த்₄ருதௌ" "கமலம் ஜலாத₃பேதம் ஶோஷயதி ரவி:'' என்கிற ப்ரமாணங்களைத் திருவுள்ளத்தே கொண்டு அருளிச்செய்கிறார் (நீரைப்பிரிந்த மீனும் தாமரையும்போலே) என்று.

a பெரியதிரு2-4-1 b இர-திருவ82 c திருவாய்6-10-10 d நான்திருவ92

யாது. பிரிந்தபோது ஜக₃த்தைப் பரிவர்த்திப்பன், யுகா₃ந்தாக்₃னி கூற்றறுத்தோ சுடுவதென்னும்படி நாடு குடிகிடவாதே, கூடின போது a 'ஏழுலகையின்பம் பயக்க' என்னும்படி நாடுவாழ்கை யாலே இச்சேர்த்திதானே ஜக₃த்₃ரக்ஷணத்துக்குறுப்பாயிருக்கும்.

அபராத₄ம் கனத்திருக்க இவள் ஸந்நிதி₄யாலே காக சூர்ப்பணகைகளுக்குத் தலைபெறலாயிற்று. அபராத₄ம் மட்டா யிருக்க இவள் அருகில்லாமையாலே ராவண தாடகைகள்

(ஜக₃த்தைப் பரிவர்த்திப்பன்) இதி—இங்கே "புரேவ மே சாருத₃திமநிந்தி₃தாம் தி₃ஶந்தி ஸீதாம் யதி₃ நாத்₃ய மைதி₂லீம்। ஸதே₃வ க₃ந்த₄ர்வ மநுஷ்ய பந்நக₃ம் ஜக₃த் ஸஶைலம் பரிவர்த்தயாம்யஹம்॥" என்ற ஸ்ரீராமாயண வசநம் அநுஸந்தே₄யம். இனி, இவள் புருஷகாரத்வத்தின் அவஶ்யாபேக்ஷிதத்வத்தை அறிவிக்கைக்காக இவள் ஸந்நிதி₄க்கும் அஸந்நிதி₄க்குமுண்டான வாசியை அருளிச்செய்கிறார் (அபராத₄ம்) என்று தொடங்கி; (காக ஶூர்பணகைகள்) இதி—இவர்கள் அங்க₃வைகல்யம் அடைந்தது அங்க₃மான பிராட்டி திறத்தில் அபசாரப்பட்டபடியால் என்றும், ராவண தாடகைகள் அங்கி₃விநாஶத்தையடைந்தது அங்கி₃யான பெருமாள் திறத்தில் அபசாரப்பட்டபடியால் என்றும் கண்டு கொள்வது. பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அங்கா₃ங்கி₃ பா₄வம் ப்ரகார ப்ரகாரி பா₄வமிறே. (காக) இதி:—"புத்ர: கில ஸ ஶக்ரஸ்ய" என்கிற ராமாயண வசநத்திலுண்டான—ஜயந்த வால்யந்யதரனே, அபூர்வ புத்ரனே என்கிற விஶேஷாகாங்க்ஷையை அபூர்வகல்பநா விரஹாநுக்₃ருஹீதமான புராண வசந ஸமர்ப்பித ஜயந்த ரூபவிஶேஷம் ஶமிப்பிக்கையாலே, ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தாலும், ஸர்வஶாக₂ாப்ரத்யயந்யாயத்தாலும் ஜயந்தன் காகரூபேண வந்தான் என்னுமிடம் ஸித்₃த₄ம்.

---

a திருவாய் 7-10-1

முடிந்தார்கள். a 'சேர்ந்த திருமால்' என்கிறபடியே பரத்வம் முதலாக ஈஶ்வரக3ந்த4முள்ள இடமெல்லாம் விடாதே சேர்த்தியும் அநுப4வமும் உகப்பும் மாறுமையாலே. காலம் பாராதே ருசி பிறந்த போதே b திருமாலை விரைந்தடிசேரக் குறையில்லை.

பாத்3மோத்தரத்திலே தி3வ்யாஷ்டோத்தர ஶதநாம விஷயாத்4யாயத்திலே "ஜயந்த த்ராண வரத3:" என்று காக வ்ருத்தாந்த ஸ்த2ாநத்திலே சொல்லுகையாலே காகன் ஜயந்தன் என்னுமிடம் லப்3த4ம். பூர்வவாஸிஷ்ட2த்தில் ஹநூமத்3 விஜயத்தில் கௌ3தம ஶாபத்தால் இந்த்3ரனுக்கு வந்த காகத்வத்தை தே3வதைகள் ஜயந்தனிடத்தில் மாற்றினார்கள் என்கையாலும் காகன் ஜயந்தன் என்னுமிடம் ஸ்பு2டம். (1) "நக2ாக்3ரை: கேந தே பீ4ரு! ராதி3தஞ்ச ஸ்தநாந்தரே" என்று நக2ரூபகரண ஸாமர்த்2யத்தாலும், ஸ்தநரூபாதி4கரண ஸாமர்த்2யத்தாலும், ரத3ந ஶப்3தி3த விலேக2நரூப க்ரியா ஸாமர்த்2யத்தாலும் ராமாயணத்திலே வ்யஞ்ஜிதமாய் "கந்த3ர்ப்பஶரபீடி3த:" என்று பாத்3ம புராணத்திலே கண்டோ2க்தமான காமுகத்வமும். "பு4க்ஷார்த்தீ2" என்று ராமாயணத்திலே கண்டோ2க்தமான பு4க்ஷார்த்தி2த்வமும், ஜயந்தத்வ ப்ரயுக்த வாஸநையாலும், காகஶரீர ஸம்ப3ந்த4 நிப3ந்த4ந வாஸநையாலும் ஜாதிஸ்மரந்யாயேந ஏகத்ர ஸங்க4டநார்ஹமாகையாலும். (2) காகம் அபூர்வபுத்ரன் என்று அந்யத்ர சொல்லியிராமையாலும். (3) இத்தைக்கொண்டே கல்பிக்கில் கல்பநா கௌ3ரவம் ப்ரஸங்கி3க்கையாலும். (4) கிலஶப்3த3ஸ்வாரஸ்யத்தாலும். (5) 'இந்த்3ராய புத்ரிணே' என்கிறவிடத்தில் புத்ரஶப்3த3ம் ஜயந்தபரமாகக் கண்டபடியாலும் ஜயந்தன் காமுகதயா காகரூபேண வந்தான் என்று ஸித்3த4ம்.

இம்மதுப்பின் தாத்பர்யாம்ஶத்தையருளிச்செய்கிறார் (**காலம் பாராதே**) என்று. அதாவது—இப்படி புருஷகார

---

a மூன்-திருவ 30   b திருவாய் 4-1-2

இவள் சேரநிற்கையாலே ஸ்வதந்த்ரனுக்கும் பிழை நினைந்து கைவிடவொண்ணாது. ஸாபராத₄னுக்கும் உடனிருக்கிறமையை நினைத்துக் கால்வாங்க வேண்டா.

உபாய வஸ்துக்களினுடைய நித்யயோக₃த்தை ப்ரதிபாதி₃க்கிற இம்மதுப்பால், இவ்விஷயத்தை ஆஶ்ரயிப்பார்க்கு ஆஶ்ரயிக்கையில் ருசியே வேண்டுவது. "இரண்டு தலையும் கூடியிருக்கும் து₃ஶையிலே ஆஶ்ரயிக்க வேணுமே" என்று ஆஶ்ரயணத்துக்குக் காலம் பார்த்திருக்கவேண்டா என்கை. இத்தால் ஜீவேஶ்வரர்களுக்குப் ப₂லிக்குமத்தை அருளிச்செய்கிறார் (இவள் சேரநிற்கையால்) *இத்யாதி₃.*

ஶ்ரீயதே என்கிற கர்மணி வ்யுத்பத்தியாலே க்ருபையும், ஶ்ரயதே என்கிற கர்த்தரி வ்யுத்பத்தியாலே பாரதந்த்ர்யமும், நித்யயோக₃ வாசியான மதுப்பாலே அநந்யார்ஹத்வமும் ஆகிற புருஷகாரத்வத்துக்கபேக்ஷிதமான கு₃ணத்ரயமும் ஶ்ரீமத்பத₃த்தாலே உக்தம்.

உப₄யவிபூ₄திக்கும் ஈஶ்வரியான பிராட்டிஸ்வரூபம் அசித்கோடியிலேயோ, ஆத்மகோடியிலேயோ, ஈஶ்வரகோடியிலேயோ என்று நிரூபித்தால், அறிவுண்டாகையாலே அசித்கோடியிலன்று. ஐஶ்வர்யத்தாலே ஆத்மகோடியில் அன்று. நித்யபாரதந்த்ர்யத்தாலே ஈஶ்வரகோடியிலுமன்று. ஆனால் தத்வம் நாலாகிறதோ என்னில், அதுக்கு ப்ரமாணோபபத்திகளில்லை. ஆனால் இவளுடைய ஸ்வரூபம் அறுதியிடும்படியென்னென்னில்:— நிரூபகவிஶேஷணம் நிரூபிதவிஶேஷணம் என்றிரண்டாய், சேதநன் நிரூபிதவிஶேஷணமாய், இவள் நிரூபகவிஶேஷணமாயிருக்கும். ஆனால் "அஸ்யேஶாநா ஜக₃த:" என்றும், "ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்" என்றும் ஶ்ருதிகளிலே ஈஶ்வரியாக ஓதிப்போருகையாலே ஈஶ்வரகோடியிலேயாகக் குறையென்னென்னில்; அப்போது நாட்டுக்கு இரண்டு ஈஶ்வரர்கள் கூடாமையாலும், "பதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம்"

"க்ஷராத்மாநௌ ஈஶதே தே$_3$வ ஏக:" என்று தொடங்கி உண்டான ப்ரமாணபரம்பரைகளுக்கு விரோத$_4$ம் பிறக்கையாலும், யுக்தியில்லாமையாலும் ஈஶ்வரத்வம் கூடாது. அங்கு ஓதிப்போருகிற ஈஶ்வரத்வம் பத்நீத்வநிப$_3$ந்த$_4$நமாகக் கடவது. ராஜமஹிஷியை ஸோபசாரமாகச் சொல்லாதபோது அவனுடைய ரோஷத்துக்கிலக்காமித்தனையிறே. "பும்ப்ரத$_4$ாநேஶ்வரேஶ்வரீம்" என்று தொடங்கி இவளுடைய வைப$_4$வங்களை ப்ரதிபாதி$_3$க்கிற ப்ரதே$_3$ஶங்களில் அவளுடைய போ$_4$க்$_3$யதாதிஶயத்தைச் சொல்லுகிறதித்தனை. ஆனாலிவள் சேதநஸமாநையோ என்னில். அப்படியன்று. ப$_3$த்$_3$த$_4$ரிற்காட்டில் முக்தர் வ்யாவ்ருத்தர். முக்தரிற்காட்டில் நித்யர் வ்யாவ்ருத்தர். நித்யரிற்காட்டில் அநந்த க$_3$ருட$_3$ாதி$_3$கள் வ்யாவ்ருத்தர். அவர்களிற்காட்டில் தே$_3$வீஜநங்கள் வ்யாவ்ருத்தர். தே$_3$வீஜநங்களிற்காட்டில் பூ$_4$நீளைகள் வ்யாவ்ருத்தர். பூ$_4$நீளைகளிற்காட்டில் இவள் வ்யாவ்ருத்தை. ஆகையால் உப$_4$யவிபூ$_4$திக்கும் ஈஶ்வரியாய்ப் போருகிறது. இவளுக்கு ஸ்வரூபத்தாலே சேதநஸாம்யமுண்டு. ஸ்வபா$_4$வத்தாலே ஈஶ்வரஸாம்யமுமுண்டு. இது நித்யர்க்கும் முக்தர்க்கும் உண்டோ என்னில். இவர்களுக்குமின்றியிலே, தே$_3$வீஜநங்களுக்குமின்றியிலே, ஈஶ்வரன் தனக்குமின்றியிலே, இருப்பன சில கு$_3$ணவிஶேஷங்கள் உண்டு. அவையென்னென்னில்; (1) நிரூபகத்வம் (2) ஆநுரூப்யம் (3) அபி$_4$மதத்வம் (4) அஶேஷஶேஷித்வ ஸம்ப$_3$ந்த$_4$ த்$_3$வாரபா$_4$வம் (5) ஆஶ்ரயணஸித்$_3$தி$_4$ (6) ப்ராப்யபூரகத்வம்.

இவ்வர்த்த$_2$ங்களை அபி$_4$யுக்தரும் வெளியிட்டார்கள். "திருவினுக்கரசே" "திருமாலே" என்று நிரூபகத்வத்தையும். "உனக்கேற்கும் கோலமலர்ப்பாவை" என்று ஆநுரூப்யத்தையும். "அல்லிமலர்மகள் போகமயக்குக்கள்" என்று போ$_4$க்$_3$யதையையும், "பூவின்மிசை நங்கைக்குமின்பன்" என்று அபி$_4$மதத்வத்தையும், "திருமாமகளாலருள்மாரி" "திருமாலால் அருளப்பட்ட சடகோபன்"

என்று அஶேஷஶேஷித்வ ஸம்ப3ந்த4 த்3வாரப4ாவத்தையும், 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று ஆஶ்ரயண ஸித்3தி4யையும், "திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே" என்று ததீ3யபர்யந்தமாக ப்ராப்யபூரகத்வத்தையும் வெளியிட்டார்கள். ஈஶ்வர விஷயத்தில் இவளுடைய பாரதந்த்ர்யாநந்யார்ஹத்வங்களும் ஸ்வரூபப்ரயுக்தமான மாத்ரமன்றிக்கே, "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்றும், "விஷ்ணுபத்நீ" என்றும் சொல்லுகிற பத்நீத்வ ப்ரயுக்தமாயும், "அஹந்தா ப்3ரஹ்மணஸ்தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ" என்றும், "ஶ்ரீவத்ஸ வக்ஷா: நித்யஶ்ரீ:" என்றும் சொல்லுகிற ஸ்வரூபநிரூபகத்வாதி3 ஸித்3த4மான அநந்யத்வ ப்ரயுக்தமாயுமிருக்கும். இப்படியிருக்கையாலேயிறே அல்லாதார்க்கடைய மிது2நஶேஷத்வமும், இவளொருத்திக்கும் ததே3கஶேஷத்வமுமாய்த்து. இந்த அவ்யவத4ாநேந உண்டான ஸம்ப3ந்த4த்தாலேயிறே இவளுக்கு ஈஶ்வரனை வஶீகரிக்குமளவில் புருஷகாரம் வேண்டாதொழிகிறது. ஆக இந்த கு3ணங்களாலேயிறே இவள் ஸர்வாதிஶயகாரியாயும் இருக்கிறது. "திருமாமகள் கேள்வா தேவா" என்றும். "திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடைய பிரானார்" என்றும் எம்பெருமானுக்கு ஶேஷித்வ பூர்த்தி பிறப்பது இவளாலே. இவளுடைய ஸத்தை எம்பெருமானிட்ட வழக்காயிருக்கும். எம்பெருமானுடைய ஐஶ்வர்யம் இவளிட்ட வழக்காயிருக்கும். இருவருடைய ஸ்வரூபமும் பூவும் மணமும் போலேயிறே. பூவையொழிய மணத்துக்கு நிலையில்லை. மணத்தையொழியப் பூவுக்கு ஏற்றமில்லை. இருவரையும் பிரித்துக் காண்பாரும் உண்டாகில், ஶூர்ப்பணகை2யும், ராவணனும் பட்டதுபடுவார்கள். ஆகையிறே—"திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்" என்று ஶேஷத்வப்ரதிஸம்ப3ந்தி4 ஒருமிது2நமாய். "நாளும் நம் திருவுடையடிகள் நலங்கழல் வணங்கி" என்று ஆஶ்ரயண ப்ரதிஸம்ப3ந்தி4 ஒருமிது2நமாய். "அடிமை செய்வார் திருமாலுக்கே" என்று கைங்கர்ய ப்ரதிஸம்ப3ந்தி4 ஒரு

நாராயணபத₃ார்த்த₂ம்

அபராத₄த்தாலே அமுக்குண்டு புருஷகாரத்தாலே தலை யெடுத்து, சேர்ப்பாரே a சிதகுரைக்கிலும் மறுதலைத்துக் கைவிடாதே நோக்கும்படியான வாத்ஸல்யாதி₃களைச் சொல்லு கிறது நாராயணபத₃ம். விட்டபோது கைக்கொண்டு விடுவிக்க

மிது₂நமேயாயிருக்கிறது. இத்தாலேயிறே ப₄ாஷ்யகாரரும் ஒருமிது₂நமொழிய வஸ்து இல்லையென்றறுதியிட்டது. மத்ஸ்யத்தினுடைய ஆகாரமெல்லாம் ஜலமயமாயிருக்கு மோபாதி ஸ்ரீமானுடைய வடிவெல்லாம் ஸ்ரீமயமாய் இருக்கு மென்று பெரியமுதலியாரும் நஞ்ஜீயரும் அருளிச்செய்து போருவர்கள்.

ஆக ஸ்ரீமத் பத₃த்தாலே புருஷகாரமும் புருஷகாரத்தி னுடைய ஈஶ்வர நித்யயோக₃மும் சொல்லிற்றாயிற்று. ஆக இப்படி ஸ்ரீமத்பத₃ார்த்த₂த்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் நாராயண பத₃ார்த்த₂த்தை அருளிச்செய் கிறார் (அபராத₄த்தாலே) என்று தொடங்கி. அதாவது, உபதே₃ஶத்தாலும் அழகாலும் கண்ணழிவற வஶீகரித்துக் கார்யங்கொள்ளவல்ல புருஷகார ப₃லத்தாலே, ஆஶ்ரயணோந் முக₂னை சேதநன் அநாதி₃காலம் பண்ணின அபராத₄ங் களைப் பார்த்துச்சீறி "அங்கீ₃கரியேன்" என்றிருக்கும் ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யம் தலைமடிந்தால், அதன் கீழ்த் தலை யெடுக்கப்பெறாத செறிப்புத் தீர்ந்து தலையெடுக்கும் கு₃ணங்களான வாத்ஸல்யாதி₃களைச் சொல்லுகிறது 'நாராயணபத₃ம்' என்கை. புருஷகாராபேக்ஷயா உபாயத் துக்குண்டான ஏற்றத்தை அருளிச்செய்கிறார் (விட்டபோது) என்று தொடங்கி. "புருஷகாரமும் மிகையென்னலாம் படியான உபாயவைப₄வம்" என்றிறே மாமுனிகள் திரு வாக்கு. "மிகை" என்றது—"நாஶௌ புருஷகாரேண"

---

a பெரியாழ்திரு 4-9-2

வொண்ணுதபடி காட்டிக்கொடுத்தவள்தன்னையும் விட்டுப் பற்றும்படியிறே ஈஶ்வரனுடைய கு₃ணுதி₄க்யமிருப்பது. a 'ஈறிலவண் புகழ்' என்கிற b எண்ணில் பல் குணங்களும் இதுக்கர்த்த₂மேயாகிலும், உபாய ப்ரகரணத்திலே c 'நிகரில் புகழாய்' என்று தொடங்கி ஆழ்வார் அருளிச்செய்த நாலு கு₃ணங்களும் இதுக்கு ப்ரதா₄நார்த்த₂மாகக் கடவது. அதில் வாத்ஸல்யமாவது—அன்றீன்ற கன்றினுடம்பில் அழுக்கை

இத்யாதி₃யைப்பற்ற என்று கண்டுகொள்வது. இப்படி அபேக்ஷிதமான புருஷகாரம்தானும் தன்னேற்றமாம்படியிருக்கிறன—நாராயண ஶப்₃த₃த்தில் தோற்றுகிற ஸம்ப₃ந்த₄மும் கு₃ணங்களும் என்றபடி. இது "தன்னடியார்" என்கிற பாட்டிலே காணலாம். "ஸ்ரீத₄ர: ஸ்ரீகர: ஶ்ரேய: ஸ்ரீமாந் லோகத்ரயாஶ்ரய:" இத்யாதி₃களிலே ப₄க₃வந்நாமமாக ப்ரஸித்₃த₄மான ஸ்ரீமச்ச₂ப்₃த₃மே அமையாதோ? என்னில்; பூர்வக₂ண்ட₃த்தில் உபாயபா₄வத்துக்குறுப்பான கு₃ணவிஶேஷாநுஸந்தா₄நார்த்த₂மாகவும், உத்தரக₂ண்ட₃த்தில் ஸர்வவிஶிஷ்டனை ஶேஷி—ப்ராப்யனைத் தோற்றுகைக்காகவும் நாராயண ஶப்₃த₃ம் அபேக்ஷிதமாகையால். இங்கு ஸ்ரீமச்ச₂ப்₃த₃ம் விஶேஷணம். பூர்வக₂ண்ட₃த்தில் நாராயண ஶப்₃த₃த்துக்கு ஶரண்யதையிலே நோக்கானபடியாலே "நிகரில் புகழாய்" இத்யாதி₃களிலே ஸங்க்₃ருஹீதங்களான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்₄ய ஜ்ஞாந ஶக்தி ப்ராப்தி பூர்த்தி காருண்யாதி₃கள் இங்கு அநுஸந்தே₄யங்களில் ப்ரதா₄நதமங்கள். இதுதன்னை அருளிச்செய்கிறார் (ஈறில) என்று தொடங்கி.

வாத்ஸல்யாதி₃கு₃ணசதுஷ்டயம் ஆஶ்ரயணஸௌகர்யாபாத₃கமாகும். "ஆஶ்ரயணே—ஶரணவரணே, ஸௌகர்யஸ்ய—ஸுகரத்வஸ்ய, ஆபாத₃கா:—ஜ்ஞாபகா:" என்றபடி. இங்கே "சாக்ஷுஷ பூர்வகாஶ்ரயணே நிக்₃ரஹாபாத₃கத்வா

---

a திருவாய் 1-2-10 b பெரியதிரு 5-7-2 c திருவாய் 6-10-10

போ$_4$க்$_3$யமாகக்கொண்டு பாலைச்சுரந்து கொடுத்து வளர்த்து வேறொன்றை நினையாதே தன்னையே நினைத்துக் குமிறும்படி பண்ணி, முன்னணைக் கன்றையும், புல்லிட வந்தவர்களையும், விட்டுக் கட்டுவாரையும், நலியத் தேடுகிறவர்களையும் உதைத்து நோக்குகிற தே$_4$னுகு$_3$ணமிறே. அப்படியே இவனும்

ஸக்யத்வாந்யதரபு$_3$த்$_3$தி$_4$ நிவர்த்தநத்$_3$வாரா ஆஶ்ரயணப்ரவ்ருத்த்யௌபயிக ஜ்ஞாநவிஷயத்வம் ஆஶ்ரயணோபயோகி$_3$த்வம்'' என்ற பூர்வர்கள் நிஷ்கர்ஷம் அநுஸந்தே$_4$யம். வாத்ஸல்யம்—நிக்$_3$ரஹபாத$_3$கத்வபு$_3$த்$_3$தி$_4$யையும், ஸௌலப்$_4$யம்—அஶக்யத்வ பு$_3$த்$_3$தி$_4$யையும் நிவர்த்திப்பிக்கும் என்றபடி. வாத்ஸல்யமாவது:—''வத்ஸம் லாலயதி'' என்கிற வ்யுத்பத்தியாலே, அன்றீன்ற கன்றின் பக்கல் தாய் பண்ணும் வ்யாமோஹம். அதாவது—சுவடுபட்ட புல்லையும் காற்கடையில் கொள்ளும் த$_3$ஶையிலும், தன் கடையில் நின்றும் புறப்பட்ட கன்றினுடைய வழும்புநாற்றத்தையே தனக்கு போ$_4$க்$_3$யமாக ஸ்வீகரித்து தன்னுடைய க்ஷீரத்தாலே அத்தை த$_4$ரிப்பிக்குமாப்போலே, ''தோ$_3$ஷோ யத்$_3$யபி தஸ்ய ஸ்யாத்'' என்கிறபடியே, ஆஶ்ரிதக$_3$தமான தோ$_3$ஷங்களைத் தன் பேறாக மேல்விழுந்து போக்கித் தன் கு$_3$ணங்களாலே அவர்களை த$_4$ரிப்பிக்கை. ஆத்மகு$_3$ணாநுஸந்தா$_4$நமாகையாலே ஆஶ்ரயணாநந்தரம் வரும் பாபவிமோசநவ்யாபாரத்தோடு விரோத$_4$ம் பிறவாது. வத்ஸத்தின் பக்கல் தே$_4$நு இருக்குமிருப்பு வாத்ஸல்யம். அதாவது அதினுடைய தோ$_3$ஷத்தை போ$_4$க்$_3$யமாகக் கொள்ளுகையும், க்ஷீரத்தைக் கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவரைக் கொம்பிலும் குளம்பிலும் கொண்டுநோக்குகையுமிறே. அப்படியே ஈஶ்வரனும், தோ$_3$ஷத்தை போ$_4$க்$_3$யமாகக் கொண்டு, ''பாலே போல் சீர்'' என்கிற கு$_3$ணங்களாலே த$_4$ரிப்பித்து, ''கத$_2$ஞ்சந ந த்யஜேயம்'' என்றும், ''அப$_4$யம் ஸர்வ பூ$_4$தேப்$_4$ய:'' என்றும் சொல்லுகிறபடியே அநுகூலர் நிமித்தமாகவும் ப்ரதிகூலர் நிமித்தமாகவும் நோக்கும்

என்றபடி. இங்கே "வத்ஸல:—வத்ஸாந் ஸ்வோத்ஸங்காந் காமயதே இதி— 'வத்ஸாம்ஸாப்₄யாம் காமப₅லே' இதி லச்ப்ரத்யய:" என்ற ஸ்ரீ பராஶரப₄ட்டர் ப₄ாஷ்யமும். "வாத்ஸல்யம் தோ₃ஷேஷ்வபி கு₃ணத்வ பு₃த்₃தி₄: யதா₂ மாதுர்வத்ஸே" என்ற ஸமந்வயாதி₄கரணஶ்ருதப்ரகாஶிகா வாக்யமும், "ப்ரியதமையுடம்பில் அழுக்கும் வத்ஸத்தினுடைய வழும்பும்போலே ப்ரபந்நனுடைய தோ₃ஷம்" என்கிற வார்த்தையும், "து₃ஷ்டரும் ஶரணாக₃தரானால் ஈஶ்வரன் கைவிடாதே திருத்தும் என்றபடி" என்ற ரஹஸ்யத்ரயஸார வாக்யமும். "ப்ரபந்நாந் மாத₄வ: ஸர்வாந் தோ₃ஷேண பரிக்₃ருஹ்யதே। அத்₃ய ஜாதம் யதா₂ வத்ஸம் தோ₃ஷேண ஸஹ வத்ஸலா ||" என்ற வசநமும். "அற்றமுரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன் குற்றம் உணர்ந்து இகழும் கொள்கையனோ — எற்றே தன் கன்றின் உடம்பின் வழுவன்றோ காதலிப்பது அன்றதனை ஈன்றுகந்த ஆ" என்ற ஞானஸாரப் பாசுரமும் அநுஸந்தே₄யங்கள். "தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அக₃ர்ஹிதம்" என்றிறே ஶரண்யன் திருவாக்கிருக்கும்படி. "ஸ்யாத்—என்று ப்ரார்த்த₂நாயாம் லிங்" என்றும், "அக₃ர்ஹிதம்"—க₃ர்ஹிதவிரோதி₄—ஶ்லாக்₄யம் என்றுமிறே வ்யாக்₂யாந சக்ரவர்த்தியின் வ்யாக்₂யாநமிருக்கும்படி. கிஞ்ச. ப்ரீதி விஶேஷ விஶிஷ்ட விஷயத்தில் வத்ஸல ஶப்₃த₃த்துக்கு ஶக்தி ஶாப்₃தி₃கராலே நிரூபிக்கப்பட்டுள்ளது. காஶிகாவ்ருத்தி தத்வபோ₃தி₄ந்யாதி₃களிலே இவ்வர்த்த₂ம் ஸ்பஷ்டம். "வத்ஸாம்ஸாப்₄யாம் காமப₃லே—இதி லச் ப்ரத்யய:। வத்ஸல: இதி ஸ்நேஹவாந் உச்யதே" என்றிறே அவ்விடத்து வாக்யம். ப்ரீதி விஶேஷத்தைக் குறிக்குமதாக அறுதியிடப்பட்ட "லச்" ப்ரத்யயத்துக்கு அஜ்ஞாந பரமாக வ்யாக்₂யாநம் பண்ணுவது அநுசிதம். ஏதேந "அவிஜ்ஞாதா—ப்ரபந்நாபராத₄ா பரிக₃ணநம் கு₃ண ஏவ। 'த்வம் ஹி அஜ்ஞ ஏவ ஆஶ்ரித

தோ₃ஷஜோஷண:' என்றுரிறே தாதபாத₃ரும்'' என்ற பட்டர் பா₄ஷ்யமும் நிர்வஹிக்கப்பட்டது. காருண்யாதி₃களை ப்ரஸரிக்கவொட்டாமல் தடுக்கிற தோ₃ஷஜ்ஞாநம் இல்லை என்றிறே அவ்வாக்யத்தின் கருத்து. தோ₃ஷத்வேந ஜ்ஞாநம் இல்லை, கிந்து கு₃ணத்வேந ஜ்ஞாநம் உண்டு என்றபடி. தத₃தி₄க₃மாதி₄கரண ஶ்ருதப்ரகாஶிகையில் ப₄க₃வானுக்கு தோ₃ஷஜ்ஞாநம் உக்தமிறே. "ந ததோ விஜுகு₃ப்ஸதே" என்ற கட₂வல்லீ வாக்யத்துக்கு "தோ₃ஷாந் போ₄க்₃யதயா பஶ்யதி வாத்ஸல்யாதிஶயாத்" என்றிறே ஶ்ரீரங்க₃ராமாநுஜ ஸ்வாமி பா₄ஷ்யம் இட்டருளி ஞர். அஹோபி₃ல மட₂ாதி₄பதி ஶ்ரீ நாராயணமுநீந்த்₃ரர் அருளிச்செய்த ரஹஸ்ய த்ரய ஜீவாதுவிலும் இவ்வர்த்த₂ம் ஸ்பஷ்டம். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் களும் நற்கலைகள் ஆய்ந்து, அம்தமிழால் "நன்று செய் தார்" "குணம் கொள்ளும்" "நற்றமாகவே" என்று அருளிச்செய்து போந்தார்கள். "ஆலிஹ்ய தாந் நிரவஶேஷம் அலப்₃த₄த்ருப்தி: ஔத்ஸுக்யபூர்வமுபஹ்ருத்ய மஹாபரா த₄ாந்'' என்றிறே கவிதார்க்கிக ஸிம்ஹ கோ₄ஷமிருக்கும்படி. ஸம்ஸாரிக்குத் தன் குற்றம் கண்டு வெருவாமைக்கு வாத் ஸல்ய கு₃ணத₃ர்ஶநம். இதனாலும் ப்ரபத்தி உபாயமன்று என்று தேறுகிறது. ப்ரபத்தி உபாயமாகில், அதனாலேயே தோ₃ஷம் நஶிக்குமாகையால், வாத்ஸல்ய பர்யாலோசநம் நிஷ்ப்ரயோஜநமாம். ப்₃ரஹ்மஹத்யைக்கு ப்ராயஶ்சித்த மாக த்₃வாத₃ஶவார்ஷிகம் அனுட்டிக்குமவனுக்கு வாத் ஸல்ய கு₃ணபர்யாலோசநம் நிஷ்ப்ரயோஜநம். அவ்வோபாதி இங்கேயும் வரும். இதுகொண்டும் ப்ரபத்தி அநுபாயம் எனத் தெளிய ப்ராப்தம். இங்கே போ₄க்₃யமாகக் கூறப் படும் தோ₃ஷங்கள் பூர்வபாபங்களாகும். அன்றிக்கே தோ₃ஷமாவது ஶரீரம்; அதனை போ₄க்₃யமாகக் கொள்கி ருன் ப₄க₃வான் என்னவுமாம். இவ்வர்த்த₂த்தை "ஜ்ஞாநியை விக்₃ரஹத்தோடே ஆத₃ரிக்கும்" என்று லோகதே₃ஶிகன் அருளிச்செய்தார். இது தன்னை அருளிச்செய்கிருர்

இன்று ஜ்ஞாநம் பிறந்தவனுடைய அழுக்குடம்பை a 'உரு வமுமாருயிருமுடனே' என்னும்படி போ₄க்₃யமாகக்கொண்டு. b பாலே போல் சீரில் c இன்னருள் சுரந்து கொடுத்து வளர்த்துத் d தாய்நாடு கன்றேபோல் e தன்னையே நினைக்கச் செய்து, f மறவாதழைக்கப்பண்ணி, ஸூரிகளையும் g 'அனந்தன் பாலும் கருடன் பாலும்' h 'தவம் செய்தார் வெள்கி நிற்ப' என்கிறபடியே திருமகளையும் உபேக்ஷித்து இவனை நோக்கக் கடவனாயிருக்கும்.

இப்படிச் செய்கைக்கடியான குடல்துடக்கு—ஸ்வாமித்வமாவது. இவன் i யாதானும் பற்றி j ஓடும்போதும் விடாதே

(அழுக்குடம்பை) என்று தொடங்கி. ஆக தே₃ாஷமாவது— பூர்வபாபமும், ப்ராமாதி₃க உத்தரபாபமும், அழுக்குடம்புமாகிறது. இவற்றை போ₄க்₃யமாகக் கொள்ளுகிறான் வத்ஸலன் என்றதாயிற்று. ஆஶ்ரயணாநந்தரம் பு₃த்₃தி₄பூர்வமாகப் பாபத்தைச் செய்யான். புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைச் செய்யானிறே.

ஸ்வாமித்வமாவது:—இந்த வாத்ஸல்யத்துக்கு ஊற்றாய், "ஈஶ்வர ப்ராப்தி ஆத்மாவுக்கன்று, ஆத்மப்ராப்தி ஈஶ்வரனுக்கு" என்னும்படி இச்சேதந வஸ்துவை உடையனாகை. உடையானிறே உடைமையைப் பெறுகையிலே யத்நம் பண்ணுவான். "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்றிறே வேத₃ாந்தஸார நிஷ்கர்ஷமிருக்கும்படி. அதாவது, ஸ்வாமித்வம்; இவன் விமுக₂னான த₃ஶையிலும் விடாதேநின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவான ஸம்ப₃ந்த₄விஶேஷம். அதாவது—

a திருவாய் 9-6-5 b பெரியதிருவ 58 c பெரியதிரு 5-8-1 d முதல் திருவ 30 e பெரியதிரு 7-3-2 f பெரியதிரு 7-1-1 g பெரியாழ்-திரு 5-4-8 h திருமாலை 44 i திருவிருத்தம் 95 j நான்-திருவ 88

தொடர்ந்து உருவழியாமே a ஒருமாவயிற்றினுள்ளே வைத்து நோக்கி அத்₃வேஷம் தொடங்கி அடிமையெல்லையாகத் தானே உண்டாக்கி. இழவுபேறு தன்னதாம்படி உடையவனா யிருக்கும் உறவை—ஸ்வாமித்வமென்கிறது.

இந்த கு₃ணத்தைக் கண்டு b வானவர் சிந்தையுள் வைத்துச் சொல்லும் c வானோரிறையைக் d கள்ளத்தேன் நானும் e எச்சில் வாயால் f வாய்க்கொள்ளமாட்டேனென்று அகல்வாரளவில் பெருமை சிறுமைகள் பாராதே இவர்கள் நினைவைத் தன் பேறாக மேல்விழுந்து ஒருநீராகக் கலக்கை—ஸௌஶீல்யம்.

உடையவனாய் இருக்குமிருப்பு; அத்₃வேஷம் தொடங்கிக் கைங்கர்ய பர்யந்தமாக உண்டான ஸ்வபா₄வவிஶேஷங்களை யெல்லாம் உண்டாக்குகிறது. இந்த ப₃ந்த₄விஶேஷமடியாக என்றபடி. இதுதன்னை அருளிச்செய்கிறார் (அத்₃வேஷம் தொடங்கி) *என்று தொடங்கி.*

ஸௌஶீல்யமாவது :— உப₄யவிபூ₄தி யோக₃த்தாலும், பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும், நிரங்குஶமா யிருக்கிற ஈஶ்வரனுடைய மேன்மையையும், தங்கள் சிறுமையையும் பார்த்து "அவனெவ்விடத்தான் யானார்" என்று பிற்காலியாதபடி எல்லாரோடும் ஒக்க மேல்விழுந்து புரையறக் கலக்கையும், அது தன் பேறாக இருக்கையும், எதிர்த்தலையில் அபேக்ஷையின்றியிலேயிருக்கக் கலக்கையும். இதுதன்னை அருளிச்செய்கிறார்—(இந்த கு₃ணத்தைக் கண்டு) *என்று தொடங்கி. அதாவது—வத்ஸலனுமாய், வகுத்த வனுமாயிருந்தாலும் தன்னுடைய விஶ்ருங்க₂லிதமான ஐஶ்வர்யம் தோற்றும்படி இருக்குமாகில், அதிக்ஷுத்₃ரனான இச்சேதநனாலே ஆஶ்ரயிக்கவொண்ணாது என்னவேண்டாத படி, பெரியனான தன்னைத் தாழவிட்டு "ஹே க்ருஷ்ண !*

---

a திருவாய் 10-7-6 b திருவாய் 1-10-7 c திருவாய் 1-5-1 d திரு மாலை 34 e திருக்குறு 12 f பெரியாழ்-திரு 5-1-1

a கட்கரிய திருமேனியை b நிலைக்கணங்களும் காணும்படி கண்ணுக்கிலக்காக்குகை—ஸௌலப்₄யம். c சன்மம் பலபல செய்து d கண்காணவந்து ஓரொருத்தர்க்கு ஓரொரு தே₃ஶகாலங்களிலே வடிவைக் காட்டின ஸௌலப்₄யம் பரத்வமென்னலாம்படி எல்லா தே₃ஶகாலங்களிலும் e இம்மட உலகர் காணலாம்படி பண்ணின அர்ச்சாவதார ஸௌலப்₄யம் விஞ்சியிருக்கும்.

ஹே யாத₃வ! ஹே ஸகே₂! என்னலாம்படி சிறியாரோடே ஒருநீராகக் கலந்து பரிமாறுகை என்றபடி.

ஸௌலப்₄யமாவது:— கண்ணுக்கு விஷயமன்றிக்கே யிருக்கிற தான் கண்ணாலே கண்டு ஆஶ்ரயிக்கலாம்படி எளியனாயிருக்கை. இதுதன்னை அருளிச்செய்கிறார். (கட்கரிய) என்று தொடங்கி. அதாவது— "மாம்" என்று ஸேநாதூ₄ளிதூ₄ஸரிதமான திருக்குழலும், கையும் உழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸௌப₄யம் பரத்வமென்னும்படியிருக்கும், இந்நாராயண பத₃த்தில் ஸௌலப்₄யம். அதாகிறது—அர்ச்சாவதார ஸௌலப்₄யம். "எளிவரும், இணைவனும் என்றவை பரத்வமாம்படி அவனுக்கும் ஸௌலப்₄யகாஷ்டை₂" என்றிறே இவர் தாமும் ஆசார்ய ஹ்ருத₃யத்தில் அருளிச்செய்தருளினார். அதுதன்னை அருளிச்செய்கிறார் (சன்மம் பல) என்று தொடங்கி. பரமபத₃ம் க்ஷீராப்₃தி₄ தொடக்கமானவை தே₃ஶவிப்ரகர்ஷத்தாலே ஆஶ்ரயிக்கவொண்ணாது. விப₄வாதி₃கள் இதா₃நீந்தநர்க்குக் காலவிப்ரகர்ஷத்தாலே ஆஶ்ரயிக்கவொண்ணாது. அந்தர்யாமித்வாதி₃கள் அசக்ஷுர்விஷயமாகையாலே ஆஶ்ரயிக்கவொண்ணாது. இனி இம்மூன்று குற்றங்களுமின்றிக்கே யிருக்குமது "பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களம்" என்றும் "அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ நீர்

a திருவாய் 7-7-11 b திருச்சந்த 16 c திருவாய் 3-10-1 d திருவாய் 3-10-6 e திருவாய் 9-2-7

தோ$_3$ஷம் பாராதே கார்யம் செய்யுமென்று, வெருவாதே கண்டு பற்றினவர்களுக்குக் கார்யம் செய்கைக்குறுப்பான

இந்தளூரீரே" என்றும் குலாவப்படுகிற அர்ச்சாவதாரமிறே என்றபடி.

இக்கு$_3$ணங்களுக்கு இவ்விடத்தில் விநியோக$_3$ங்கள் எவை என்ன அருளிச்செய்கிறார் (**தோ$_3$ஷம் பாராதே**) இத்யாதி$_3$.

உத்தரார்த்$_3$த$_4$த்தில் சொல்லுகிற விரோதி$_4$ நிவ்ருத்தி பூர்வகமான ப்ராப்யஸித்$_3$தி$_4$க்கு ஏகாந்தமாய், அஹம் ஶப்$_3$த$_3$த்திலே உக்தமான ஜ்ஞாநஶக்த்யாதி$_3$ கு$_3$ணசதுஷ்கமும், அவற்றுக்குப் பெருநிலைநிற்கும் இரக்கமும் இப்பத$_3$த்திலே அநுஸந்தே$_4$யம் என்கிறார் (**கார்யம் செய்கைக்கு**) என்று தொடங்கி. ஸ்வீகாரத்துக்கு உபயுக்தங்களான கு$_3$ண விஶேஷங்களோபாதி உபாயத்வோபயோகி$_3$களான கு$_3$ண விஶேஷங்களும் இவ்விடத்தே அநுஸந்தே$_4$யங்கள். ப்ரத$_2$ம பாதா$_3$நந்தரத்தில் அஸ்மச் ச$_2$ப்$_3$த$_3$த்துக்குப்போலே. இதுக்கு ஸங்கோசமில்லாமையாலே, அஸ்மச் ச$_2$ப்$_3$த$_3$ த்$_3$வயார்த்த$_2$மும் இவ்விடத்திலே அநுஸந்தே$_4$யம் என்றபடி. இவையிறே ஆஶ்ரித கார்யாபாத$_3$க கு$_3$ணங்கள்:. ஆஶ்ரிதஸ்ய—ஶரணவரணகர்த்து:, கார்யஸ்ய—அநிஷ்டநிவ்ருத்த்யாதே$_3$:, ஆபாத$_3$கா:—உபயோகி$_3$ந: என்றபடி. ஸர்வஜ்ஞத்வமாவது—"அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித்" "யோ வேத்தி யுக$_3$பத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா$_3$ ஸ்வத:" என்கிறபடியே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கை. ஸர்வஶக்தித்வமாவது:—அக$_4$டிதக$_4$டநாஸாமர்த்$_2$யம். ஹேயரான நித்ய ஸம்ஸாரிகளை, உபாதே$_3$யதமரான நித்யஸூரிகளோடு, ஒரு கோவையாக்கவல்ல அத்$_3$பு$_4$தஶக்தி. பூர்த்தியாவது:— அவாப்த ஸமஸ்தகாமத்வம். ப்ராப்தியாவது:—"அஶேஷ சித$_3$சித்$_3$ வஸ்து ஶேஷிபூ$_4$த" என்கிறபடியே ஸமஸ்த பதா$_3$ர்த்தா$_2$நுப$_3$ந்தி$_4$ ஸகலாதிஶயங்களுக்கும் தான் ப$_2$லியாய் இருக்கை.

ஜ்ஞாந ஶக்தி க்ருபைகளும் இதிலே அநுஸந்தி4க்கப்படும்

கீழ் வாத்ஸல்யாதி3ப்ரகரணத்திலே சொன்ன ஸ்வாமித்வத்துக்கும், இந்த ஶேஷித்வத்துக்கும் வாசி என் ? என்னில்; தன்னை ஒழிந்த ஸமஸ்த வஸ்துக்களையும் தன் உடைமையென அபி4மாநித்தல் ஸ்வாமித்வம். அவற்றாலே ஆஹிதமான அதிஶயத்தை உடைத்தாயிருக்கை ஶேஷித்வம். ஸ்ரீபா4ஷ்யகாரரும் "அஶேஷசித3சித்3வஸ்து ஶேஷி பூ4த! அகி2ல ஜக3த் ஸ்வாமிந்!" என்று ஸ்வாமித்வ ஶேஷித்வங்களைப் பிரிய அருளிச்செய்தாரிறே. இங்கே சிலர் 'சேதந ஶேஷித்வம் ஸ்வாமித்வம்' என்று கொண்டு, சேதநாசேதந ஸாதா4ரணமாக ஶேஷித்வத்தையும், சேதந மாத்ரவிஶ்ராந்தமாக ஸ்வஸ்வாமிபா4வத்தையும் நிர்வஹிப்பர்கள். அதுபொருளன்று. கிஞ்சித்காரப்ரதிஸம்ப3ந்தி4த்வமே ஶேஷித்வமாகையால், கிஞ்சித்காரமில்லாமலும் ஸ்வஸ்வாமிபா4வம் காண்கையாலும் பூர்வோக்தநிர்வாஹமே யுக்தமென்னத்தகும்.

கருணை உந்மேஷமடையாதபோது இவையித்தனை கு3ணங்களும் தோ3ஷமாமிறே. இந்த்3ரியங்களுள் மநஸ்ஸுக்கு ப்ராதா4ந்யம்போலே திருக்கல்யாண கு3ணங்களுள் கருணைக்கு ப்ராதா4ந்யம். "அருள் கொண்டாடு மடியவர்" என்றாரிறே ஸ்ரீமது4ரகவிகளும். அக்கு3ணமும் இங்கே அநுஸந்தே4யம் என்கிறார் (க்ருபை) என்று தொடங்கி.

ஆஶ்ரயமான ஸ்வரூபத்துக்கு ஆஶ்ரயணீயத்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயம் உண்டானாப்போலே, ஆஶ்ரயியான கு3ணவிஶேஷங்களுக்கும் ஆகாரத்ரயம் உண்டாகக்கடவதாகையாலே வாத்ஸல்யாதி3கள் ஆஶ்ரயணத்துக்குறுப்பாய், ஜ்ஞாநாதி3கள் ஶரண்யத்வத்துக்குறுப்பாய், ஸௌந்த3ர்யாதி3கள் ப்ராப்யத்வத்துக்குறுப்பாயிருக்கும்.

a 'நல்கித் தான் காத்தளிக்கும்' என்று வாத்ஸல்யமும், b 'முழுவேழுலகுக்கும் நாதன்' என்று ஸ்வாமித்வமும், c 'நங்கள் பிரான்' என்று ஸௌஶீல்யமும், d 'நாவாயுறைகின்ற' என்று ஸௌலப்$_4$யமும், e 'ஞாலமுண்டாய் ஞானமூர்த்தி' என்று ஜ்ஞாந ஶக்திகளும், f 'நல்லருள் நம்பெருமான்' என்று க்ருபையும் நாராயண ஶப்$_3$த$_3$த்துக்கு அர்த்த$_2$மாக ஆழ்வார் அநுஸந்தி$_4$த்தருளினார்.

இந்த நாராயணபத$_3$ம் பூர்வக$_2$ண்ட$_3$த்தில் உள்ள தொன்றாகையாலே ஆஶ்ரயணத்துக்கேகாந்தமான ஸௌலப்$_4$யத்திலே நோக்காயிருக்கும். சரமஶ்லோகத்தில் "மாம்" ஶப்$_3$த$_3$ம் ஸௌலப்$_4$யபரமாகிலும், அங்குத்தை ஸௌலப்$_4$யம் "மய்யாஸக்தமநா: பார்த்த$_2$" என்று தன் பக்கலிலே ஆஸக்தமான மநஸ்ஸை உடைய அர்ஜுநன் ஒருவனுக்குமாய் இருக்கும். அர்ச்சாவதார ஸௌலப்$_4$யம் ஸர்வவிஷயமாய் இருக்கும். "நீயே நமக்கு வேண்டா" என்றவர்களையும் விடமாட்டாத ஸௌலப்$_4$யமிறே இது. அந்த ஸௌலப்$_4$யம் காதா$_3$சித்கமாயிருக்கும். இந்த ஸௌலப்$_4$யம் ஸார்வகாலிகமாயிறேயிருப்பது. இந்த எளிமைக்கு வாசகமிறே நாராயணபத$_3$ம்.

இவ்வர்த்த$_2$ங்களை ஆழ்வார் பாசுரங்கொண்டு நிரூபிக்கிறார் (நல்கி) என்று தொடங்கி. இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். ஸௌகர்யாபாத$_3$கமாயும், கார்யாபாத$_3$கமாயும் சொன்ன இக்கு$_3$ணங்கள் எல்லாம், இவை காண்கையிலே அபேக்ஷையுடைய நமக்கு, நம்முடைய பெருமாள் பக்கலிலே காணலாம் என்றபடி. திருக்கையிலே பிடித்த தி$_3$வ்யாயுத$_4$ங்களும், வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆஸநபத்$_3$மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே தஞ்சம் என்கை. ஆக நாராயண பதா$_3$ர்த்த$_2$த்தை அருளிச்செய்தாராயிற்று.

---

a திருவாய் 1-4-5 b திருவாய் 2-7-2 c திருவாய் 9-3-1
d திருவாய் 9-8-7 e திருவாய் 4-7-1 f திருவாய் 5-9-10

"சரணை" ஸப்$_3$தா$_3$ர்த்த$_2$ம்

'சரணை'—என்று, பிராட்டியும் எம்பெருமானும் விடிலும் விடாத a திண்கழலாய் b முழுதும் வந்திறைஞ்சும் c மென் தளிர் போலடியாய் வந்திறைஞ்ச விராதே d 'கமல பாதம் வந்து' என்னும்படி e நீள்கழலாய்ச் f சாடுதைத்தவொண்

இனி, (சரணை) என்கிற பத$_3$த்துக்கு அர்த்த$_2$மருளிச் செய்கிறார் (சரணை) என்று தொடங்கி. உபாயத்வத்துக்கேகாந்தமான இதன் கு$_3$ணாதி$_4$க்யத்தை அருளிச் செய்கிறார் (பிராட்டியும் எம்பெருமானும்) என்று தொடங்கி. அதாவது — ஸ்ரீமத் பத$_3$த்திலே புருஷகாரபூ$_4$தையாகச் சொன்ன பிராட்டியும், அவள் தானே சிதகுரைக்கிலும் "என்னடியார் அது செய்யார்" என்னும்படி நாராயண பத$_3$த்திற்சொன்ன கு$_3$ணவிஶிஷ்டனை அவனும் கைவிடிலும், திருவடிகள் தன் வைலக்ஷண்யத்தாலே துவக்கிக் கொள்ளுகையாலே கைவிடாது; "வண்புகழ் நாரணன் திண்கழல்" என்கிறபடியே பற்றினாரை நழுவவிடாதே திண்மையையுடைத்தாயிருக்குமென்கை. ஸர்வ ஸமாஶ்ரயணீயத்வத்தைக் கலியன் பாசுரங்கொண்டு நிரூபிக்கிறார் (முழுதும்) என்று. "யத்நப$_2$லித்வங்கள் உபாயபூ$_4$தனான அவனுக்கே" என்ற உபாயபூர்த்தியை அருளிச்செய்கிறார் (கமல பாதம் வந்து) என்று தொடங்கி. ஓடிவந்து தம்மைத்தொடர்ந்தபடியும், அயத்நலப்$_3$த$_4$மானபடியும் சொல்லுகிறது. (வந்து, நீள்கழல்) என்று உபாயபூர்த்தியைச் சொல்லுகிறது. நாள்தோறும் ஆஶாலேஶமுடையாரிருந்தவிடத்திலே செல்ல வளரும் திருவடிகளிறே. த்$_3$வீபாந்தரத்தில் சரக்குச்சேரவேண்டினால் பாதிப்பாதி வழியாகிலும் வருதல், ஒருதலைப்பற்றுதல் செய்யவேணுமிறே. அங்ஙனன்றியே, "வந்துனதடியேன் மனம் புகுந்தாய்" என்கிறபடியே வழிவந்தானும் தானே.

---

a திருவாய் 1-2-10 b பெரியதிரு 5-8-5 c பெரியதிரு 7-4-8
d அமலனாதி 1 e திருவாய் (1-9-11),(1-10-1),(5-9-8) f முதல்திருவ 100

மலர்ச் சேவடியாகையாலே. a யாவர்க்கும் வன்சரணுய். b அழும் குழவிக்கும் c பேதைக் குழவிக்கும் த₄ாரகமுமாய்.

பற்றினும் தானே என்கிறது. உனதடியேன்—வருகிற போது புகுருகைக்கடியாக அவன் கையோடு கொடுவந்த ப்ரமாணம். "நீயோ உன் கார்யத்துக்குக் கடவாய். நான் காண்" என்று தானே ஸர்வப₄ரங்களையும் நிர்வஹிப்பானுக வாய்த்து ஏறிட்டுக்கொண்டு புகுந்தது. வந்து புகுரப் புக்கால் இசையாதே "அல்லேன்" என்கைக்கு வாய்த்தலை யான நெஞ்சிலே வந்து புகுந்தானுய்த்து. "யாநெுட்டி என்னுள் இருத்துவம் என்றிலன் தாநெுட்டி வந்து" என்றுரிறே ஆழ்வார். இசைவு என்னுலே வந்ததாகிலன்றே விடுகையும் என்னுலே வந்ததாவது. "ஆழ்வீர்! நாம் உம்முடையபாடே இருப்போம்" என்றுல், "ஒட்டேன்" என்பரே. ஆகில். இங்கே இருக்கக்கடவோம் என்று ப்ரதிஜ்ஞை பண்ணியாயிற்று வந்திருப்பது. எனக்கு ஜ்ஞாநம் பிறக்கைக்கு க்ருஷிபண்ணி, பிறந்த ஜ்ஞாநம் ப₂லிக்குமளவாகக்கொண்டு. நான் "அகன்று போவேன்" என்றுல் அவன் ஸம்வதி₃க்குமோ? நான் அவனை விட்டாலும் அவன்தான் என்னை விடான் — பத்தி உழவனிறே. இவ்வருகடங்கலும் ப₂ல போ₄க்தாவான ஈச்வரன் க்ருஷி ப₂லம் என்றபடி.

த்₃விவசநம் இரண்டுக்குமேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே. ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தியைச் சொல்லுகிறது. "சரணை" என்கிற இடத்திலே "தமேவ ஶரணம் க₃ச்ச₂" "கழல்களவையே சரணுக" "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்" இத்யாதி₃களிற் படியே அவத₄ாரணம் விவக்ஷிதம் என்றும் சொல்லுவர். திருவடிகளின் த₄ாரகத்வ போ₄க்₃யத்வங்களை அருளிச்செய்கிருர் (அழுங்குழவி) என்று தொடங்கி. அழுங்குழவி—

a திருவாய் 6-3-7 b பெருமாள்திரு 5-1 c பெரியாழ்திரு 1-2-1

பே$_4$ாக்$_3$யமுமாய், a 'இணைத்தாமரையடி' என்னும்படி சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளைச் சொல்லுகிறது.

அவன் 'மாம்' என்று தன்னைப் பற்றச் சொன்னாலும் ஶேஷபூ$_4$தர் b 'கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்'

---

*சேதநன். பேதைக்குழவி — ஈஶ்வரன். த$_4$ாரகத்வ பே$_4$ாக்$_3$யத்வங்களை "மேதி$_3$வ்யம்" [கீ$_3$தை 4-9] முதலானவிடங்களில் காணலாம். திருவடிகளின் சேர்த்தியழகை அருளிச்செய்கிறார் (**இணைத்தாமரை**) என்று தொடங்கி. இரண்டு தாமரைப்பூவை நிரைத்துவைத்தாற்போலேயிருக்கிற சேர்த்தியழகைச் சொல்லும் த்$_3$விவசநம் என்றபடி.*

*இந்த கு$_3$ணதி$_4$க்யத்தையிட்டு மாத்திரமல்லாமல், இவன் தன் ஸ்வரூபாநுகு$_3$ணமாகவும் திருவடிகளிலே இழிகிறான் என்னுமத்தை அருளிச்செய்கிறார் (**அவன் மாம்**) என்று தொடங்கி. "ஶேஷிபக்கல் ஶேஷபூ$_4$தன் இழியும் துறை, ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப்போலே" என்றருளிச்செய்தாரிறே ஸ்ரீமல்லோகதே$_3$ஶிகன். அதாவது—ஶேஷிபக்கல் ஆஶ்ரயிக்க இழியும் ஶேஷபூ$_4$தன், தன் ஸ்வரூபாநுகு$_3$ணமாக இழியும் துறை திருவடிகள்; ஸ்தநந்த$_4$ய ப்ரஜை தாயினுடைய அவயவமெல்லாங்கிடக்கத் தனக்கு வகுத்ததாயுள்ள முலையிலே வாய்வைக்குமாப்போலே என்கை.*

"சித்தாலம்ப$_3$ந ஸௌகர்ய க்ருபோத்தம்ப$_4$கதாதி$_3$பி$_4$:।
உபாயத்வமிஹ ஸ்வாமி பாத$_3$யோரநுஸம்ஹிதம் ॥"

இங்கு த$_3$ாஸபூ$_4$தன் ஔசித்யாதிஶயத்தாலும், "அநதிக்ரமணீயம் ஹி சரணக்$_3$ரஹணம்" என்கிறபடியே க்ருபோத்தம்ப$_4$கத்வாதிஶயத்தாலும், "தவாம்ருதஸ்யந்தி$_3$நி" இத்யாதி$_3$களிற்படியே பே$_4$ாக்$_3$யத்வாதிஶயத்தாலும் திருவடிகளை

---

a பெரியதிரு 1-8-3 b திருவாய் 10-5-1

a "எந்தை கழலிணை பணிமின்" b 'ஆயனடியல்லது' c 'நின்னடியன்றி மற்றறியேன்' என்று d கண்ணனைத் தாள் பற்றக் கடவர்களிறே.

e இணைத்தாமரைகட்கு அன்புருகி நிற்கும் அது நிற்கச் f சிலம்படியிலே மண்டுகிறவனுக்கு. g அன்னமென்னடையை அருவருக்கும்படி, h சேவடிக்கே மறவாமையை உண்டாக்கி i அன்புசூட்டப்பண்ணி; j பாதமே சரணாகக் கொடுத்து. k 'கழல் காண்டுங் கொல்' l 'தலைக்கணியாய்' m 'சரணம்

அவலம்பி₃க்கிறான். இவ்வர்த்த₂ம். "ஸர்வதா₃ சரணத்₃வந்த்₃வம்" "த்வத்பாத₃கமலாத₃ந்யத்" "மம தே பாத₃யோ: ஸ்தி₂தம்" "லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ₄" "ஸ ப்₄ராதுஶ்சரணௌ கா₃டம்₄" "தஸ்ய தாம்ரதலௌ தாத சரணௌ ஸுப்ரதிஷ்டி₂தௌ। ஸுஜாதம்ருது₃ரக்தாபி₄ரங்கு₃லீபி₄ரலங்க்ருதௌ ॥ ப்ரயதேந மயா மூர்த்₄நா க்₃ருஹீத்வா ஹ்யபி₄வந்தி₃தௌ ॥" "சரணௌ ஶரணம் யாத:" "ப்ரபந்நாகௌ₄க வித்₄வம்ஸி சரணௌ ஶரணம் க₃த:" இத்யாதி₃களிலும் ப்ரஸித்₃த₄ம். இவற்றை அடியொற்றினவர்களும் "உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்றும் "த்வத்பாத₃மூலம் ஶரணம் ப்ரபத்₃யே" என்றும் அருளிச்செய்தார்கள். "ஸௌகு₃ந்த்₄ய ஸௌகுமார்யாதி₃கு₃ணவிக்₃ரஹவாந் ஹரி: । தஸ்ய ஸ்வாத்மப்ரதா₃நே து ஸாத₄நம் ஸ்வபத₃த்₃வயம் ॥" என்று அபி₄யுக்தரும் ப்ரதிபாதி₃த்தார்கள்.

ருசிஜநகத்வாதி₃கள் திருவடிகளின் வைப₄வங்கள். இதுதன்னை அருளிச்செய்கிறார் (இணைத்தாமரைகட்கு) என்று தொடங்கி. "சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ

a திருமாலை 9 b பெரியதிரு 1-10-8 c பெரியதிரு 7-7-2, 3, 5, 6
d திருவாய் 3-10-10 e திருவாய் 7-1-10 f பெரியதிரு 1-6-2
g பெரியதிரு 9-7-2 h பெரியதிரு 3-5-4 i திருவிருத்தம் 2 j திருவாய் 5-7-10 k திருவாய் 5-9-3 l திருவாய் 9-2-2 m திருவாய் 5-8-7

தந்தென் சன்மம் களையாய்' என்றிருக்கிற அபேக்ஷைகளை யுண்டாக்கி, a 'தாள் கண்டு கொண்டு என்தலைமேல் புனைந் தேன்' b 'காண்டலுமே விண்டேயொழிந்த' என்கிற பேறு களைக் கொடுத்து, c 'அங்கோர் நிழலில்லை நீருமில்லை' என் கிற விடாயை d அடிநிழல் தடத்தாலேயாற்றி e பாதபோதை யுன்னி வழிநடத்தி. f தாளிணைக் கீழ்ப்புகும் காதலுக்கீடாகத் g தாளின் கீழ்ச்சேர்த்து. h வேறே போகவிடாதே. i அடிக் கீழிருத்தி, j திருவடியே சுமந்துழலப்பண்ணி. k அடிக்கீழ் குற்றேவலிலே மூட்டி. ருசி ஜநகத்வம் முதலாக நித்ய கைங் கர்யம் எல்லையாக நடத்துவது திருவடிகளைக் கொண்டிறே.

இத்தால் புருஷகாரமான l பனி(மா)மலராள் வந்திருக்கு மிடமாய். m சுடர் வான் கலன் பெய்த மாணிக்கச் செப்புப்

டிசைந்த காலம், மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனை. போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகன்' என்று ரிறே ஆழ்வார். "எங்ஙனேயோ"வில் ருசிஜநகத்வத்தை யும், "நோற்றநோன்"பில் உபாயத்வத்தையும். "ஆரா வமு"தில் உபேயத்வத்தையும் அருளிச்செய்தாரிறே நம்மாழ்வார். "இதுதான்—ஶாஸ்த்ரங்களால் திருத்த வொண்ணாதே. விஷயாந்தரங்களிலே மண்டி விமுக₂ராய்ப் போரும் சேதநர்க்கு வைமுக்₂யத்தை மாற்றி ருசியை விளைக்கக்கடவதாய், ருசி பிறந்தால் உபாயமாய், உபாய பரிக்₃ரஹம் பண்ணினால் பே₄ாக்₃யமுமாயிருக்கும்" என்ற ஸ்ரீ வசநபூ₄ஷண ஸூத்ரமும், பிள்ளையுறங்காவில்லிதாஸர் சரிதமும் இங்கே அநுஸந்தே₄யம்.

திருவடிகளைச் சொன்ன இது, திருமேனிக்கு உப லக்ஷணம் என்கிறார் (இத்தால்) என்று தொடங்கி. "இத்

---

a திருவாய் 10-4-3 b திருவாய் 10-4-9 c பெரியாழ்திரு 5-3-4 d திருவாய் 10-1-2 e திருச்சந்த 66 f திருவாய் 3-9-8 g திருவாய் 7-5-10 h திருவாய் 2-9-10 i திருவாய் 5-1-11 j திருவாய் 4-9-9 k திருவாய் 1-4-2 l பெரியதிரு 2-2-9 m பெரியதிரு 7-10-6

போலே ஸ்வரூபகு₃ணங்கள் நிழலெழும்படியாய், 'திருமேனி கிடந்ததுவே' என்னும்படி அவையொழியவும் தானே கார்யம் செய்யவற்றாய், சிசுபாலனோடு சிந்தயந்தியோடு வாசியற ஸித்₃த₄ஸாத்₄யரூபமான உபாயங்களால் செய்யும் கார்யத்தை யும் தானேசெய்து a 'அலவலைமை தவிர்த்த' b 'காதல் கடல்

தால் பிராட்டிக்கு இருப்பிடமாய் கு₃ணப்ரகாஶகமுமாய், ஶிஶுபாலனையுமகப்படத் திருத்திச் சேர்த்துக்கொள்ளும் திருமேனியை நினைக்கிறது." என்று அருளிச்செய்தாரிறே ஸ்ரீமல்லோகாசார்யனும். அதாவது—"சரணௌ" என்று விக்₃ரஹ ஏகதே₃ஶமான திருவடிகளைச் சொன்னவித்தால்— "திருவிருந்த மார்வன்" என்னும்படி ஸ்ரீமத்பத₃த்திற் சொன்ன புருஷகாரபூ₄தையான பிராட்டிக்கு இருப்பிட மாய், நாராயணபத₃த்திற் சொன்ன கு₃ணங்களுக்கு ப்ர காஶகமாய், "பல பல நாழம் சொல்லிப் பழித்த சிசு பாலன்" என்கிறபடியே ப்ரத்₃வேஷபரனாய், நிந்தோ₃க்தி களைப் பண்ணித்திரிந்த ஶிஶுபாலனையும் உட்பட "அல வலைமை தவிர்த்த அழகன்" என்கிறபடியே தன்னழகாலே த்₃வேஷாதி₃களை போம்படி திருத்தி "திருவடி தாட்பால் அடைந்த" என்கிறபடியே சேர்த்துக்கொள்ளும் ஸ்வ பா₄வத்தையுடைத்தான தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்தை நினைக்கிறது என்கை. "ஆராத்₄ய ரூப ப்ரத₃ர்ஶநேந ப₄க்த் யுத்பாத₃நம் அவதாரஸாத₄ரண ப்ரயோஜநம்| பரஶ ஶதபருஷவாதீ₃ ஜந்மத்ரயஶத்ரு: ஶிஶுபாலோऽபி ஹி க்ருஷ்ணத₃ர்ஶநேந ப்ரீதிமாந் பூ₄த்வா முக்திம் க₃த:||" இத்யாதி₃ தாத்பர்யசந்த்₃ரிகாவசநம் அத்ராநுஸந்தே₄யம். தி₃வ்யாத்ம ஸ்வரூபத்திலும் கீழ்ச்சொன்ன கு₃ணாதி₃களிலும் தெளிவில்லாதார்க்கும், ஶுத்₃த₄ஸத்வத்₃ரவ்யமயமாய், ஸ்வ விஷய ஜ்ஞாநத்தாலே ஜ்ஞாநஸங்கோசத்துக்கு நிவர்த்தக மாய், பரத்வ ஸௌலப்₄ய வ்யஞ்ஜகமான தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹமே இலக்காம். இப்ராதா₄ந்யத்தைப்பற்ற க₃த்₃

a பெரியாழ்திரு 4-3-5 b திருவாய் 5-3-4

புரைய விளைவித்த' என்னும்படி அத்₃வேஷத்தையும் பரப₄க்தியையும் உண்டாக்கித் தன்னோடே சேர்த்துக்கொள்ளும் திருமேனியை நினைக்கிறது.

யத்தில் கு₃ணங்களுக்கு முன்னே தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்தை அருளிச்செய்தார். தி₃வ்யாத்ம ஸ்வரூபத்தில் தெளிவுடையராயிருக்கச் செய்தேயும் "மூர்த்தம் ப்₃ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்₃ய்யத்₃பு₄தம்" என்னும்படி ஈஶ்வரன்தனக்கும் போ₄க்₃யதமமான தி₃வ்யவிக்₃ரஹாநுப₄வத்தில் ஊற்றத்தாலே திருமங்கையாழ்வார் தம்மை ஈஶ்வர விஷயத்தில் தே₃ஹாத்மவாதி₃களாக அருளிச்செய்வர். ஸர்வேஶ்வரனுடைய தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்துக்கு "பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்ப நாமயம்| தத் புண்ட₃ரீகநயநம் விஷ்ணோர் த்₃ரக்ஷ்யாம்யஹம் முக₂ம் ॥" "ரூபௌதா₃ர்யகு₃ணை: பும்ஸாம் த்₃ருஷ்டிசித்தாபஹாரிணம்" இத்யாதி₃களிற்படியே ஶுப₄த்வமும் ஆஶ்ரயத்வமுமுண்டு. சதுர்முகா₂தி₃விக்₃ரஹத்துக்கு ஆஶ்ரயத்வம் உண்டாகிலும், ஶுப₄த்வமில்லை. ப₄க₃வத் ஸ்வரூபத்துக்கு ஶுப₄த்வமுண்டேயாகிலும் ஆஶ்ரயத்வமில்லை. ஆகையால் தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்துக்கே ஶுப₄த்வமும் ஆஶ்ரயத்வமும் உள்ளது. "ஸ்வரூபாத் ஸ்வாமினோ ரூபம் உபாதே₃யதமம் விது₃:" என்றதாய்த்து.

நாராயண பத₃த்திற் சொல்லுகிறபடியே ஈஶ்வரன் கு₃ணத்₃வாரா உபாய பூ₄தனுமோபாதி, விக்₃ரஹத்₃வாராவும் உபாயபூ₄தனுமென்று விக்₃ரஹத்தினுடைய ஸ்வதந்த்ரோபாயத்வம் தோற்றுகைக்காகத் தனியே விக்₃ரஹத்தை உபாதா₃நம் பண்ணுகிறது. ஆகையிறே பா₄ஷ்யகாரர் "ஸௌந்த₃ர்யாதி₃ கு₃ணாவிஷ்காரேண அக்ரூரமாலாகாராதீ₃ந் பரமபா₄க₃வதாந் க்ருத்வா" என்றருளிச்செய்தார். "தெரிவைமார் உருவமே மருவி" என்கிறபடியே இதரவிஷயங்களினுடைய பொரிபுறந்தடவின வடிவிலே அகப்பட்டுப் போருகிற சேதநனுக்கு ஸ்வவிஷயக ருசிஜநகமாயும்,

ஶரண ஶப்3தா3ர்த்த2ம்

(ஶரணம்) என்று திருவடிகளைப் பற்றும்படியைச் சொல்லுகிறது. அவித்3யை முதலாக தாபத்ரயம் முடிவாக

உபாயமாயும், உபேயமாயும் ஆகிறது ப4க3வத்3தி3வ்ய மங்க3ள விக்3ரஹம். "ஜிதந்தே புண்ட3ரீகாக்ஷ" என்றும், "சரணத்3வந்த்3வம் வ்ரஜாமி" என்றும், "ந ஜாநே ஶரணம் பரம்" என்றும், "த்வத்பாத3 கமலாத3ந்யத்" என்றும் "பாத3யோஸ் ஸ்தி2தம்" என்றும் விக்3ரஹத்தினுடைய ருசிஜநகத்வத்தையும் உபாயோபேயத்வங்களையுமிறே ஜிதந்தையில் அடைவே ப்ரதிபாதி3க்கிறது. "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று ஆழ்வாரும், "ஸ ப்4ராது: சரணௌ கா3ட4ம் நிபீட்3ய" என்று ஆழ்வார்க்கடியானை இளையபெருமாளும் திருவடிகளையிறே உபாயமாக அத்4யவஸித்தது. ப்ராப்யமும் ஸ்வரூபமும் ஸூரிகளோடு ஸமானமாயிருக்குமாபோலே, ப்ராபகமும் ஸூரிஸமானமாயிறே யிருப்பது என்றபடி.

அநந்தரம் ஶரணபத3ார்த்த2த்தை அருளிச்செய்கிறார் (ஶரணம்) என்று தொடங்கி. ஶரணம் — உபாயமாக என்றபடி. "உபாயே க்3ருஹரக்ஷித்ரோ: ஶப்3த3: ஶரண மித்யயம்| வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தை2கவாசக:||" என்கிறபடியே ஶரணஶப்3த3ம் ரக்ஷிதாவுக்கும் க்3ருஹத்துக்கும் உபாயத்துக்கும் வாசகமேயாகிலும், இவ்விடத்தில் உபாயத்துக்கே வாசகமாகையாலும், உபாய க்ருத்யம் இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரகரணமாகையாலும், 'இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக' என்று இப்பத3த்துக்கு அர்த்த2ம் என்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (அவித்3யை) என்று தொடங்கி. இஷ்டாநிஷ்டங்கள் இவ்வதி4காரிக்கு எவை என்பதனை அருளிச்செய்கிறார் (அவித்3யை முதலாக) என்று

நடுவுள்ள அநிஷ்டங்களையும் போக்கி a பிணிவளராக்கை நீங்குகை முதலாக b நின்றேயாட்செய்கை முடிவாக நடுவுள்ள இஷ்டங்களையும் தரும் உபாயமாக.

தொடங்கி. அநிஷ்டமாவது:— "நீர்நுமது என்றிவை வேர்முதல் மாய்த்து" என்றும், "அநாத்மந்யாத்ம பு3த்3தி4ர்யா" என்றும் சொல்லுகிறபடியே அநாத்மந்யாத்ம பு3த்3தி4ரூபமாயும் அஸ்வே ஸ்வப்ரதிபத்திரூபமாயுமிருக்கிற அவித்3யையும், அவித்3யா கார்யமான ராக3த்3வேஷங்களும், கரணத்ரயத்தாலும் கூடுபூரித்துவைக்கும் தத்கார்யங்களான புண்யபாபரூபகர்மங்களும், கர்மத்3வயத்தினுடைய ப2லபோ4கா3ர்த்த2மாகப் பரிக்3ரஹிக்கும் தே3வதிர்யகா3தி3யான நாநாவித4ஶரீரங்களும், அஶ்ஶரீரங்களைப் பரிக்3ரஹித்து அநுப4விக்கும் ஆத்4யாத்மிகாதி3 து3:க்க2பரம்பரைகளும் தொடக்கமானவை. இஷ்டமாகிறது:— புண்யபாபகர்ம வி து4நநப்ரகாரமும், ஹார்த்த3மார்க்க3விஶேஷப்ரகாரமும், ஹ்ருத3யகு3ஹாநிர்க3மநமும், அர்ச்சிர்வாஸரோத்தராயண ஶுக்லபக்ஷாத்3யாதிவாஹிக ஸத்காரமும், ஸலிலத3ஹந பவநாத்3யாவரணஸப்தகநிலங்க4நமும், த்ரிகு3ணாதிக்ரமணமும், விரஜாக்2ய அப்ராக்ருத நதீ3விஶேஷாவகா3ஹநமும், ஸூக்ஷ்ம ஶரீரவிமோசநமும், அமாநவகரஸ்பர்ஶமும், அபஹதபாப்மத்வாதி3கு3ணக3ண தத3ாஶ்ரய ஸ்வரூபப்ரகாஶமும், பஞ்சோபநிஷந்மயமான தி3வ்யவிக்3ரஹபரிக்3ரஹமும், ஐரம்மதீ3ய தி3வ்யஸர:ப்ராப்தியும், தி3வ்யாப்ஸரஸ்ஸங்க4 ஸத்காரமும், ப்3ரஹ்மாலங்காராலங்கரணமும், ப்3ரஹ்ம க3ந்த4ரஸதேஜ: ப்ரவேஶமும், தி3வ்யகோ3புரப்ராப்தியும், ஸூரிஸங்க4ஸத்காரமும், ராஜமார்க்க3க3மநமும், ப்3ரஹ்ம வேஶ்மப்ரவேஶமும், தி3வ்யமண்ட3ப ப்ராப்தியும், தி3வ்ய பர்யங்கநிரீக்ஷணமும், ஸபத்நீக ஸர்வேஶ்வரத3ர்ஶநமும், ஆநந்த3மயபரமாத்மஸமீப ஸ்தி2தியும், பாத3பீட2பர்யங்

---

a பெரியதிருமொழி 9-8-3 b திருவாய் 8-3-8

'சரணௌ ஶரணம்' என்று—a 'மருந்தும் பொருளும் அமுதமும் தானே' என்கிறபடியே அம்ருதமே ஔஷத₄மாமாப்

கோத்ஸங்க₂ாரோஹணமும், ஆலோக ஆலாப ஆலிங்க₃நாத்₃யநுப₄வமும். ஸ்வரூபகு₃ணவிக்₃ரஹாத்₃யநுப₄வ ஜநித ப்ரீதிப்ரகர்ஷமும். நாநாவித₄விக்₃ரஹபரிக்₃ரஹ பூர்வக ஸர்வதே₃ஶ ஸர்வகால ஸர்வாவஸ்த்தே₂ாசித ஸர்வப்ரகார கைங்கர்யகரணமும்.

கீழ் நிர்தே₃ஶித்த வஸ்துவை உபாயமாகச் சொன்ன தன் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (சரணௌ ஶரணம்) என்று தொடங்கி. இத்தால் ப்ராப்யந்தானே ப்ராபகம் என்கிறது. இங்கு உபாயத்வமாவது ப₂லகரணத்வரூபம் என்றபடி. ரக்ஷகத்வமிறே ப₂லப்ரத₃த்வம். உபாயத்வ ப₂லப்ரத₃த்வங்களை "சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று நம்மாழ்வாரும். "அகிஞ்சந: அநந்யக₃தி:" என்று ஆளவந்தாரும் பிரிய அருளிச்செய்தார்களிறே. "ஸாது₃ஷ்கரேண ஶோசேத்₃ய: யேந யேந இஷ்டஹேதுநா । ஸ ஸ தஸ்யாஹமேவேதி சரம ஶ்லோக ஸங்க்₃ரஹ: ॥"[தாத்-சந்18-66] என்று தே₃ஶிகனும் ப₄க₃வானுக்குப் ப₂லகரணத்வத்தை அருளிச்செய்தாரிறே. பராதி₄கரணத்தில் உபாயத்வத்தையும், ப₂லாதி₄கரணத்தில் ப₂லப்ரத₃த்வரூபரக்ஷகத்வத்தையும் ஸ்ரீ வேத₃வ்யாஸரும் பிரித்து அருளிச்செய்தாரிறே. ரக்ஷணகர்த்தாவுக்குப் ப₂ல கரணத்வம் கொள்ளில் கர்த்ருத்வ கரணத்வங்களுக்கு ஏகத்ர ஸமாவேஶம் என்ற விரோத₄ம் ப்ரஸங்கி₃க்கும் என்ன வேண்டா. சேதநாசேதநவிஶிஷ்டன் உபாதா₃நமென்றும் ஜ்ஞாநவிஶிஷ்டன் நிமித்தபூ₄தன் என்றும் ஏகாஶ்ரயத்திலே உபாதா₃நத்வ நிமித்தத்வங்களை அவச்சே₂த₃கபே₄த₃த்தாலே கொண்டாப்போலே. ரக்ஷகனுக்கே தி₃வ்யவிக்₃ரஹவிஶிஷ்டத்வவேஷேண உபாயத்வம் அவிருத்₃த₄மிறே, அதேபோல

a மூன் திருவ 4

போலே a அங்கண்மாஞாலத்தமுதமாய், அம்ருதத்துக்கு ஊற்றுவாயான அடியிணையை அம்ருதஸஞ்ஜீவிநியாகக் கல்லும் கரிக்கொள்ளியும் பெண்ணும் ஆணுமாம்படி விரோதி$_4$யைப் போக்குமென்கிறது.

ஏகத்ர ப்ராப்யத்வ ப்ராபகத்வங்கள் கூடுமிறே. ப்ரஸாத$_3$ விஶிஷ்டன் உபாயம் என்றும், ப்ரீதிவிஶிஷ்டன் உபேயம் என்றும் விஶேஷணபே$_4$த$_3$ம் கிடக்கச்செய்தே விஶிஷ்டைக்யத்தாலே எம்பெருமானே உபாயோபேயபூ$_4$தன் என்கிறதாகையாலே எல்லாம் கூடுமிறே. க்ஷீரம் பத்$_2$யமுமாய் போ$_4$க்$_3$யமுமாயிருக்கிறுப்போலே "நிர்வாணம் பே$_4$ஷஜம்" "அம்ருதம் ஸாத$_4$நம் ஸாத்$_4$யம்" "மருந்தும் பொருளும் அமுதமும் தானே" இத்யாதி$_3$களிற் சொல்லுகிறபடியே ப்ராப்யப்ராபகங்கள் ஏகமாயிறேயிருப்பது என்றபடி. கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே. ஸமஸ்தபத$_3$மான பூர்வபத$_3$த்திற்சொன்ன லக்ஷ்மீவிஶிஷ்டத்வமும், கல்யாண கு$_3$ணயோக$_3$மும், தி$_3$வ்யமங்க$_3$ளவிக்$_3$ரஹோபேதத்வமும் ஆகிற மூன்றும், "ஶ்ரியா ஸார்த்த$_4$ம் ஆஸ்தே" "ஸர்வாந் காமாந் அஶ்நுதே" "ஸதா$_3$ பஶ்யந்தி" என்று இவனுக்கு அநுப$_4$வ விஷயமாகச் சொல்லப்படுகிறவையாகையாலே ப்ராப்யமிறே என்கை. இவன் * செயலறுதியாலே உபாயமாக்குகிறுனித்தனை. அகிஞ்சநனுய் அநந்யக$_3$தியாய் இருக்கிற இவன் தன் § செயல்மாட்சியாலே, போ$_4$க்$_3$யமான பாலை மருந்தாக்குவாரைப்போலே ப்ராப்யமானதுதன்னையே ப்ராபகமாக்குகிறுனித்தனை என்கை.

(கல்லும்) இத்யாதி$_3$—கரிக்கொள்ளியாகக் கிடந்தவன் பரீக்ஷித்து. கல்லாகக் கிடந்தவள் அஹல்யை என்றவிப$_4$ாக$_3$ம் கண்டு கொள்வது. அஹல்யையின் ஶிலாத்வம் விலக்ஷணத்வாதி$_4$கரண ப$_4$ாஷ்யத்தில் ஸ்ரீப$_4$ாஷ்யகாரராலே உக்தமிறே.

---

a இர-திருவ 84 * செயலறுதி—செயலற்ற நிலை.

§ செயல்மாட்சி—செயல் மாண்ட நிலை.

இத்தால் a 'பொற்றாமரை' b 'அடித்தாமரை' c 'தாமரையன்ன பொன்னாரடி' என்கிறபடியே ப்ராப்யமே ஸாத₄நமென்று உபாயாந்தரங்களில் வ்யாவ்ருத்தியைத் தெரிவிக்கிறது.

"ப்ரபத்₃யே" ஶப்₃தா₃ர்த்த₂ம்

'ப்ரபத்₃யே' என்று—அணையையுடைத்து ஆன ஆற்றுக்கால்போலே உபாயமான d மதுரவாற்றுக்கால் பே₄ாக₃த்தை விளைக்கைக்கு உறுப்பான சேதனனுடைய விலக்காமையைத் தெரிவிக்கிறது.

"சரணௌ ஶரணம்" என்று ப்ராப்யவஸ்துதன்னையே ப்ராபகமாகச் சொல்லுகையாலே, ப்ராப்யம் வேறும், தான் வேறுமாயிருக்கும் உபாயாந்தரங்களிற்காட்டில் வ்யாவ்ருத்தமான உபாயம் இது என்னுமிடத்தை அருளிச்செய்கிறார் (இத்தால்) என்று தொடங்கி.

அநந்தரம் க்ரியாபத₃த்துக்கு அர்த்த₂மருளிச்செய்கிறார் (ப்ரபத்₃யே) என்று தொடங்கி. ஸேதுப₄ங்க₃ஸ்ரோத: ப்ரஸ்ருதி ந்யாயத்தை அருளிச்செய்கிறார் (அணை) என்று தொடங்கி. "ப₂லத்துக்கு வேண்டுவது ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேத₄முமே" என்கிற ஸ்ரீவசநபூ₄ஷண ஸூத்ரத்தை அடியொற்றி அருளிச்செய்கிறார் (விலக்காமை) என்று. இங்கே "பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல் திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல் பொறித்தாய்" (பெரியாழ் 5-4-7) என்ற பாசுரத்தையும் அதன் வ்யாக்₂யாந விஶேஷத்தையும் அநுஸந்தி₄ப்பது.

ப்ரபத்திதான், உபாயஶரீரத்தில் அந்வயியாதே உபாய ஸ்வீகாராத்மகமாகையாலே உபேயஶரீரத்திலும் அந்வயியாதே அதி₄காரிக்கு விஶேஷணமாய், மஹாவிஸ்வாஸாத்மகமான ப்ரதிபத்தி விஶேஷமிறே. இது ஸ்வரூபவிரோத₄

---

a திருப்பாவை 29 b மூன் திருவ 96 c பெரியதிரு 7-3-5 d திருமாலை 36

இவன் நெஞ்சாலே துணிந்தாலிறே உபாயந்தான் கார்யம் செய்வது. வ்யஸநங்கள் வருதல், பேறு தாழ்த்தல், ஈஶ்வரன் ஶோதி₄த்தல் செய்தாலும், துணிந்த சிந்தை குலையாமல் a 'சரணல்லாமல் சரணில்லை' என்றிருக்கிலிறே பேறுள்ளது.

து₃ஷ்கரத்வாதி₃தோ₃ஷ ரஹிதமானதேயாயினும், வஸ்துத: உபாயத்வம் தனக்கின்றிக்கேயிருக்கச்செய்தே ஆபாத ப்ரதீதியிலே உபாயப்ரதிபத்த்யர்ஹமாயிருக்கும். ஸித்₃தோ₄பாய வரணரூபமாய் நிவ்ருத்தி ஸாத்₄யரூபமாய், அதி₄காரி விஶேஷணமாய் ஸ்வரூபாநதிரேகியாயிருக்கிற இந்த ப்ரபத்தி — ஸித்₃த₄ஸாத்₄யோபாய வ்யாவ்ருத்தவேஷையா யிருக்குமாகையால் இதற்கு உபாயத்வம் அஸம்ப₄விதம் என்றபடி. சரமபத₃த்தில் சொல்லுகிற ப₂லத்துக்கு, ப்ரத₂மபத₃த்திற் சொல்லுகிற ஆத்மஜ்ஞாநமும் மத்₄யம பத₃த்திற் சொல்லுகிற அப்ரதிஷேத₄முமிறே வேண்டுவது என்றதாய்த்து.

இத்தால், "விலக்காமையே வேண்டுவதென்னில் அது அநுபபந்நம். ஸுஷுப்த்யாத்₃யவஸ்தை₂களிலே எல்லார்க்கும் மோக்ஷம் கொடுக்கப் ப்ரஸங்கி₃க்கும்" என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் கூறப்பட்டதாம். அதி₄காரமாக அபேக்ஷிதமான ஆத்மஜ்ஞாநம் ஸுஷுப்த்யாதி₃களில் இல்லாமையால் ஸர்வமுக்திப்ரஸங்க₃மில்லை என்றபடி.

உபாயத்தில் துணிவை அருளிச்செய்கிறார் (இவன் நெஞ்சு) என்று தொடங்கி. "தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதி செய்யும் தெளிவுற்ற கண்ணன்" என்றருளிச்செய்தாரிறே ஆழ்வார். "ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவனே" என்று அத்₄யவஸித்து, பின்னை நாட்டார் செயல்கள் கண்டாதல், யுக்த்யாப₄ஸங்கள் கண்டாதல் பிற்காலியாதே நிற்கை என்றபடி.

---

a பெருமாள்திரு 5-1

a 'மனமதொன்றித்துணிவிஞல் வாழ்' என்கிறபடியே இந் நினைவு நெஞ்சாலேயமையுமேயாகிலும் b 'உன்தன் சரணமே சரணமென்றிருந்தேன்' c 'திருவடியே துணையல்லால் துணையிலேன் சொல்லுகின்றேன்' d 'அடியிணை பணிவன்' என்று மூன்றும் நடவாநின்றதிறே. உபாயஸ்வரூபம் புருஷகார கு₃ண விக்₃ரஹங்களோடே கூடிப் பூர்ணமாகிருப்போலே e சிந்தையாலும் சொல்லாலும் செய்கையிஞலும் ஸ்வீகார முண்டாஞல் அதி₄காரி(ர)பூர்த்தியுண்டாகக் கடவது.

ஸ்வஸ்வரூபஜ்ஞாநமும், ப்ராப்யருசியும், உபாயாந்தர நிவ்ருத்தியும் பிறந்தாரடைய f உலகமளந்த பொன்னடிக்கு ஆளாகையாலே பற்றும் அதி₄காரியைக் காட்டிற்றில்லை.

இது தன்னுடைய காயிகத்வாதி₃களை அருளிச்செய்கிருர் (மனமது) என்று தொடங்கி. இந்த ஸ்வீகாரம் த்ரிவித₄கரணத்தாலும் உண்டாஞல் அதி₄காரி(ர)பூர்த்தியென்கிறது. இப்ரபத₃நம் கரணத்ரயத்தாலும் உண்டாகவுமாம்; ஏககரணத்தாலே உண்டாகவுமாம். ப₂லஸித்₃தி₄க்குக் குறையில்லை. அதி₄காரபூர்த்திக்குக் கரணத்ரயமும் வேணும். ப₂லஸித்₃தி₄க்கு ஏககரணமே அமையும். உபாயபூர்த்திக்கு ஸ்ரிய:பதித்வமும், வாத்ஸல்யாதி₃கு₃ணயோக₃மும், தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹமும் அபேக்ஷிதமாயிருக்கிருப்போலே, அதி₄காரபூர்த்திக்குக் கரணத்ரயமும் அபேக்ஷிதமாயிருக்கும் என்றபடி.

இதில் "ஈத்₃ருஶனை நான் அத்₄யவஸிக்கிறேன்" என்று ஜாதி கு₃ண வ்ருத்தாதி₃களாலே ஒருவனை விஶேஷியாமையாலே, இப்ரபத்த்யநுஷ்டா₂நம் ஸர்வாதி₄காரம் என்று தோற்றுகிறது. இதுதன்னை அருளிச்செய்கிருர் (ஸ்வஸ்வரூபஜ்ஞாநமும்) என்று தொடங்கி. இப்பத₃த்திலே

---

a திருமாலை 21 b பெரியதிரு 1-6-9 c பெரியதிரு 7-4-6 d திருவெழுகூற்றிருக்கை e திருவாய் 6-5-11 f பெரியதிரு 5-8-9

பற்றுகிறேன் என்கிற லட்டு (லட்)— a 'வாணுள் சென்னுள் எந்நாள் அந்நாள்' என்று ஶரீராவஸாநத்தளவும் உபாயாந்தரங்கள் கலசாமைக்கும் b நாள்கடலைக் கழிக்கைக்கும் c 'சோம்பரையுகத்தி' என்கிற உகப்புக்கும் d நிரந்தரம் நினைக்கையாகிற பேற்றுக்குமாக e நாடொறும் ஏக சிந்தையனுய்ச் செல்லுமிடத்தை வெளியிடுகிறது.

"அத்₄யவஸிக்கிறேன்" என்று அத்₄யவஸாயாத்மக ஜ்ஞாந விஶேஷத்துக்கு ஆஶ்ரயமான அதி₄காரிஸ்வரூபமும் அநுஸந்தே₄யம். அதாவது திருமந்த்ரத்தில் பத₃த்ரயத்திலும் சொன்ன ஆகாரத்ரயமும் அநுஸந்தே₄யம் என்றபடி.

'ஸக்ருதே₃வ ஹி ஶாஸ்த்ரார்த்த₂: க்ருதோऽயம் தாரயேந்நரம்" "ஸக்ருதே₃வ ப்ரபந்நாய" இத்யாதி₃களிற் சொல்லுகிறபடியே ப்ரபத்தி ஸக்ருத்கரணீயையாயிருக்க, வர்த்தமாநமாகச் சொல்லுகிறது ஏதுக்காக என்ன அருளிச் செய்கிருர் (பற்றுகிறேன் என்கிற லட்டு) *என்று தொடங்கி. அதாவது "லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ₄" "நின்னடியிணை அடைந்தேன்" "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" என்கிறபடியே சொல்லாதே, "ப்ரபத்₃யே" என்று வர்த்தமானமாகச் சொல்லுகிறது. ப்ரக்ருதியோடே யிருக்கிற இவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி உபாயாபாயங்களில் ஏதேனும் ஒன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வம் தலையெடுத்து அநுதாபம் பிறந்து பயப்பட்ட காலத்திலே "ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத்புநஶ் ஶரணம் வ்ரஜேத்" என்கிறபடியே ப்ரபத்தியொழிய அதுக்குப் பரிஹாரம் இல்லாமையாலும், அதுதான் ஸக்ருத்க்ருதமான பின்பு புந: கரணம் ஆகாமையாலும், பூர்வப்ரபத₃நத்தை அநுஸந்தி₄க்கைக்காகக் கொழுந்து படக்கிடக்கிறது என்கை. உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும் காலக்ஷேபத்*

---

a திருவாய் 5-8-3 b திருவாய் 1-6-7 c திருமாலை 38 d திருச்சந்த101
e திருவாய் 5-10-11

துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும். பேற்றுக்குப் பலகாலும் வேணுமென்று நினைக்கில் உபாயம் நழுவும். அதாவது பேற்றுக்கு உறுப்பாகப் பலகாலும் அநுஸந்தி₄க்க வேணுமென்று ப்ரதிபத்தி பண்ணில், ஸஹாயாந்தர ஸம்ஸர்க₃ாஸஹமான ஸித்₃தே₄ாபாயம் சணற்கயிறு கண்ட ப்₃ரஹ்மாஸ்த்ரம் போலே தன்னைக் கொண்டு நழுவும் என்கை. இங்கே "சரணாகதி மற்றோர் சாதநத்தைப்பற்றில் அரணாகாது, அஞ்சனை தன் சேயை—முரணழியக்கட்டியது வேறோர் கயிறு கொண்டார்ப்பதன் முன். விட்ட படை போல விடும்" என்ற ஞானஸாரப்பாசுரமும். "ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்ப₄ாத் ஆஞ்ஜநேயஸ்ய ப₃ந்த₄நே। யதா₂ விக₃லிதா ஸத்₃ய: த்வமோக₄ாऽப்யஸ்த்ர ப₃ந்த₄நா ॥ ததா₂ பும்ஸாமவிஸ்ரம்ப₄ாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா ப₄வேத் ॥" என்ற ஸநத்குமார ஸம்ஹிதா வசநமும் அநுஸந்தே₄யம். "ப்ராய: ப்ரபத₃நே பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந்। ஹஸ்த: ஸ்ரீரங்க₃ப₄ர்த்துர்மாம் அவ்யாத₃ப₄யமுத்₃ரித: ॥" என்று ந்யாஸ திலகத்திலே தே₃ஶிகனும் அருளிச்செய்தாரிறே. நமஸ்காரமும் காயிகப்ரபத்தியிறே. "த்₃வயமர்த்தா₂நுஸந்தா₄நேந ஸஹ ஸதை₃வம் வக்தா யாவச்ச₂ரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே₃ ஸுக₂மாஸ்வ" என்று ஶரண்யன் தானே அருளிச்செய்கையாலும். ஶ்ரிய:பதித்வாதி₃விஶிஷ்டவிஷயமாகையாலே "ஸுஸுக₂ம் கர்த்தும் அவ்யயம்" என்று ஸாத₄நத₃ஶையிலும் இனியதாயிருக்கையாலும் "அவனே உபாயம்" என்கிற நினைவு மாறாதே செல்லக்கடவதென்றதாயிற்று. ஆனால் "நிதி₃த்₄யாஸிதவ்ய:" என்று அஸக்ருதா₃வ்ருத்தி ரூபமான உபாஸநாத்மகஜ்ஞாநத்திற்காட்டில் இதுக்கு வாசியேதென்னில்: அங்கு அநுஷ்டா₂ந விச்சே₂த₃த்தில் ப₂ல விச்சே₂த₃ம் பிறக்கையாலே விதி₄யாயிருக்கும். இங்கு அப்படி வருவதொரு ஸங்கடமில்லாமையாலும், ஸ்மர்த்தவ்ய விஷயஸாரஸ்யத்தாலும் ராக₃ப்ராப்தமாயிருக்கும். பணப₃ந்த₄த்₃யூதத்துக்கும் லீலாத்₃யூதத்துக்கும் உள்ள வாசி, ப₄க்தி ப்ரபத்திகளுக்குண்டிறே. "மந்திரத்தை மந்திரத்தால்

மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம்" என்றாரிறே திருமங்கையாழ்வார். இப்போது மறதியாவது — புந: ஈஶ்வரனை உபாயமாக அநுஸந்தி₄ப்பதொரு அநுஸந்த₄ாநம். ஆகையால் பூர்வார்த்த₄த்திலே இழியாதே அநுப₄விக்கப் பார் என்கிறார். அடியிலே ஈஶ்வரன் கையிலே நம் கார்யத்தை ஸமர்ப்பித்துவிட்டோமாகில், இனி ஸ்வோஜ் ஜீவநத்தைச் சிந்திக்கையாவது பிறர் கார்யத்திலிழிகையிறே. ஸ்வரக்ஷணத்தோடு ஜக₃த்₃வ்யாபாரத்தோடு வாசியில்லையிறே ப்ராப்தியில்லாமைக்கு. ஆகையால் ப₂ல ஸித்₃தி₄க்கு ஸக்ருத்கரணமமையும். காலக்ஷேபாதி₃களுக்கு அஸக்ருத்கரணம் அபேக்ஷிதமாய் இருக்கும் என்றகாய்த்து. அன்றிக்கே, "யாவச்சரீரபாதம் அநுஷ்டி₂யாநின்றாலும் பெறுகிற ப₂லத்தின் கனத்தைப்பார்த்தால் 'ஸக்ருத்' என்கைக்கும் போராதபடிகாண் இருப்பது" என்று எம்பார் அருளிச்செய்வர். அங்ஙனன்றியிலே, ஸஹஸா ஶப்₃த₃த்துக்கு ஸக்ருத₃ர்த₃ேஶமாய், "ஸக்ருதே₃வ ப்ரபந்நாய" என்கிறது. "ஸஹஸைவ ப்ரபந்நாய" என்கிற படி என்று ஆழ்வான் பணிக்கும். அதாகிறது – ஸம்ஸாரத்தில் ப₄யாதிஶயத்தாலும் ப₄க₃வத்₃ விஷயத்தில் ருச்யதிஶயத்தாலும் "ஆஜகா₃ம முஹூர்த்தேந" என்று சொல்லுகிற படியே ஸத்வரனாய்க்கொண்டு ஆஶ்ரயிக்கை. ஆகவித்தால் இழிகிறவன் நேரே அகிஞ்சநாதி₄காரியாகையாலும், எதிரி நேரே ஸர்வஸமாஶ்ரயணீய விஷயமாகையாலும் ப₂லாவ்யபி₄சாரியான உபாயாத்₄யவஸாயத்தை ஸ்வாநுஷ்டா₂நமாக்கிற்றாய் நின்றது.

ஆக, பூர்வார்த்த₄த்தாலே — அத்₄யவஸாயாத்மக ஜ்ஞாந விஶேஷத்தையும் அதுக்கு உபேயாத்₄யவஸாயத்திற் காட்டில் வ்யாவ்ருத்தியையும், அந்த உபாயத்துக்கு ஸாத்₄யோபாய வ்யாவ்ருத்தியையும், அந்த ஸித்₃தே₄ாபாயத்தில் இழிகைக்கு விரோதி₄யான பூர்வாபராத₄ ப₄யத்துக்கு

உத்தரவாக்யார்த்த2ம்

a "திருமாலைக் கைதொழுவர்" b "அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை" என்கிறபடியே புருஷகாரம் முன்னாகப்

நிவர்த்தகமான புருஷகார விஶேஷத்தையும் சொல்லிற்றாயிற்று. ஆக பூர்வவாக்யத்துக்கு அர்த்த2மருளிச்செய்தாராயிற்று.

இனி உத்தர வாக்யத்துக்கு அர்த்த2ம் அருளிச் செய்வதாக உபக்ரமிக்கிறார் (திருமாலை) என்று தொடங்கி. உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது என்றபடி. ப்ராப்யாந்தரத்துக்கன்று என்கை. பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதி3தமான ஸாத4நம் ப2லசதுஷ்டய ஸாத4ாரணமாகையாலே கீழ்ப்பண்ணின ப்ராபகவரணம் ப்ராப்யாந்தரத்துக்கன்று என்னுமிடம் சொல்லுகை, இப்போது ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு ப்ரயோஜநமென்றபடி. உபாயாந்தரங்களை விட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாப்போலே உபேயாந்தரமான ஐஶ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்தி2க்கிறது. அதாவது, உபாயவரணம் பண்ணுகிறவளவில் அநந்யஶரணத்வரூபமான ஸ்வரூபத்துக்கநுகு3ணமாக கர்மஜ்ஞாநப4க்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டுச் சரமமான ஸித்3தே4ாபாயத்தைப்பற்றினாப்போலே, உபேயப்ரார்த்த2னை பண்ணுகிறவளவிலும் அநந்ய போ4க3த்வரூபமான ஸ்வரூபத்துக்கநுகு3ணமாக உபேயாந்தரமான ஐஶ்வர்யகைவல்யங்களை விட்டுச் சரமமான ப்ராப்யத்தை அர்த்தி2க்கிறது என்கை. உபேயதயா வரணமும் உபாயதயா வரணமுமிறே இரண்டுக்கும் க்ருத்யம். உபேயத்வேந வரித்தபோது உபாயாபேக்ஷையுண்டு. உபாயத்வேந வரித்தபோது உபேயாபேக்ஷையுண்டு. ஆகையால் உப4யமும் அபேக்ஷிதமாகக்கடவது. உபேயத்வவரணமாவது—ஈஶ்வரன் திருவடிகளிலே கைங்கர்யத்தையே

---

a முதல்-திருவ 52 b திருவாய் 1-5-7

பற்றி ப்ரயோஜநங்களைக் கொண்டகலாதே. அவற்றை யொழிந்து ௨ ஒண்டொடியாள் திருமகளும் அவனுமான சேர்த்தியிலே அடிமையே பேறென்று கீழ்ச்சொன்ன உபாய ப$_{4}$லத்தைக் காட்டுகிறது பிற்கூறு.

உபேயமாக அத்$_{4}$யவஸிக்கை. உபாயத்வவரணமாவது அவன் திருவடிகளை உபாயமாக அத்$_{4}$யவஸிக்கை. அத்$_{4}$யவஸாய த்$_{3}$வயமும் இவ்வதி$_{4}$காரிக்கு அபேக்ஷிதம். அநந்யஸாத$_{4}$நத்வ ஸித்$_{3}$தி$_{4}$க்கு உபாயாத்$_{4}$யவஸாயம் வேணும். அநந்யபோ$_{4}$கத்$_{3}$ வஸித்$_{3}$தி$_{4}$க்கு உபேயாத்$_{4}$யவஸாயம் வேணும். உபாய விஶேஷாத்$_{4}$யவஸாயம் ப்ரயோஜநாந்தரபரனுக்கும் உண் டாகையாலே தத்$_{3}$வ்யாவ்ருத்திஸித்$_{3}$தி$_{4}$க்கு உபேயாத்$_{4}$ய வஸாயம் வேணும். ஸாத$_{4}$கனுக்கும் உபேயாத்$_{4}$ய வஸாயம் உண்டாகையாலே தத்$_{3}$வ்யாவ்ருத்திஸித்$_{3}$தி$_{4}$க்கு உபாயாத்$_{4}$யவஸாயம் வேணும். "அந்தரிக்ஷக$_{3}$த: ஸ்ரீமாந்' "ஸது நாக$_{3}$வர: ஸ்ரீமாந்" என்கிறபடியே உபாயோபேயாத்$_{4}$ யவஸாயங்களாகிற மஹதை$_{3}$ஶ்வர்யம் இவ்வதி$_{4}$காரிக்கு அபேக்ஷிதம். அத்தைப்பற்றவிறே "முமுக்ஷுர்வை ஶரண மஹம் ப்ரபத்$_{3}$யே" என்று ஶ்ருதமாயிற்றதும் என்றபடி. இது தன்னை அருளிச்செய்கிறார் (அவற்றை ஒழிந்து) என்று. (ஒண்டொடியாள்) இத்யாதி$_{3}$—ஐங்கருவிகண்டவின்பம் தெரி வரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்—ஒண்டொடி யாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டு" என்றருளிச்செய்தாரிறே ஆழ்வார். ஐங்கருவி கண்டவின் பம்-அசித்தத்வாநுப$_{4}$வமான ஐஶ்வர்யாநுப$_{4}$வம். சிற்றின் பம்-அணுவான சித்தத்வத்தைப்பற்றி வருகிற போ$_{4}$க$_{3}$மான கைவல்யம். பூர்வக$_{2}$ண்ட$_{3}$த்திலர்த்த$_{2}$ம் ப$_{2}$லாந்தரங்களுக்கும் ப$_{2}$லப்ரத$_{3}$மாகையாலே. "இவன் நம்மை உபாயமாகப்பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டுபோகிறானாகாதே" என்று ஈஶ்வரஹ்ருத$_{3}$யம் கடல் கலங்கினாப்போலே கலங்கும். உத்தரக$_{2}$ண்ட$_{3}$த்தாலே "உன்னையே உபாயமாகப் பற்றி

---

௨ திருவாய் 4-9-10

உத்தரவாக்ய ப்ரத₂மபத₃ார்த்த₂ம்

'ஸ்ரீமதே' — பெரியபிராட்டியாரோடே கூடியிருக்கிறவனுக்கு. a 'நீ திருமாலே' என்னும்படி "மாம், அஹம்" என்கிறவிடத்தில் ஸ்ரீ ஸம்ப₃ந்த₄த்தை வெளியிடுகிறது.

ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு போவான் ஒருவனல்லன்" என்று, ஈஶ்வரன் "மாஶுச:" என்று சேதநன் கண்ணநீரைத்துடைத்தாப்போலே, சேதநனும் ஈஶ்வரனை "மாஶுச:" என்கிறான் என்றதாயிற்று. இப்படித் தோற்றின ஶரணாகதி "தாவதா₃ர்த்தி: ததா₂ வாஞ்சா₂ தாவந் மோஹ: ததா₂ஸுக₂ம்" இத்யாதி₃களிற்படியே ஸகல ப₂ல ஸாத₄நமாகையாலும், "தத₃ந்ய: கோ மஹோதா₃ர:" என்கிறபடியே பரமோதா₃ரனை ஶரண்யன் அர்த்தி₂தார்த்த₂ பரிதா₃நதீ₃க்ஷிதனாய் "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்" என்னும்படி நிற்கையாலும், இங்கு என்ன ப₂லத்துக்காக ப்ரபத்தி பண்ணுகிறதென்கிற அபேக்ஷையிலே, மஹோதா₃ரனை ஶரண்யனுக்கும், ஸர்வோத்க்ருஷ்ட விஷயமான இவ்வஶீகரண விஶேஷத்துக்கும், ஶேஷைகரஸனான தன் ஸ்வரூபத்துக்கும் அநுரூபமான ப₂ல விஶேஷத்தை உத்தரக₂ண்ட₃ம் "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே ஸமஸ்த விரோதி₄ நிவ்ருத்தி பர்யந்தமாக ப்ரார்த்தி₂க்கிறது. இத்தாலே அநந்யப்ரயோஜநத்வமும் ஸித்₃தி₄க்கிறது என்னவுமாம்.

இனி இவ்வாக்யத்துக்கு ப்ரதிபத₃ம் அர்த்த₂மருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி ப்ரத₂மபத₃த்துக்கர்த்த₂மருளிச்செய்கிறார் (ஸ்ரீமதே) என்று தொடங்கி. இங்கும் ஸ்ரீஶப்₃த₃த்துக்குப் பூர்வவாக்யத்தில் சொன்ன வ்யுத்பத்தித்₃வயமும், அதில் அர்த்த₂மும், மதுப₃ர்த்த₂மான நித்யயோக₃மும் அநுஸந்தே₄யம். இரண்டிடத்திலும் நித்ய

---

a

முன்னில் ஸ்ரீமச்ச2ப்3த3ம் சேர்க்கைக்குறுப்பான சேர்த்தியைச் சொல்லிற்று. கட்டிலும் தொட்டிலும் விடாத தாயைப்போலே அகாரதத்3விவரணங்களில் உண்டான லக்ஷ்மீஸம்ப3ந்த4த்தை விஶத3மாக்குகிற இந்த ஸ்ரீமச்ச2ப்3த3ம் அடிமையை வளர்க்கைக்குக் கூடியிருக்கும்படியைக் காட்டுகிறது.

தி3வ்யாத்ம ஸ்வரூபத்தை விடாதே a திருவில்லாத் தேவரில் தான் b நின்ற பக்கத்துக்குப் பெருமையையுண்

யோக3ம் ஒத்திருக்கச்செய்தே அவ்வவ கு3ணாநுகு3ணமான இவளிருக்கும் இருப்பை அருளிச்செய்கிறார் (முன்னில்) என்று தொடங்கி. அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும், அவன் ப்ராப்யனுமிடத்தில் தான் ப்ராப்யையுமாய்க் கைங்கர்யவர்த்3த4கையுமாயிருக்கும். அதாவது—அவன் சேதநர்க்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளுக்கு உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க3த்தை ஸஹியாமையாலே தான் உபாயபா4வத்தில் அந்வயமின்றிக்கே, ஸாபராத4சேதநருடைய அபராத4ங்களைப் பார்த்து அவன் சீறுமளவில், அத்தை ஸஹித்து அங்கீ3கரிக்கும்படியாகப் பண்ணும் புருஷகாரமாயிருக்கும். அவன் சேதநர்க்குக் கைங்கர்ய ப்ரதிஸம்ப3ந்தி4யாய ப்ராப்யனுமிடத்தில், அவனோபாதி கைங்கர்ய ப்ரதிஸம்ப3ந்தி4யாய்க்கொண்டு தான் ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப்படுத்தி உகப்பிக்கையாலே, கைங்கர்ய வர்த்3த4கையுமாயிருக்கும் என்கை. ஶேஷித்வப்ரதிஸம்ப3ந்தி4 ஒரு மிது2நமானவோபாதி, கைங்கர்யப்ரதிஸம்ப3ந்தி4யும் ஒரு மிது2நமாயிறே இருப்பது என்றபடி. மிது2நஶேஷித்வம் ஸ்வரூபமானால் மிது2ந கைங்கர்யமிறே ஸ்வரூபப்ராப்தம்.

பிராட்டியின் ஆகாரத்ரயத்தை விஶத3மாக அருளிச் செய்கிறார் (தி3வ்யாத்ம ஸ்வரூபத்தை) என்று தொடங்கி.

---

a நான்-திருவ 53 b நான்-திருவ 62

டாக்கி ஸ்வாமினியாய் a 'தன்னுகத் திருமங்கை' என்னும்படி மார்பைப்பற்றி ஸத்தைபெற்று b 'திருமார்பில் மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியேயடை' என்று மார்பைப் பார்த்துக் காலேக்கட்டலாம்படி புருஷகாரமாய் c 'திருமாமகளிரும் தாம் மலிந்திருந்து' என்னும்படி படுக்கையிலே ஒக்கவிருந்து d பிரியாவடிமையைக்கொண்டு ப்ராப்யையாய் மூன்ருகாரத் தோடுகூடின ஜ்ஞாநத₃ஶையில் தன்னேப்போலே அநந் யார்ஹராக்கி வரணத₃ஶையில் தன்னேப்போலே அநந்ய ஸாத₄னராக்கி ப்ராப்யாவஸ்தை₂யில் தன்னேப்போலே அநந்ய போ₄க₃ராக்குகையாலே e 'சார்வு நமக்கு' என்னும்படியாயிற்று இவளிருப்பது. f 'சயமேயடிமை தலேநின்ருர்' g 'திருமாற் கரவு' h 'மலிந்து திருவிருந்த மார்பன்' என்னும்படி செய்கிற வடிமை அல்லாதார்க்கும் ஸித்₃தி₄த்து வர்த்தி₄த்து ரஸிப்பது— i 'கோலத்திருமாமகளோடு' என்கிற சேர்த்தியிலே ஆசைப் பட்டாலிறே. j காதல்செய்து k பொன்னிறங்கொண்டெழா நிற்கத் தனித்தனியே விரும்புகையாலேயிறே தங்கையும் தமையனும் l 'கொண்டுபோந்து கெட்டான்' m 'கதறியவளோடி'

அடிமைதான் ஸித்₃தி₄ப்பதும், வளர்வதும், ரஸிப்பதும் அச்சேர்த்தியிலேயிறே. இத்தையருளிச்செய்கிருர் (சயமே) என்று தொடங்கி. திவ்யத₃ம்பதிகளில் ஏகதே₃ஶமாத்ரத் தைப் பற்றுவார்க்கு ஏற்படும் அநர்த்த₂த்தை ஸத்₃ருஷ்டாந்த மாக அருளிச்செய்கிருர் (தனித்தனியே) என்று தொடங்கி. (தங்கை)ஶூர்ப்பணகை₂. (தமையன்) இராவணன் என்றபடி. இவ்விஶிஷ்டத்திலே ஒன்றைப்பிரித்து ப்ராப்யமாக நினேக்கு மன்றும், ப₂லாப₄ாவமாத்ரமன்றிக்கே ஸ்வநாஶத்தையும் ப₂லிப்பிக்குமாகையாலே. "தன்னே நயந்தாளை" என்று விஶேஷணவ்யதிரேகேண விஶேஷ்யமாத்ரத்தை ப்ராப்ய

---

a நாச்சியார்திரு 8-4 b பெரிய-திரு 6-9-6 c திருவாய் 6-5-8 d திருவாய் 5-8-7 e மூன்-திருவ 100 f திருவாய் 8-10-2 g முதல் திருவ 53 h மூன்-திருவ 57 i திருவாய் 6-9-3 j பெரிய-திரு 2-2-2 k பெரியதிருமடல் 145 l பெரிய-திரு 10-2-3 m பெரியதிரு 3-9-4

என்னும்படி தலைசிதறி முகமும் கெட்டது. a 'அவன் தம்பியே சொன்னான்' என்னும்படி சேர்த்தியிலே நினைவாயிறே b செல்வவிபீடணன் c நீடரசுபெற்று d அல்லல் தீர்ந்தே னென்னும்படி வாழ்ந்தது.

நாராயண ஶப்₃தா₃ர்த்த₂ம்

'நாராயண' பத₃ம் அடிமை கொள்ளுகிறவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. e எழில்மலர் மாதரும் தானு மான சேர்த்தியிலே இன்பத்தை விளைக்கிறாப்போலே f 'வீவி லின்பம் மிக வெல்லை நிகழ்ந்த' என்கிறபடியே ஸ்வரூபகு₃ண விக்₃ரஹ விபூ₄திகளோடே கூடி ஆனந்த₃த்தை விளைத்து அடிமையிலே மூட்டுமவனுடைய பூர்த்தியைக் காட்டுகிறது.

